குடும்பத்துடன் களிக்க...

கல்கி

KALKI
23.10.2005
ரூ.7.00
96 பக்கங்கள்



நானா? வில்லனா?

ஷாப்பிங் ஸ்பெஷல்!



புத்தாடை சூடி
தீபம் ஏற்றும்
திருநாளே...
உண்மை உழைப்பு உயர்வு
சரவணா செல்வரத்னம்
டெக்ஸ்டைல்ஸ்
75, உஸ்மான் ரோடு, ரங்கநாதன் தெரு எதிரில், தி.நகர்



அடுத்த இதழில்...

விஜயகாந்த் பேசுகிறேன்!

- **கேப்டன்** எழுதும் மண் நேசத் தொடர்


வேறு விஷயமே இல்லையா?

✉ 'இரவில் சென்னை' இதயத்தை நடுங்க வைத்துவிட்டது!
உசிலம்பட்டி,
எஸ். கருணையானந்தம்.

✉ வியாபார இடைஞ்சல்களுக்கு அடிபணியாமல் தலை நிமிர்ந்து நடக்கும் தரமான பத்திரிகை கல்கி 'ஒண்ணே ஒண்ணுதான்' என்கிற வாசகர் குடும்பத்தின் கருத்துக்கு நங்க எல்லோரும் ஜோரா போடு றோம் 'ஓ!'
சென்னை - 17, ஆர். ரங்கநாதன்.

✉ 'அட்லீஸ்ட் வீட்ல சாம் பிராணிப் புகையாவது போடு வீங்களா, இல்லையா?' என்ற கேள்வியை மட்டும் படித்திருந் தாரானால் நிச்சயம், அன்புமணி ராமதாஸின் காதில் 'புகை' கிளம்பி







யிருக்கும். போட்டுத்தாக்குங்க!
குடியாத்தம்,
ஆர்.கே. ராமு.

✉ 'யாராக இருந்தாலும் சமூகப் பொறுப்புணர்வு இல்லாமல் படம் எடுக்கக்கூடாது' என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்ட நடிகை ரேவதிக்கு மனமார்ந்த பாராட்டு!
ஆரணி, எஸ். வெங்கடேசன்.


✉ வி. உஷாவின் 'இருட்டை அகற்றும் நட்சத்திரம்!' - பலவிதமான சூழல்களிலிருந்து அமைதியாக வாழக் கற்றுக் கொண்டால் அந்த வாழ்க்கை தானே மேலோங்கி நிற்கும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.
சென்னை, ஜே. துரைராஜ்.

✉ 'நியூ' படத்துக்குத் தடை விதித்தமைக்கு சிம்பு வருத்தப்படுவதில் ஆச்சரியமில்லை. காரணம் சிம்புவும் எஸ்.ஜே. சூர்யாவும் ஒரே அலைவரிசையில் அல்லவா உள்ளனர்!
சேலம், சியாமளா ஈஸ்வரன்.

✉ சிம்பு தன் பேட்டியில், 'காதலர்கள் திருமணத்துக்கு முன்பே உறவு வைத்துக் கொள்கிறார்கள். இதைத்தான் சினிமாவில் காட்ட விரும்புகிறேன். இதற்குத்தான் கிளாப்ஸ் கிடைக்கும்' என்கிறார். சினிமாவில் இன்றைய இளைய தலைமுறையின் போக்கு கவலை தருகிறது. அது அபாயகரமானது. இதைத் தவிர சினிமா எடுக்க வேறு விஷயமே இல்லையா?
பெங்களூர், எஸ்.வி. நாகராஜ்.

✉ எப்படியாவது வேலையை வாங்கி விட வேண்டும் என்ற வெறியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள், தீர விசாரிக்காமல் டுபாக்கூர் கம்பெனிகளில் பணத்தைக் கட்டி ஏமாந்து போகும் அவலம் கவலை அளிக்கிறது. நிறுவனங்களை குறை கூறாமல், தீர ஆலோசித்து, முடிவெடுத்துப் பின்னர் வேலைக்குச் சேரும் தகுதியை

வாரம் ஒரு வாசகர்!



✉ சிம்புவின் பேட்டியிலிருந்து, வல்லவன் படமும் கலக்கும் எனத் தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது. சிம்புவின் பேட்டி அவரது தன்னம்பிக்கையை உணர்த்தியது.

ஓசூர்,
சி. ராஜகோபால்.

படித்த இளைஞர் - இளைஞிகள் வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

திருச்சி, இ. முகம்மது உசேன்.

✉ 'தண்ணீர் மாயாவி' கட்டுரையை படிக்கப் படிக்கப் பிரமிப்பாக இருந்தது. உயிரைத் துச்சமாகக் கருதி தண்ணீரில் குதித்து 150 பேரை உயிரோடு காப்பாற்றியிருக்கும் ஆறுமுகம் உண்மையில் கலியுக பிரம்மாதான்.

சென்னை - 42, கே.எஸ். கோவர்த்தனன்.

✉ காங்கேயம் சேரன் கலை அறிவியல் கல்லூரியின் கேட்டரிங் துறையினர் (இளமை கல்கி), தமிழக கிராம உணவை நாடு முழுவதும் அதுவும் நட்சத்திர உணவு விடுதிகள் வரை கொண்டு சென்று பிரபலப்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது.

மொரட்டுப்பாளையம், விஜயஸ்ரீ இராஜேஸ்வரன்.

✉ 'ஈகோ' என்ற கயிற்றை வெட்டினால்தான் ஒருவர் தான் இருக்கும் இடத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறிச் செல்ல முடியும் என்ற கனந்தாஜியின் விளக்கம் அருமை.

சென்னை - 32, கே.வி. ராமன்.

✉ 'கண்ணீர் துடைப்பல்ல, கண் துடைப்பு' என்ற வாசகமே மொத்த தலையங்கத்தின் பொருளைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டியது. 'பொருளாதார மேதை' என்று பெயரெடுத்த பிரதமருக்கு இத்திட்டம் பற்றியக் குளறுபடிகள் புரியாமல் போனது ஆச்சரியம்தான்.

விளாத்திகுளம், அ. அப்துல்காதர்.

✉ குஷ்புவின் கற்பு பற்றிய கருத்து குறித்துப் பல பெண்களின் விமர்சனம் கண்டேன். அவருடைய கருத்து ஒருபுறம் இருக்கட்டும். நம்மைப் பார்த்து ஒருவர், 'நீ கெட்டவன்' என்றவுடனே நாம் கெட்டவர்களாகிவிடப் போவதில்லை. ஆனால் இந்தப் பிரச்னைக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பூதக் கண்ணாடி பிடிக்கப்பட்டிருக்கிறதே. இந்தப் பூதக்கண்ணாடி எது? அதைப் பிடித்திருக்கும் கை யாருடைய கை? இதைப் புரிந்துகொள்ளாத வரை தமிழன் வாழ்வு மட்டைதான்!

கரூர், கவிதா. கிருஷ்ணசாமி.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-


Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



எங்கள் எம்.எஸ்!

வி.ஐ.பி.கள் மனம் நெகிழ்கிறார்கள்!









சொந்தங்கள் வாழ்க!

கிரெடிட் கார்ட் பகீர்!


பிக்பாக்கெட் தொந்தரவுகளில்லை; பணம் இருக்கிறதா இல்லையா என்று நொடிக்கொருமுறை சட்டைப் பாக்கெட்டைத் தொட்டுத் தொட்டு பார்த்துக் கொள்ள வேண்டாம்! 'சல்' என்று ஒரு தேய்ப்பு! பார்ஸல் உங்கள் கையில்... கூவிக் கூவி விற்கப்படும் கிரெடிட் கார்டுகள் நம் வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டது.

நல்லது. ஆனால் இந்தப் பாதுகாப்பான கிரெடிட் கார்டுகளிலும் ஹைடெக் திருடர்கள் தங்களது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டனர். 'இதென்னடா புதுத் தலைவலி' என்று கிரெடிட் கார்டு ஆசாமிகள் கையைப் பிசைந்து நிற்கின்றனர்.

கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி எது மாதிரியான தகிடுதத்தங்கள் நடக்கின்றன? எப்படியெல்லாம் பாதுகாக்கலாம்?

இந்தியாவில் நடக்கும் பெரும்பாலான கிரெடிட் கார்டு முறைகேடுகள் உபயோகிப்பாளரின் அறியாமையால் நடக்கின்றன. 'குட் ஈவினிங் சார்... வி ஆர் காலிங் ஃப்ரம் ஒசிபிசி பேங்க்' என்று எப்போர்ப்பட்ட இனிக்கும் குரல் உங்களை மயக்கினாலும் கிரெடிட் கார்டு பற்றிய தகவல்களை மறுமுனைக்கு தரவே கூடாது. எந்த விண்ணப்பப் படிவத்திலும் கிரெடிட் கார்டு விவரங்களை மறந்தும் நிரப்பக் கூடாது. அதேபோல கிரெடிட் கார்டின் பாஸ்வேர்டான 'PIN' நம்பரைக் கார்டின் பின்புறம் எழுதி வைக்கவே கூடாது. கார்டை நீங்கள் தவற விடும் பட்சத்தில் கிரிமினல்களுக்கு மிகவும் வசதியாக அமைந்து விடும்.

மேற்கூறிய இரு வழிகளாலும் தகவல்களைத் தெரிந்து கொள்ளும் திருடர்கள் சம்பந்தப்பட்ட வங்கிக்கு சிம்பிளாக ஒரு தொலைபேசி அழைப்பில கார்டின் தகவல்களைக் கூறி முகவரியை மாற்றி விடுகிறார்கள். மேட்டர் ஓவர். இதைக் கண்காணிக்க வேண்டுமென்றால், மாதா மாதம் உங்களுக்கு வங்கியிலிருந்து வரும் பில்களைக் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுப் பரிசோதிக்க வேண்டும்.



மோசடியின் அடுத்த கோல்மால் அம்சம், 'விசேஷக் கருவிகளைப் பயன்படுத்தி உங்கள் கிரெடிட் கார்டுகளிலுள்ள தகவல்களைப் படிக்கவும், முற்றிலும் அழிக்கவும் செய்கிறார்கள். இவர்களைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் போலீஸ் திணறிக்கொண்டிருக்கிறது. கவலைப்படாதீர்கள். இந்த ஹைடெக் குற்றங்களெல்லாம் இனிமேல்தான் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விருக்கின்றன. கைக் குழந்தையைவிட உங்கள் கிரெடிட் கார்டுகள் மீது கண்ணும் கருத்துமாக இருக்க கூட்டுப் பிரார்த்தனை செய்யுங்க!

\- செந்தில்





"ஏழு கட்சி என்ன... எழுபது கட்சிக் கூட்டணி வந்தாலும் எங்களை அசைக்கக்கூட முடியாது" - இது சமீப காலமாக அ.தி.மு.க தரப்பிலிருந்து சீறி வரும் வீரவசனம்... இப்படி ஆளுங் கட்சியினர் பேசி வருவதற்கு தன்னம்பிக்கை காரணமல்ல... தி.மு.க கூட்டணியின் 'உறுதி' கொடுக்கும் நம்பிக்கைதான் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

இதற்கு வலு சேர்ப்பது போல தி.மு.க தலைமையிலான கூட்டணிக்குள் அவ்வப்போது புகைச்சல் ஏற்படுவதும், இலேசாக அடங்குவது போல இருந்துவிட்டு, திடீரென பீறிட்டு எழுவதும் வாடிக்கையாகவே இருக்கிறது. சட்டமன்றத் தேர்தல் பரபரப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இப்போது ஒவ்வொரு பூனைக்குட்டியாக வெளிவந்துகொண்டே இருக்கிறது. தி.மு.க, காங்கிரஸ், பா.ம.க, ம.தி.மு.க, சி.பி.ஐ, சி.பி.எம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்ற ஏழு அங்கத்தினர்களும் தனித்தனியே அஜெண்டா வைத்திருப்பது அவரவர் மேடைப் பேச்சுகள், பேட்டிகள் மூலம் வெளிச்சத்துக்கு வந்தவண்ணம் உள்ளன.



தி.மு.க Vs காங்கிரஸ்

"காங்கிரஸ்காரர்கள் எப்போதுமே நாடாளுமன்றத் தேர்தலில் ஒத்துழைப்பது போல சட்டமன்றத் தேர்தலில் ஒத்துழைக்க மாட்டார்கள்" என்பது தி.மு.கவினர் அவ்வப்போது பேசிவரும் கருத்து. இதற்கு 'ஆமாம்' போடுவது போல நாற்பதுக்கு நாற்பது ஜெயித்த போது காங்கிரஸின் சர்வகோஷ்டிகளும் இணைந்து பணியாற்றிவிட்டு, தற்போது சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வதும், தலைக்குத் தலை 'மாநிலத்திலும் கூட்டணி ஆட்சி' பற்றிப் பேசி வருவதும் தி.மு.கவை கடுப்பாக்கியுள்ளது. இதுதவிர காங்கிரஸுக்குள் தி.மு.கவுக்கு எதிராக 'ஜெயா காங்கிரஸ்' உருவாகி வருவதாக தி.மு.கவினர் அவ்வப்போது குறைபட்டுக் கொள்வார்கள். இதுவும் சரியே என்பதுபோல இளங்கோவன், திண்டிவனம் ராமமூர்த்தி, விநாயகமூர்த்தி போன்றோரது பேச்சுகள் அமைந்துவிட்டன.


குறிப்பாக, "எங்கள் கட்சியின் கோஷ்டிப் பூசலில் சட்டைதான் கிழிக்கப்படும். கொலை நடக்காது" என்று தா.கிருஷ்ணன் கொலை பற்றிய இளங்கோவனின் மறைமுகக் கிண்டல், "ராஜீவ்காந்தியின் கொலையைக் கொண்டாடியவர்களுடன் கூட்டு சேர வேண்டிய நிலை காங்கிரஸுக்கு ஏற்பட்டு விட்டது" என்ற திண்டிவனம் ராமமூர்த்தியின் விமர்சனம் போன்றவை தி.மு.க தரப்பை ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளன. இவையெல்லாம் தொகுதி பங்கீட்டின்போது கடுமையாக எதிரொலிக்கும் என்பது பலரது எதிர்பார்ப்பு. ஒரு வேளை தொகுதி ஒதுக்கீடு சுமுகமாக


சலசலக்கும் கூட்டணி..!

சமாளிப்பாரா கலைஞர்?

முடிந்தாலும் பிரசாரத்தின்போது வாசன் தவிர மற்ற தலைவர்கள் எப்படி ஒத்துழைப்புத் தருவார்கள் என்பது தி.மு.க வின் தூக்கத்தைக் கெடுத்து வருகிறது.









தி.மு.க Vs பா.ம.க

“வெட்கம்... மானம்... ரோஷம்... சூடு... சொரணை உள்ள நான் கூட்டணி மாற மாட்டேன்” என்று ராமதாஸ் வெளிப்படையாகப் பேசிய பின்னரும் கூட பா.ம.கவுக்கு அ.தி.மு.க மீது மறைமுகக் காதல் இருப்பதாகவே தி.மு.கவில் பலர் எண்ணுகிறார்கள். இந்த மதில்மேல் பூனை கதை தி.மு.கவின் பி.பியை எகிற வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் “விடுதலைச்சிறுத்தைகளை தி.மு.க கூட்டணிக்குள் கொண்டு வருவேன்” என்று ராமதாஸ் தன்னிச்சையாகப் பேசியிருப்பது தி.மு.கவை ஆத்திரப்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே சேதுசமுத்திர விழாப் புறக்கணிப்பு, தி.மு.க மேடைகளுக்குத் தாமதமாக வருவது, முக்கியக் கூட்டங்களுக்குத் தனது பிரதிநிதியை அனுப்புவது, ராமதாஸ் டெல்லி தனிப் பயணம் என்று ஒவ்வொன்றையும் சந்தேகக் கண் கொண்டு பார்த்து வரும் தி.மு.க, டாக்டர் ராமதாஸ் தனது எண்ணங்களை தனது இரண்டாம் கட்சித் தலைவர்கள் மூலம் மேடையில் முழங்கி வருவதாகவும் சந்தேகப்படுகிறது. உதாரணமாக, வன்னியர் சங்க மேடை ஒன்றில் தி.மு.க தலைமையை அர்ச்சித்து அக்கட்சியின் எம்.எல்.ஏ குரு பேசியதை தி.மு.க எடுத்துக்காட்டுகிறது. இது தவிர, “நாங்கள் கைகாட்டுபவரே அடுத்த தமிழக முதல்வர்” என்ற அன்புமணியின் வீராப்புப் பேச்சு போன்றவற்றை தி.மு.க அவ்வளவாக ரசிக்கவில்லை.



தி.மு.க Vs ம.தி.மு.க

சமீபகாலமாக ம.தி.மு.க மேடைகளில் கலைஞர் மீதும், தி.மு.க மீதும் மறைமுக அர்ச்சனை அம்புகள் தொடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சன் டி.வியில் வை.கோவின் இருட்டடிப்பு, தற்போது கராத்தே தியாகராஜன் விவகாரம் மூலம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. ‘அவருக்குத் தரும் முக்கியத்துவம் ஏன் வைகோவுக்குத் தரப்படவில்லை



ஷாப்பிங் செய்யும்முன்...

தீபாவளிக்கான முன்னேற்பாடுகளில் நாமெல்லாம் இருக்க, பாகிஸ்தான்- காஷ்மீரில் பயங்கர நிலநடுக்கம். ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து, வீடிழந்து, உடைமை இழந்து உருக்குலைந்து கிடக்கின்றனர். அவர்களின் துயர்துடைக்க உதவுவது நமது கடமையும்கூட. பண்டிகைக்கான முதல் செலவு, ஏன் நமது சகோதரர்களுக்கு உதவுவதாக இருக்கக் கூடாது? யோசிப்போம்... செய்வோம்...!

- (ஆர்)

என்பது மதி.மு.கவினரின் கேள்வி.' 'தற்போதைய கராத்தே நியூஸ், உயர்மட்ட அ.தி.மு.கவுக்கு எதிரானது, கராத்தேவுக்குத் தரப்படும் பப்ளிசிடி அல்ல' என்பதை ம.தி.மு.கவினர் ஏற்க மறுக்கின்றனர். இந்தப் பனிப்போர் வைகோவின் நூல் வெளியீட்டு விழாவின்போது வந்த கலைஞரை வரவேற்க ம.தி.மு.கவினர் காட்டிய 'ஆர்வம்' மூலம் வெளிப்பட்டது. "இலங்கை அரசுக்கு ராணுவ உதவி செய்யக்கூடாது' என்ற தனது கருத்துக்கு தி.மு.க தரப்பிலிருந்து எதிர்பார்த்த அளவுக்கு ஆதரவு கிட்டாதது வைகோவைச் சிந்திக்க வைத்துள்ளது" என்கிறார் அவருக்கு நெருக்கமான ஒருவர். கூட்டணியில் நான்காவது இடந்தான் நமக்கு என்று முடிவாகிவிட்ட நிலையில் தொகுதி ஒதுக்கீடு எப்படி இருக்குமோ என்பதுதான் ம.தி.மு.கவினரின் தற்போதைய கிலி.

தி.மு.க Vs கம்யூனிஸ்டுகள்

கம்யூனிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை மத்திய அரசை எதிர்த்து தாங்கள் போராடும்போது தி.மு.க தலைமை சுத்தமாகக் கலந்து கொள்வதில்லை என்ற வருத்தம் ரொம்ப இருக்கிறது. இன்னொரு வருத்தம் என்னவென்றால், தொகுதி ஒதுக்கீட்டின்போது தங்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளில், அங்குள்ள தி.மு.க அதிருப்தியாளர்கள் சுயேட்சையாகக் களமிறங்கி வாக்குகளைப் பாதிப்பதுதான்! இந்தக் குறைபாடு சரி செய்யப்பட வேண்டும் என்பது இரு கம்யூ. கட்சிகளின் எதிர்பார்ப்பு.

காங்கிரஸ் Vs பா.ம.க

தமிழகத்தின் மூன்றாவது பெரிய கட்சி எது என்ற போட்டியில் காங்கிரசும், பா.ம.கவும் கடுமையாக இறங்கியுள்ளன. இது இருதரப்பு மேடைகளிலும் வெட்டவெளிச்சமாகி வருகிறது. காங்கிரஸ் தி.மு.கவிடம் வைக்கும் முதல் நிபந்தனையே தொகுதி ஒதுக்கீட்டில் பா.ம.கவை விட குறைந்தது பத்துத் தொகுதியை கூடுதலாக தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பதுதான். பா.ம.கவோ - தங்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள் காங்கிரசுக்குக் கொஞ்சமும் சளைக்காதவாறு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

இப்படிப்பட்ட சிக்கல்களையெல்லாம் சரிகட்டும் விதமாக தொகுதி ஒதுக்கீடு இருக்க வேண்டுமானால் தி.மு.க வெறும் நூற்றிருபது தொகுதிகளில் மட்டுமே போட்டியிட முடியும். இப்படியொரு விஷப்பரீட்சை மேற்கொள்ள தி.மு.க தயாராக இல்லை.

ஆக, தி.மு.க கூட்டணிக்குள் தொகுதி பங்கீடு சிக்கல் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் அவரவர் மனசுக்குள் தொடங்கிவிட்டது. அனேகமாக தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே தி.மு.க கூட்டணியில் சலசலப்பு தோன்றலாம். இதை எப்படி கலைஞர் சமாளிக்கப் போகிறார் என்று அறிய வாக்காளர்கள் ஆர்வமுடன் காத்திருக்க, அ.தி.மு.கவோ இதை வசமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கண்கொத்திப் பாம்பாகக் காத்திருக்கிறது!

- கலை

எஸ்பிஆர் ஹோம்ஸ்

கோவையில் பல நவீன வசதிகளுடன்

தனி வீடுகள்



- ★ 2 மற்றும் 3 படுக்கையறைகள் கொண்ட தனி வீடுகள்
- ★ ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ.
- ★ பள்ளி, கல்லூரி, பல் பொருள் அங்காடிகள், பஸ் நிலையம் அருகில்
- ★ 24 மணிநேரம் பாதுகாவலர் வசதி

முந்துங்கள் சில வீடுகள் மட்டும் உள்ளன

முன்னணி வங்கிகள் மூலம் கடன் வசதி

Espeeyare Homes

Site Address:
Behind Cheran Nagar,
Kavundampalayam, Coimbatore.
Phone : 2232818, 2233846, 5589177

Office Address:
Promoted by: Espeeyare Enterprises (I) Pvt. Ltd.
15, Malavia Street, Ramnagar, Coimbatore - 641 009.
Cell : 98422 32818, 98658 10000

www.sprhomes.com.

ஜாதகமே தேவையில்லை! உங்களை அதிர்ஷ்டசாலியாக்குகிறார்!

விஜய் டிவியில் திங்கட்கிழமை தோறும், காலை 9.45 மணிக்கும், ராஜ் டிவியில் தினமும் காலை 7.00 மணிக்கும், தமிழ்த்திரை டிவியில் பல முறை தோன்றும் புகழ்பெற்ற பரம்பரை ஜோதிடர் ஒருவருடைய முகத்தைப் பார்த்தும், கைரேகை அல்லது புகைப்படத்தை பார்த்தும் முனீஸ்வரர் அருளால் நீங்கள் நினைத்து வந்த காரியத்தை நேரில் பார்த்தது போல் பளிச் என்று பலன் சொல்லி உங்கள் அனைத்து பிரச்சனைகளையும் செய்வினை தோஷங்களையும் முனீஸ்வரர் அருளால் நிவர்த்தி செய்து அதிர்ஷ்டசாலி ஆக்குகிறார்.




அருள்வாக்கு சித்தரின் வெளியூர் விசிட்

பிரதி மாதம் தேதி

2	காஞ்சிபுரம்	ஹோட்டல் MM
4	தஞ்சாவூர்	Temple Tower
5	திருச்சி	ஹோட்டல் ரம்யாஸ்
8	மதுரை	ஹோட்டல் செந்தூர்
9	திருநெல்வேலி	ஹோட்டல் ஆரியாஸ்
12	பாண்டி	ஹோட்டல் ஜெயராம்
13	திருஅண்ணாமலை	ஹோட்டல் ஆகாஷ்
15, 16	மும்பை	சவுத் இண்டியன் கன்ஸ்ட்ரக்ஷன், மாதுங்கா
19	சேலம்	ஹோட்டல் நேஷனல்
20	தர்மபுரி	ஹோட்டல் DND
21	ஒசூர்	ஹோட்டல் ஸ்ரீனிவாசா
22, 23, 24	பெங்களூர்	ஹோட்டல் உட்லண்ட்ஸ்
25	வேலூர்	ஹோட்டல் வசந்த விஹார்
27	ஈரோடு	ஹோட்டல் ஆக்ஸ்போர்டு
28	கோவை	ஹோட்டல் தமிழ்நாடு
29	திருப்பூர்	ஹோட்டல் ராமகிருஷ்ணா

முனீஸ்வரர் அருள்வாக்கு சித்தர்
ஓயிட் & ஓயிட் V.V.M.B. நல்லப்பன் நீலகண்ட சிவா
எண்.32, மகாலட்சுமி தெரு, தி.நகர், சென்னை - 600 017.
போன் : 24761913, செல் : 98412 94932, 94444 16854



காஷ்மீரின் கண்ணீர்; 'பாக்'கின் பிடிவாதம்!

சென்ற ஆண்டின் இறுதியில் நமது கிழக்குக் கடற்கரையைத் தாக்கிய சுனாமியைவிடப் பெரியதொரு இயற்கையின் சீற்றம் தோன்றவே வாய்ப்பில்லை என்றுதான் எண்ணியிருந்தோம்.


காஷ்மீரில் ஏற்பட்ட பூகம்பம் அந்தக் கருத்தைப் பொய்யாக்கி விட்டது. ஊரி, தங்தார் பகுதிகளில் சுமார் ஆயிரம் பேர் மரணமடைந்திருப்பார்கள் என்று கருதப்படுகிறது. பாகிஸ்தானிலும் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதியிலும் சேதம் மிக மிக அதிகம். அங்கே முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிர்ப் பலியாகியிருக்கிறார்கள். வீடு வாசல் இழந்தும் படுகாயமுற்றும் உயிருக்கும் உடைமைக்கும் போராடிக் கொண்டிருப்பவர்கள் எண்ணிக்கையோ கோடிக் கணக்கில். உற்றம் சுற்றத்தை இழந்து அழுது புலம்பிக் கொண்டிருப்பவர்களின் ஓலம் டீ.வி. மூலம் எங்கும் பரவி உலகையே சோகத்தில் ஆழ்த்தி வருகிறது.

இமயமலைப் பகுதியில் இம்மாதிரி பூகம்பம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று பலகாலமாகவே விஞ்ஞானிகள் எச்சரித்து வந்திருக்கிறார்கள். அதற்கான காரணத்தையும் விளக்கியிருக்கிறார்கள். ஆனால் வருமுன் காப்பது என்ற மனப்பான்மையே ஆசிய மக்களிடம் குறைவுதான். ஆட்சியில் இருப்போரிடமோ அறவே இல்லை. வந்த பிறகாவது பாடம் கற்கிறோமா என்றால் அதுவும் கிடையாது. (விதி விலக்கு : ஜப்பான்) பூகம்பம் - நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதிகளில்



கல்கி

2005 அக்டோபர் 23
பார்த்திப ஐப்பசி 6
மலர் : 64
இதழ் : 12



பல மாடி - காங்கிரீட் கட்டடங்களை எழுப்பக் கூடாது; அப்படி எழுப்பினாலும் தக்க பாதுகாப்பு அம்சங்களைப் புகுத்தி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையான பொது அறிவு கூட இருப்பதில்லை. ஒவ்வொரு முறை வெள்ளப் பெருக்கின் போதும் ஆற்றங்கரை ஓரம் வீடுகள் - குடிசைகள் அடித்துச் செல்லப்படுவதைப் பார்த்துக் கொண்டே இருப்போம்; மீண்டும் அதே பகுதிகளில் வீடுகள் எழ அனுமதித்துக் கொண்டும் இருப்போம்.

நடந்தது நடந்துவிட்டது; இனி செய்ய வேண்டியது என்ன? பிரதமரும் சோனியாவும் சேதமுற்ற பகுதிகளுக்கு விரைந்து சென்று பார்வையிடுகிறார்கள். சோனியா ஆறுதல் சொல்கிறார். பிரதமர், "நிவாரணப் பணிகளுக்கு நிதிப்பற்றாக்குறை இருக்காது" என்று உறுதி அளிக்கிறார். சரியான அறிக்கைதான். காஷ்மீர் மக்களின் துயர் துடைக்க எவ்வளவு பணம் வேணுமானாலும் ஒதுக்கலாம்தான். வரி செலுத்தும் மக்கள் இதைக் குறை கூறப் போவதில்லை.

ஆனால், அந்தப் பணம் சரியான முறையில் செலவாகிறதா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையிலேயே நிவாரணம் கிட்டுகிறதா என்பதுதான் முக்கியம். இதற்கு 'ஆபத்துக்கால ஒருங்கிணைப்புத் திட்டம்' என்பதாக ஒன்று இருக்க வேண்டும். மின் தடங்கல் ஏற்பட்டால் ஜெனரேட்டர் உடனே ஓட ஆரம்பிப்பது போல, இயற்கையின் சீற்றம் தோன்றியதுமே இந்தத் திட்டம் செயல்பட வேண்டும். தொண்டுள்ளமும் ஆற்றலும் மிக்க ஒரு உயர் மட்டக் குழுவிடம் இந்தத் திட்டமும் அதற்கு உரிய நிதியும் ஒப்படைக்கப்பட வேண்டும். அரசு இயந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் தட்டிக் கேட்கவும் இந்தக் குழுவுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

இதுபோன்ற ஓர் ஏற்பாடு செய்யாமல் பணத்தை மட்டும் அள்ளி விடும்போது அது மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குப் பதில், பலரது பேராசைக்கு நிவாரணம் அளிப்பதாகவே முடியும். சுனாமிக்குப் பிறகு தமிழ்நாட்டு கடற்கரை ஓர மக்கள் இன்றளவும் தங்களுக்கு



நிவாரணம் கிட்டவில்லை என்றுதான் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலை காஷ்மீரத்திலும் தோன்றும். காஷ்மீர மக்களிடையே தோன்றக் கூடிய அதிருப்தி மிக ஆபத்தானது என்பதை சற்று யோசித்தால் புரிந்து கொள்ளலாம்.

பாக் அதிபர், இயற்கையின் இந்தக் கோர தாண்டவத்தை வைத்தே ஏராளமான அந்நிய உதவியைப் பெற முயன்று அதில் பெரு வெற்றி பெறுவார். ஆனால் உதவியோ, மானியமோ, நிவாரணமோ எல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்; ஒரு சிலரின் ஸ்விஸ் வங்கிக் கணக்குகளுக்கு அல்ல.

"உதவ முன்வரும் இந்தியா, உணவு, உடை, மருந்துகள் போன்றவற்றை அனுப்பலாம்; ஆனால் இந்திய ராணுவமோ இதர அமைப்புகளோ நேரில் வந்து உதவத் தேவையில்லை; கூட்டு முயற்சியிலும் இறங்க முடியாது" என்று பாகிஸ்தான் பிடிவாதமாகக் கூறிவிட்டது.

தன்மானம் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். முஸாஃபராபாத்தில் பயங்கரவாதிகள் முகாம் அமைத்து பயிற்சியும் பெற்று வருவதால் ஏற்பட்ட தயக்கமாகவும் இருக்கலாம். 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்று சாதிக்கவே பாகிஸ்தான் முயற்சியை நீடிக்கும்.

இருப்பினும்கூட அங்கு பாதிக்கப்பட்டுள்ள மக்களும் காஷ்மீரிகளே. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு இல்லாதிருந்தால் அவர்கள் முழுக்க முழுக்க இந்தியர்களே. இதை நினைவில் வைத்து, "காஷ்மீர மக்கள் நிவாரண நிதி" ஒன்று அரசே தொடங்கலாம். ஒவ்வொரு இந்தியனும் ஒரு ரூபாயாவது குறைந்த பட்சம் இதற்கு நன்கொடை வழங்கலாம். இப்படி சேரும் பணத்தை பாகிஸ்தான் ஏற்க மறுத்தால் ஒரு சர்வதேச அமைப்பிடம் (ரெட் கிராஸ் போல) தந்து காஷ்மீர மக்களுக்குப் பயனாகுமாறு செய்யலாம்.

காஷ்மீர மக்களின் துயரத்தில் ஒவ்வொரு இந்தியனும் பங்கு கொள்கிறான் என்று சொன்னால் போதாது; செயல்படுத்திக் காட்டுவது முக்கியம். ●

ரஜினி ராணி!



'நீ வரும் போது நான் மறைவேனா?' என்று 'ஜில்'லென்று 'மழை'யில் ஆடிப் பாடிய ஸ்ரேயா ரஜினிக்கு ஜோடியாக டிக் செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரேயாவை ஷங்கர் முடிவு செய்த பிறகு ரஜினி மற்றும் ஏவி.எம் தரப்பிலிருந்து மறுப்பே வரவில்லையாம். எல்லாம் 'மழை' தந்த பாக்கியம்! (த்ரிஷா தரப்பில் அதிக ஆர்வம் காட்டியும் வயது வித்தியாசம் காரணமாக 'டெலிட்' செய்யப்பட்டிருக்கிறார்.)

ஸ்ரேயாவுக்கு 'அட்வான்ஸ்' கொடுக்கப்பட்டு தேதிகளும் வாங்கப்பட்டு விட்டன. பேட்டிகளில் ரஜினிக்குப் புகழாரம் சூட்டிக் கொண்டிருக்கிறார் ஸ்ரேயா. ஒரு வேடிக்கை தெரியுமா? 'திருவிளையாடல் ஆரம்பம்' என்கிற படத்தில் தனுஷோடு நடித்துக் கொண்டிருக்கிறார் ஸ்ரேயா. அதற்கடுத்து தனுஷின் மாமனார் ரஜினியுடன்! இந்த விசித்திரம் தமிழ் சினிமாவில் மட்டுமே ரசிக்கப்படும்!

- பப்பி





மகிழ்ச்சியான மண வாழ்க்கைக்கு 180 நிமிடங்கள்!

உங்களோட ஆசை மகளுக்கோ, அருமை மகனுக்கோ கல்யாணமா? கங்கிராட்ஸ்! ஏ.சி.ஹால், தடபுடல் விருந்து, ஜவுளி, நகை, லைட்மியூஸிக்னு லட்சக்கணக்கில் பட்ஜெட் போட்டிருப்பீங்களே. ஜமாயுங்க. அப்படியே செலவோடு செலவாக, ப்ரீ மேரேஜ் கவுன்சலிங் மையத்துக்குக் கல்யாண ஜோடியை அனுப்பி வைங்க. வெறும் ஐந்நூறே ரூபாய் செலவில், மூன்றே மணி நேரத்தில் சந்தோஷமான மண வாழ்க்கை வாழத் தயார் செய்து அனுப்புகிறார்கள்.

இது குறித்து மேலும் விவரம் அறிய சென்னை, வடபழனியில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் செக்ஸ்ஷுவல் மெடிஸின் அண்ட் ப்ரீ மேரிடல் கவுன்சலிங் மையத்தின் டாக்டர் டி. காமராஜைச் சந்தித்தோம்.

"சமூக ரீதியாக நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் விஷயம் எது தெரியுமா? உயர்ந்து வரும் விவாகரத்து விகிதம்தான். 2004ஆம் ஆண்டில் மட்டும் சென்னை நகர குடும்ப நல நீதிமன்றத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மணவிலக்கு வழக்குகள் பதிவாகியுள்ளன.

காரணம், கணவன் - மனைவிக்குள் ஏகப்பட்ட சிக்கல். பொருளாதார ரீதியாக, உடல் ரீதியாக, மன ரீதியாக, கலாசார ரீதியாக ஏகப்பட்ட பிரச்னைகள். முன்பெல்லாம் எப்படிப்பட்ட பிணக்குகள் வந்தாலும், குடும்பக் கௌரவம் கருதி, சகித்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, குடும்பத் தலைவன் மட்டுமே சம்பாதிக்கும் நபராக இருந்தான். அதனால், அவன் வைத்ததே சட்டமாக இருந்தது. இப்போது பெண்களும் கை நிறையச் சம்பாதிக்கிறார்கள். ஆனாலும், அவர்களே வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்றைய ஆண்



மகனுக்கு வீட்டு வேலைகளில் மனைவிக்கு ஒத்தாசையாக இருக்கத் தெரிவதில்லை. "எங்க தாத்தா, அப்பா சமையல் அறைக்கே போக மாட்டாங்களே! நான் மட்டும் ஏன் செய்யணும்?" என்று குழம்புகிறான். கணவன் - மனைவியின் ரோல்ஸ் மாறியிருக்கே. அதற்கேற்ப பழைய ரூல்ஸும் மாறினால்தான் பிரச்னை வராமல் இருக்கும் என்று ஆண்களுக்குப் புரியாததுதான் முதல் காரணம்.

''வீட்டு வேலைகளில் கூடமாட உதவலைன்னு எரிஞ்சு விழாதே. அவனுக்கு இதில் தக்க பயிற்சியில்லை. மற்றபடி சொன்னால் செய்வான்!" என்று பெண்ணுக்கும், "உங்க அம்மா மாதிரி பத்தாங் கிளாஸ் பெண்மணி இல்லை இவள். ஐ.டி. இஞ்ஞி. அவளை கௌரவமா நடத்தலைன்னா உன் பாடு திண்டாட்டம்தான்" என்று ஆணுக்கும் புரிய வைப்போம்.

"அந்தக் காலத்தில் பெண்களுக்கு, பொருளாதாரப் பாதுகாப்பு அவசியமாக இருந்தது. ''கொடி படர ஒரு மரம் வேணும். அது பட்டமரமானா என்ன, முள்ளு மரமானா என்ன?"னு வசனமே பேசுவாங்க. ஆனால் இப்போது பெண்களே சம்பாதிப்பதால், சாப்பாடு, துணிமணியைத் தாண்டி, ரொமான்ஸ், லவ் என எதிர்பார்க்கிறாள். பிரியம் காட்டத் தவறும்போது, உறவுகள் உடைகின்றன.


இதெல்லாம் சும்மா உதாரணத்துக்குதான். பயிற்சியளித்தல், பொருத்தம் அறிதல், உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தவிர்த்தல், உடல்நிலை அறிதல், குடும்ப வாழ்க்கை சிறக்க வழிகாட்டுதல் எனப் பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கி பயிற்சிகள் தருகிறோம். வாழ்க்கைக் கலை சார்ந்த விஷயங்களோடு, பாலியல் தொடர்பான ஆலோசனைகளும் தரப்படுகின்றன. செக்ஸ் பிரச்னைக்கான தீர்வு, தாம்பத்திய சந்தோஷம் நீடிக்க டிப்ஸ், குழந்தைப் பேறு பெற, மகப்பேற்றைத் தவிர்க்க ஆலோசனை போன்றவையும் இதில் அடங்கும். எய்ட்ஸ் நோய்க்கான பரிசோதனையும் செய்து கொள்ள அறிவுறுத்துகிறோம்."

"திருமண பந்தம் என்பது நீடித்த சந்தோஷத்தைத் தர வேண்டும் என்றால் மகிழ்வித்து, மகிழத் தெரிய வேண்டும். அதைத்தான் இங்கே சொல்லித் தருகிறோம். இன்றைக்கும் எல்லா கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மணமக்களுக்கு ப்ரீமேரிடல் கவுன்சலிங் நடத்துகிறார்கள். ஆனால் அவர்கள் மத ரீதியாக நடத்துகிறார்கள். நாங்கள் உளவியல் ரீதியாக அணுகுவதால் நூறு சதவிகிதம் பலன் தருகிறது.


"இது போன்ற ஆலோசனை மையங்கள் வெளிநாட்டில் பிரபலமாகி உள்ளன. இத்தகைய ஆலோசனைகளைப் பெற்ற தம்பதியரின் வாழ்க்கை, பெறாதவர்களின் மணவாழ்க்கையைவிட சிறப்பாக அமைந்திருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சமூகம் மாறிவிட்டது. கணவன் மனைவி உறவும் மாறிவிட்டது என்பதை அனைவரும் புரிந்து கொண்டால்தான், விவாகரத்து, வேதனை, தனிமை, மனமுடைந்த குழந்தைகள் எனக் குடும்பம் சிதறிப் போகாமல் இருக்கும்'' என்கிறார் டாக்டர் டி.காமராஜ்.

- வாணிஸ்ரீ

படம் : ஸ்ரீஹரி




வாசகர்களின் எண்ணிக்கை
அதிகரித்த
ஒரே தமிழ் நாளிதழ்
அதிக வாசகர்கள்
படித்த
இணைப்புகள்
இளைஞர்மணி,
வெள்ளிமணி
தினமணி
செய்தியில் முழுமை; சொல்வதில் புதுமை!
Source: NRS 2005



அவசர அவசரமாய் படப்பிடிப்புக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். "தம்பி! உங்களோட ஆட்டோ கிராஃப் கேட்டு, ஐம்பது ரசிகர்கள் வீட்டு வாசல்ல வெயிட் பண்றாங்க! எல்லோரும் காலேஜ் ஸ்டூடண்ஸ்" என்று டைனிங் ஹாலுக்கு வந்து சொல்லிவிட்டுப் போனார் டிரைவர் அண்ணன். ஆச்சரியத்தோடு வெளியே வந்து காத்திருந்த மாணவர்களுக்கு 'ஹலோ' சொன்னேன். அவர்கள் முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லை. திடீரென்று குரலெடுத்து கோஷம் போட ஆரம்பித்தார்கள்!

"நிறுத்து! நிறுத்து! நடிப்பதை நிறுத்து!", "கெடுக்காதே கெடுக்காதே! அப்பா பெயரைக் கெடுக்காதே!" கடவுளே எந்த நடிகனுக்கும் நேரக்கூடாத அசம்பாவிதம் அல்லவா இது! அதிர்ச்சியில் உறைந்து நின்ற என் மீது திடீரெனப் பாய்ந்து சட்டையைக் கொத்தாகப் பிடித்தார் ஒரு ரசிகர். "ப்ளீஸ் என்னை விடுங்க! விடுங்க!" என்று கத்திக்கொண்டே விழித்தபோது, பிற்பகல் மூன்று மணி. முகமெல்லாம் பொட்டுப் பொட்டாக வியர்த்திருந்தது. இப்படியொரு சம்பவம் நிஜமாக நடந்தால் என்ன? கனவில் வந்தால் என்ன? நம் எண்ணங்கள்தானே கனவாக வந்து மிரட்டுகின்றன. ரசிகர்கள் நம்மை வீட்டுக்கு அனுப்பும் முன்பு உருப்படியாக ஒரு வெற்றியைக் கொடுத்தாக வேண்டும். அதன் பிறகுதான் நமக்குத் தூக்கம். இதற்கு முதலில் நிறைய கதை கேட்க வேண்டும். அவற்றில் நல்ல கதையைத் தேர்வு செய்ய வேண்டும். டான்ஸ், ஸ்டண்ட் கற்றே தீர வேண்டும்.

திடுதிப்பென்று நடிகன் வேஷம் போட்டவன், இருபத்தைந்து வயதில் டான்ஸ் கற்றுக் கொள்கிறேன் என்று போனால் உடம்பு வளைந்து கொடுக்குமா? 'நேருக்கு நேர்' முடிந்த பிறகு அடுத்த படம் தொடங்கும் இடைவெளியில் கொஞ்சமாவது டான்ஸ் கற்றுக் கொள்ளலாம் என்றால், அதற்கு வாய்ப்பில்லாமல் அடுத்தடுத்து படங்கள் வந்து என் கழுத்தை நெறித்தன. மூன்று படங்களில் நடித்து முடித்த பிறகுதான், ரசிகர்கள் நம்மை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே உணர முடிந்தது. என்னைப் பற்றிய ரசிகர்களின் மதிப்பீடு, பத்திரிகைகளின் விமர்சனம் இரண்டையும் அடியோடு மாற்றியாக வேண்டும். வெட்கப்படாமல் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். இந்த இடத்தில் டான்ஸ் மாஸ்டர் கிஷோர், ஸ்டண்ட் மாஸ்டர் பாண்டியன் இருவரைப் பற்றியும் சொல்லியே ஆக வேண்டும்.

பகல் முழுவதும் ஷூட்டிங் போய்விட்டு மாலை எங்கள் வீட்டுக்கு வந்து எனக்குக் கற்றுக் கொடுப்பார் கிஷோர். அவர் களைத்து நான் பார்த்ததில்லை. "இன்னைக்கு இதுபோதும் மாஸ்டர்" என்று டயர்டாகி கெஞ்சும்வரை விட மாட்டார். அவர் எனக்குப் போட்ட ஆழமான நடன அடிப்படை



சந்தித்தேன்...

கள், டான்ஸ் மீது அலாதியான ஈடு பாட்டை ஏற்படுத்தின. காலை, மாலை என இருவேளையும் எனது ரூமிலேயே கடுமையாக பிராக்டிஸ் செய்ய ஆரம்பித் தேன். இப்படியே தொடர்ந்து செய்ய ஆரம்பித்ததில் இரண்டு பாதங்களும் கொப்பளித்துவிட்டன. வலி பொறுக்க முடியவில்லை. மாஸ்டர் வரும் நேரத்தில் எங்காவது எஸ்கேப் ஆகிவிடலாமா என்று ஒரு சில்லியான எண்ணம். அடுத்த நிமிஷமே அதை மனசிலிருந்து அழித்து விட்டு இடைவிடாமல் டான்ஸ் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன்.

எனக்கு கிஷோர் கிடைத்ததைப் போலவே இன்னொரு புதையல், பாண் டியன் மாஸ்டர். இன்று சினிமாவில் ஜொலிக்கிற முக்கால்வாசி பேர் பாண் டியன் மாஸ்டரின் பயிற்சிப் பட்டறை யிலிருந்து வந்தவர்கள்தான். மாணவர்களி டமிருந்து பணத்தை எதிர்பார்க்காமல் "என்னோட பேரை காப்பாத்துனும்" என்று அவர்களை வளர்த்து விடு வதிலேயே குறியாக இருப்பார். ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியே கவனம் செலுத்து வார். "ஐந்தில் வளையாதது, ஐம் பதில் வளையாது என்ற பழ மொழியெல்லாம் சுத்த ஹம்பக்! ஆர்வம் இருந்தா என்பது வயசில கூட ஸ்டண்ட் கத்துக்கலாம்" என்று சொல்லி, எனக்கு அவ்வளவு அழகாக சினிமா ஸ்டண்ட் சொல்லிக் கொடுத்தார். இருபத்தைந்து வயதில் ஜம்ப் செய்து, திரும்பி உதைக்கக் கற்றுக் கொடுத்தார்.

ஓரளவு தயாராகிவிட்ட சந்தோஷத் தோடு கொஞ்சம் இடைவெளி எடுத்துக் கொண்டபோது 'பெரியண்ணா' படத் தில் விஜயகாந்துடன் நடிக்க வாய்ப்பு வந் தது. "முதல் பாதியில் நீங்கள், இரண்டா வது பாதியில் விஜயகாந்த்" என்றார் இயக்குனர். சிறையிலிருந்து தப்பி வந்து சண்டை போடுகிற துடிப்பான கேரக் டர். டான்ஸ் ஆடவும் வாய்ப்பிருக்கிறது என்று கதை கேட்டதும் புரிந்தது. முந் தைய இரண்டு படங்களைவிட இது பெட்டர் என்று பட்டது. அந்தப் படத் துக்கு லாரன்ஸ்தான் டான்ஸ் மாஸ்டர். நிறைய பிராக்டிஸ் செய்து ஒரு பாட லுக்கு அற்புத மாக ஆடியிருந் தேன். இந்தப் பாடல் சூர்யா டான்ஸில் தேறி விட்டார் என்று பெயர் வாங்கித் தரப்



சிந்தித்தேன்...

போகிறது என்று எனக்கே தோன்றியது. எந்தப் பாடலை ஆவலோடு எதிர்பார்த் தேனோ அந்தப் பாடலை படத்தி லிருந்து வெட்டி பண்ணிவிட்டார்கள். டைவடித்து, காயப்பட்ட ஒரு சண்டைக் காட்சியையும் கருணையே இல்லாமல் தூக்கிவிட்டார்கள். இரக்கப்பட்டு படத் தில் விட்டுவைத்த பாடலையும் இலவச டீ.வி விளம்பர ப்ரமோவுக்கு கொடுக்கா மல் செய்து விட்டார்கள். ஒரு நடிகன் வளர்ந்திருக்கிறான் என்று ரசிகர்கள் புரிந்துகொள்ளக்கூடிய உழைப்பு அந்தப் படத்தில் இருந்தது. ஆனால், அதில் பாதியை எதற்காக இப்படி இருட்டடிப்பு செய்ய வேண்டும்?

வெளியே சொல்ல முடியாத மன உளைச்சலோடு யோசித்தபோதுதான் புரிந்தது. சம்பந்தப்பட்ட இயக்குனரின் மகனும் அன்று ஒரு வளரும் நடிகன். அது வும் தவிர அன்றிருந்த கஷ்டமான நிலை மையில் கேள்வி கேட்கிற மாதிரி நான் இல்லை. ஆனாலும் அந்த இயக்குனருக்கு மனப்பூர்வமாக நான் நன்றி சொல்லித் தான் ஆக வேண்டும். "அட்லீஸ்ட் சூர்யா இருக்கிறாரப்பா! ஏதோ பண்ணிக்கிட்டு இருக்கார்" என்று ரசிகர்கள் பேசுகிற அள வுக்கு நல்ல படமாகவே அது இருந்தது. கொஞ்சம் நம்பிக்கை வந்தது.

பெரியண்ணாவுக்குப் பிறகு திற மையை நிரூபித்த நல்ல இயக்குனர்களின் படங்களில்தான் நடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். நிறைய வாய்ப்புகளை யோசிக்காமல் நிராகரித் தேன். இந்த நேரத்தில்தான் வஸந்த் சார், தமது அடுத்த படத்துக்கு ஹீரோ தேடிக் கொண்டிருக்கிறார். அப்பாஸைப் போட லாம் என்று இயக்குனர் யோசித்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். மறுபடியும் ஒருமுறை வஸந்த் சார் இயக் கத்தில் நடித்தால் எப்படியிருக்கும்? ஏக் கத்தோடு யோசித்துக் கொண்டிருந்த எனக்கு வஸந்த் சாரின் அலுவலகத் திலிருந்து திடீர் அழைப்பு.

அவரது அலுவலகத்துக்கு நட்பின் நிமித்தம் நான் அடிக்கடி போய் வருகிற வன்தான். "அப்பாஸை டைரக்டர் இன் னும் ஃபைனல் பண்ணவில்லை. நீங்கள் வாய்ப்புக் கேட்டால் கொடுத்து விடுவார். வாய்விட்டுக் கேட்டு விடுங்கள்" என்று அவரது உதவி இயக்குனர்கள் என்னிடம் சொன்னார்கள். ஆனால் வலியப் போய் வாய்ப்புக் கேட்கும் பழக்கம் அப்பாவைப் போலவே எனக்கும் பிடிக்கவில்லை. எனி னும் அவர் கூப்பிட்டு அனுப்பிய மரியாதைக் காகப் போனேன். "பூவெல்லாம் கேட்டுப் பாரில் நீதான் ஹீரோ" என்று சொன்னார்.

எனக்குத் தலைகால் புரியவில்லை. நான்கு தோல்விப் படங்களைக் கொடுத்த எனக்கு, 'பூவெல்லாம் கேட்டுப் பார்' கதையைக் கேட்டு அப்படியொரு உற்சாகம். ஆறு பாடல் களும் அற்புதமாக வந் திருந்தன. அந்தப் படத்தில்தான் ஜோதி காவை முதல்முறையாகச் சந்திக்கிறேன். அறிமுகக் கதாநாயகி என்று சொல்லிவிட முடியாதபடி அற்புதமாக நடிக்க ஆரம் பித்தார். நடிப்பில் எனக்கும் அவருக்கும் நல்ல வித்தியாசம் தெரிந்தது. சினிமா பின்புலம் இல்லாத ஒரு குடும்பத்திலிருந்து வந்த பெண், முதல் படத்திலேயே இவ் வளவு பிரமாதமாகப் பண்ணுகிறாரே என்று ஜோதிகாவைப் பார்த்து பிரமிப் பாக இருந்தது. தமிழ் வசனங்களைப் பேசி நடிக்க அவர் கையாண்ட உத்தியைப்



* பூவெல்லாம்...



... கேட்டுப்பார்!

பார்த்து எனது தெனாவெட்டு தகர்ந்து போனது.

ஒவ்வொரு நாளும் ஷூட்டிங் முடிந்த பிறகு இரவு உட்கார்ந்து உதவி இயக்குனரின் உதவியோடு எல்லா டயலாக்குகளையும் அப்படியே ஹிந்தியில் எழுதிக் கொள்வார். ஒவ்வொரு டயலாக்கின் தமிழ் அர்த்தத்தையும் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதற்கேற்ப முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டி 'சரியா இருக்கா?' என்று கேட்பார். ஒரு சின்சியர் மாணவியைப் போல ஜோதிகா காட்டிய ஈடுபாடு என்னை ரொம்பவே பாதித்தது. கடின உழைப்பு என்றால் என்ன என்பதைக் கண்கூடாக அவரிடம் பார்த்தேன். மொழி தெரியாத ஒரு பெண் அசத்துகிறார். தாய்மொழி தெரிந்த நமக்கு கொஞ்சம் நீளமான டயலாக் என்றால்கூட நாக்குத் தள்ளி விடுகிறது. நாம் இன்னும் உழைக்கவே ஆரம்பிக்கவில்லை என்று சிந்திக்க வைத்தார் ஜோதிகா.

சிவாஜி பேசிய வசனங்கள், கலைஞர் எழுதிய வசனங்களையெல்லாம் அப்பா கடகடவென்று அதே பாவத்தோடு எங்களுக்கு வீட்டில் சொல்லிக் காட்டுவார். அவரது கிரகிக்கும் தன்மையை நினைத்து எனக்குப் பொறாமையாகக்கூட இருக்கும்.

''ஞாபக சக்தி எல்லோருக்கும் உண்டு! அதை கூர்மையாக்க இடைவிடாமல் பயிற்சி செய்ய வேண்டும். இந்தா! கலைஞர் எழுதிய சங்க இலக்கியத்தில் வரும் கபிலரின் குறிஞ்சிப் பாட்டு. இதில் நூறு வகையான மலர்களின் பெயர்களைப் பட்டியலிட்டிருக்கிறார். எல்லாம் நம் தமிழ் நிலத்தில் மலர்ந்து மணம் வீசுகிற பூக்கள். கவிதையில் வரும் எதுகை மோனை உச்சரிப்பு இல்லாத இந்த மலர்களை நீ மனப்பாடம் செய்துவிட்டால் உன் மூளை கொஞ்சம் வலுப்பெறும்'' என்றவர், ''ஒரு விழாவில் இந்த மலர்களின் பெயர்களைக் கடகடவென்று சொல்லி நான் பேசியதைப் பார்த்த வஸந்த், இதை அப்படியே சூர்யா, நாயகியிடம் சொல்லி காலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறமாதிரி ஒரு காட்சி வைத்தால் நன்றாக இருக்கும். படத்துக்கு 'பூவெல்லாம் கேட்டுப்பார்' என்று தலைப்பு வேறு வைத்திருக்கிறேன் என்று கேட்டுக் கொண்டார். எனவே எப்படியாவது மனப்பாடம் செய்'' என்றார். தப்பிக்க முடியாது என்று தெரிந்தபிறகு, மூன்று நாட்கள் தினசரி அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து உட்கார்ந்து மனப்பாடம் செய்தேன். இன்று தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால்கூட நூற்றி எட்டு பூப்பெயர்களையும் அப்படியே ஒப்பிப்பேன். அதை ஒரே ஷாட்டில் எடுத்து முடித்தார் வஸந்த் சார்.

நடனக் காட்சிகளில் எனது முன்னேற்றத்தைப் பார்த்துவிட்டு, "என்ன சூர்யா! பெரிசா ரெடியாகி வந்துட்ட போலயிருக்கு...வெரிகுட்! கேரிஆன்'' என்று பாராட்டினார். வஸந்த் சார், நான், ஜோதிகா என்று எங்கள் மூவருக்குமே பெரிய நம்பிக்கையாக அந்தப் படம் இருந்தது. பத்திரிகைகள் மூலம் பெரிய எதிர்பார்ப்பும் கூடிவிட்டது. படம் ரிலீஸுக்கு முதல்நாள் நானும், வஸந்த் சாரும் திருப்பதிக்குப் போனோம். அவர் அங்கப்பிரதட்சணம் செய்தார். படம் வெளியானது. "செம ரொமான்டிக் காமெடி'' என்று ரசிகர்கள் மத்தியில் டாக். பத்திரிகைகள் எல்லாம் எக்கச்சக்கமாய்ப் பாராட்டின. எனது டான்ஸைக் கடுமையாக விமர்சித்த 'கல்கி'யே டான்ஸில் நான் தேறிவிட்டதாகப் பாராட்டியது... ஆனால்...

(டைரியைத் தொடர்வேன்)

நீங்கள் கேட்டவை

● அ.பேச்சியப்பன், ராஜபாளையம்.

? வீரப்பன் இல்லாத சத்தியமங்கலக் காடு இப்போது எப்படி இருக்கிறது?

! நக்ஸலைட்டுகளின் ஊடுருவல் இருப்பதாக மத்திய அரசின் குற்றச் சாட்டும், கிடையவே கிடையாது என்று ஜெயலலிதாவின் மறுப்புமாக இன்னும் நியூஸில் இருக்கிறது!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

'மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள். நாம் கட்டுக்கோப்பாக இருந்தால் 234 தொகுதி களிலும் வெற்றி பெறலாம்' என்று கூறும் விஜயகாந்தின் தன்னம்பிக்கை குறித்து?

! Over confidence என்பதை வெளிக் காட்டாது உள்ளடக்கிய self confidence.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? வீட்டில் இருந்தபடியே பிறப்புச் சான்றிதழ் பெறலாம் என அமைச்சர் தயாநிதி மாறன் கூறியிருப்பதில் எந்தளவு சாத்தியமாக இருக்கும்?

! நேரில் போய் கொடுக்க வேண்டியதை கொடுத்துவிட்டு வீடு திரும்பி விட்டால், பிறகு கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் எடுத்துக் கொள்ளலாம் - சுலபமாக!

★ மல்லிகை மன்னன், மதுரை.

? காந்தி ஜெயந்தியன்று நாடெங்கும் ஆட்டு இறைச்சி, மதுபானம் போன்றவை தாராளமாக விற்பனை செய்யப்பட்டிருக் கிறதே! இதிலிருந்து என்ன தெரிகிறது தலைவா?

! அந்த ஒருநாள் மட்டும் இவற்றுக்குத் தடை விதிப்பது காந்திஜிக்கு செய்யும் துரோகம் என்று நம்மை ஆள்வோர் புரிந்து கொண் டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? இந்தியாவின் வெளிநாட்டுக் கடனில் 130 கோடி ரூபாய் குறைந்துள்ளதாமே?

! அதனால...? கப்பரை ஏந்துவதை நிறுத்தியாவிட்டாங்க?



● இசைக்கு நன்றி!



● புலியும் பூனையும்!

● லோகநாதன், பாண்டிச்சேரி.

? பள்ளி மாணவ - மாணவியருக்கு மாலை யில் சூடான பால் வழங்கும் திட்டத்தை எங்களோட புதுவை அரசு கொண்டு வந் துள்ளதே?

! சூடான பால்னுதானே சொல்லியிருக் காங்க; சத்தான பால்னு சொல்லலை. எனவே, நாளைக்கு பாலில் தாராளமாக தண்ணீர் கலக்கப் படுவதாகப் புகார் வந் தால் யாரும் கோவிச்சுக்கக் கூடாது! நிற்க, இலவசங்களை விடவும், இலவசங்களுக்கே அவசியம் இல்லாத வகையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் ஆட்சியாளரின் கடமை. மற்றவை கையாலாகாத்தனம்.

● ரவி, சென்னை.

? ஜெயில் தண்டனை ஜெயலட்சுமியைத் திருத்துமா?

! இதைவிடவும் முக்கியமான கேள்வி: எஸ்.பி ராஜசேகருக்கு வழங்கப்பட்ட ஏழாண்டு கடுங்காவல் தண்டனை காவல் துறையைத் திருத்துமா?

● டி. செல்வன், நெல்லையப்பபுரம்.

? பண்ருட்டியாரை கட்சியில் சேர்த்துக் கொண்டதன் மூலம் விஜயகாந்திடம் இருந்தும் 'அரைத்த மாவு அரசியல்' தான் எதிர்பார்க்க முடியும் என்று தெரிகிறதே?

! அரைத்த மாவா இருந்தாலும் பர வாயில்லே; ரொம்பப் புளிச்சுப் போறதுக்கு முன்னாடி இட் டிலியோ, தோசையோ வார்த்துப் போட்டா பசியாறலாம்!

● ஆன்டனி தமிழரசன், மும்பை-17.

? தலித் மக்களின் நலன்களைக் காக்



● கொடுக்க வேண்டியதை...



● ரிலேட்...!



- தராசு

பத்திரிகைகள் மீது வருத்தப்பட்டிருக்கிறாரே ரஜினிகாந்த்?

• எரிகிற நெருப்பில்...

கக்கூடிய ஒரே கட்சி பாரதிய ஜனதாதான் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள் என்கிறாரே அத்வானி?

! தலித் மக்களுக்காகக் கண்ணீர் வடிக்காமல் எந்தக் கட்சியும் இன்று அரசியல் பண்ண முடியாதுங்க!

● டி.ஜே. ரகுராமன், சென்னை - 73.

? 'எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாதது தான் என் வெற்றிக்குக் காரணம்' என்று நடிகர் சத்யராஜ் தன் பிறந்தநாள் விழாவில் கூறியது குறித்து...

! தொழில்ல அவருக்கு நம்பிக்கை இருந்திச்சல்ல? அதுதாங்க ஆயுத பூஜை! அதுதான் வெற்றிக்குக் காரணம்!

● ஏ. கருமார், காட்பாடி.

? கம்யூனிஸ்டுகளின் கேள்விகளுக்கு மன்மோகன்சிங் சூடாக பதில் சொல்லி வருவதைப் பார்த்தால் விரைவில் பிரதமர் மாற்றம் இருக்கும் போலிருக்கே?

! அப்படியெல்லாம் நடக்காது. பிரதமரின் சூட்டைத் தணித்து கொள்கைகளில் விட்டுக் கொடுத்துக் கம்யூனிஸ்டுகளைக் குளிர்விக்கத்தான் சோனியா இருக்கிறாரே!

● ஜெயஸ்ரீ மகேந்திரன்,
சங்கரன்கோவில்.

? இசைஞானி இளையராஜா இசை நிகழ்ச்சி நடத்துவது பற்றி...

! அவரது ரசிகர்கள் சார்பில் தேங்க்ஸ்!

● பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி

? சன் டீவி தொடர்களால் சமுதாயத்துக்கு என்னதான் சொல்றாங்க?

! சன் டீவி மட்டுமென்ன, எல்லா டீ.வியும் ஒரே கைங்கர்யத்தைத்தான் பண்ணுது: "பெண்களே, வீட்டுக்குள்ளேயே அடைபட்டு இருங்கள். மூளையைக் கூர்மையாக்கி விடாதீர்கள்!"

● க.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுபாளையம்.

? புகழ் பெற்ற 'டைம்' பத்திரிகையில் 'டென்னிஸ் புயல்' சானியா மிர்சா இடம் பெற்றுள்ளது பற்றி?

! அவருக்கு இப்போ நல்ல 'டைம்' ஒப்புக் கொள்கிறேன். ஆனா பல மாதங்கள் முன்பே சானியாவின் ஆற்றல் தெரிந்து முதன்முதலாக அவரை அட்டைப்படத்திலே ஓவியர் லலிதாவின் கைவண்ணத்தில் பிரசுரித்து வாழ்த்தியது எங்களோட GOKULAM பத்திரிகைதாங்க. Time எங்களைக் காப்பி அடிக்குது too late ஆக!

● க. குமரேசன்,
சென்னை - 49

? தமிழகப் பெண்களின்



• ஆயுத பூஜை!




• அதுவும் வீண்!

பண்பாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது?

! அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு 33 சதவீதமாவது ஆண்களுக்கு நிகராக இருக்க வேண்டும் என்று விரும்பும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

● எம். சம்பத்,
வேலாயுதம்பாளையம்.



★ தாராள விற்பனை...

? 'அழைத்து' வரப்பட்ட விவசாயப் பெருமக்களும் ஓடிப் போக, ஜெயலலிதா - தெரு விளையாட்டரங்கில் நடத்திய உழவர் மாநாடு, வீண் செலவுதானே...?

! அதன் விளைவாக, இப்போது உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சந்திக்க நேர்ந்திருப்பதும் வீண் செலவுதான். மக்களின் வரிப் பணத்தை மத்திய, மாநில அரசுகள் வாரி இறைப்பதைத் தடுக்க, காந்தி மறுபடி பிறந்து வந்து வரிகொடா இயக்கம் நடத்தினால் தான் உண்டு!

● செல்வகுமார், விழுப்புரம்.

? என்ன, தராசாரே! திரையுலகத்தினரை டென்ஷனுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கின்றன பத்திரிகைகள். இது சரியில்லை என்று ரஜினிகாந்த் வருத்தப்பட்டிருக்காரே?

! ஓரளவுதான் உண்மை. எரிகிற நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுகிற வித்தையை இன்றைய பத்திரிகைகள் நன்றாகக் கற்றுக் கொண்டுள்ளன. நெருப்பே இல்லாமலிருந்தால் எண்ணெய் ஊற்றியும் பயன் இராது அல்லவா?

● ஜே.வி.ஜே. கண்ணன்,
திருச்சி - 8.

? நானே வாழும் கடவுள். எனக்குக் காணிக்கை செலுத்துங்கள் என்று பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி கூறியுள்ளது பற்றித் தங்கள் கருத்து...?"

! இதுக்கு நான் பெரியார் கட்சி: "இவரை வாழும் கடவுள் என்று நம்புகிறவன் முட்டாள்."

● வி.எம். செய்யதுபுகாரி,
அதிராம்பட்டினம்.

? தன் வீட்டின் பூட்டை உடைத்து மர்ம நபர்கள் உள்ளே புகுந்தது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் கூறியுள்ளாரே?

! இங்கு மட்டுமல்ல, ஏதோவொரு உள்நோக்கம் இல்லாமல் எந்த வீட்டிற்கு உள்ளேயும் நுழைய முடியாதுதானே! துணைமேயர் அறைக்குள் புகுந்து தீ வைக்கவும் முடியாதுதானே!

□ ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? ஒரு பத்திரிகைக்கு அவசியம் தேவையானது செய்திகளா? விளம்பரமா? வாசகர்களா?

! மனிதன் ஆரோக்கியமாக வாழ அவசியத் தேவையானது சர்க்கரைச் சத்தா, புரதச் சத்தா, கொழுப்புச் சத்தா?

● எஸ். வெங்கடேசன், ஆரணி.

? 'தற்போது ஆண்கள் பூனையாகவும், பெண்கள் புலியாகவும் இருக்கின்றனர்' என்ற பாரதிராஜாவின் கருத்து பற்றி?

! மியாவ்? மியாவ்!

● உமரி.பொ. கணேசன், மும்பை - 37

? சென்னை ஹோட்டல்களில் நடக்கும் மது, மாது, ஆபாச நடனம் பற்றி?

! பொருளாதார நோக்கில் வியாபாரத்துக்குக் கதவுகளை அகலத் திறந்து வைத்த பிறகு அந்த வாசல் வழியே அந்நிய கலாசாரம் உள்ளே புகுவதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஜப்பானியர் செய்வது போல, நமது தொன்மையான கலாசாரம் அடியோடு மறைந்து விடாமல் பாதுகாப்பது ஒன்றுதான் நாம் செய்யக்கூடிய காரியம். ○

□ ரூ 100 பரிசு பெறுபவர்:
ஜி. ஜெயராமன்,
கூந்தலூர்,
எரவாஞ்சேரி 609 501.

★ ரூ. 50 பரிசு பெறுபவர்:
மல்லிகை மன்னன்,
12.A. 32, குமரன் நகர்,
முடக்காத்தான்,
மதுரை 625 017.



★ நானே கடவுள்...

★ திருத்துமா?



அன்பான வேண்டுகோள்



சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும் 60 முதியோர்களும் இந்த வருடம் தீபாவளி திருநாளை மனமகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறோம். பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை **பணமாகவோ (அல்லது) புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு, எண்ணெய், சீக்காய், அரிசி, கோதுமை** போன்ற தானிய வகைகளாகவோ நன்கொடை கொடுக்கலாம்.

அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ / டிராப்டாகவோ **"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"** என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

பொது செயலர்,
சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,
நெ.20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059
தொலைபேசி எண்கள்:
2239 2444 / 2239 1078
FAX NO. 2279 1017

சென்னையில் நன்கொடை கொடுக்க வேண்டிய முகவரி:

M/S. பிரகாஷ் டிரேடிங் கம்பெனி,
நெ.156, தம்பு செட்டித் தெரு,
சென்னை - 600 001.
தொலைபேசி எண்: 2534 2803

சிவானந்த குருகுலம், காட்டாங்கொளத்தூர் தொலைபேசி எண்கள்:
(உள்ளூர்) : 954114 - 252345 / 251815
(வெளியூர்) : 04114 - 252345 / 251815

Email: sivanand@md2.vsnl.net.in/ashram23@rediffmail.com
Web:www.sivanandagurukul.org/www.buildhope.org

பின்குறிப்பு: காசோலையாகவோ /டிராப்டாகவோ "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்" என்ற பெயரில்தான் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

I.T.EXEMPE DIT (E) 2939(88)86-87 DT.17.7.2003

ஷாப்பிங் ராணி!

ஒரு லட்சம் தடவைக்குமேல் கடைகண்ணிகளுக்குப் போய்வந்த சாதனைக்காக ஒரு வணிகப் பேரவையால் கௌரவிக்கப்பட்ட திருமதி வேதவல்லி, பிக்-ஷாப்பர் பையும் கையுமாக கடைக்குப் போய்க் கொண்டிருக்கும் போது அளித்த பேட்டியின் சுருக்கம் :

கடைகளுக்கு அடிக்கடி போக வேணுங்கிற உந்துதல் உங்களுக்கு எந்த வயதில் ஏற்பட்டது?

நான் குட்டிப் பாப்பாவா இருக்கச் சேயே, எங்கம்மா, 'கைவீசம்மா கை வீசு! கடைக்குப் போகலாம் கை வீசு! மிட்டாய் வாங்கலாம் கை வீசு..!'ன்னு பாடிக் கொஞ்சுவாங்களாம். அப்போவே அதனோட தாக்கம் வந்திருக்கணும்.

நீங்க மொதமொத தனியா கைவீசிக்கிட்டே கடைக்குப் போன அனுபவம் ஞாபகம் இருக்கா?

கை வீசிக்கிட்டுப் போகலே. கையிலே சொம்போட போனேன். நாலு வயசுலே ஒரு நாள் நாபாலுக்கு அழுதுக்கிட்டிருந்தபோது ஆளாளுக்கு நீ போ, நா போன்னு ஏலம் போட்டுக்கிட்டு இருந்தாங்களாம். நானே யாருக்கும் தெரியாம காசை எடுத்துக்கிட்டு ஆனந்தக் கோனார் டிப்போவுக்குப் போய் சிந்தாமச் சிதறாம அழகா ஆழாக்குப் பசும்பால் வாங்கிட்டு வந்தேனாம்.

அதான் கடைக்குப் போறதுன்னா பால் மாறாம இருக்கீங்களா? உங்களுக்கு நகைக்கடைக்குப் போகப் பிடிக்குமா? துணிக்கடைக்குப் போகப் பிடிக்குமா?

துணிக்கடைக்குத்தான். அம்பதாயிரம் கலர் இருக்கிற புடைவைக் கடையிலே அறுபதாயிரம் புடைவைகளைப் பாத்துட்டு ஒண்ணும் வேணாம்னு சொன்னாகூட கடை ஆட்கள் சிடுசிடுக்க மாட்டாங்க. வீட்டுலே இருக்கிற ஆம்பளைங்க அப்படியா பொறுமையா இருக்காங்க? நான் சி.எம். ஆனா கல்யாணம் செஞ்சுக்கப் போற ஆண்களெல்லாம் புடைவைக் கடை சேல்ஸ்மேனா ஒரு வருஷம் கட்டாய சர்வீஸ் போடணும்னு சட்டம் கொண்டு வருவேன்.





இந்தப் 'புடைவை பில்' பாஸாகாது. அதை விடுங்க. மளிகைக் கடையிலே ஒவ்வொரு பொருளா கேட்டு வாங்கறது பிடிக்குமா? சூப்பர் மார்கெட்டிலே நாமே எடுத்து வேணும், வேணாங்கிறதை வாங்கி வர்றது பிடிக்குமா?

நான் அந்தக் கால மனுஷி. கேட்டுக் கேட்டு ஒவ்வொரு ஐட்டமா பரிமாறினதைச் சாப்பிடறதுதான் பிடிக்கும். பூஃபேங்கிற பேரிலே சர்க்கஸ் பண்ணித் தின்னா வயிறும் நிறையறதில்லே. மனசும் நிறையறது இல்லே. கடைத்தெரு நாடார் மளிகைக் கடைக்குப் போனா வாய் நிறைய, "வாங்கம்மா! புதுசா காபூல் பெருங்காயம் வந்திருக்கு. டேய் பாண்டி, அம்மா வந்திருக்காங்க. என்னென்ன ஜாமாங்க வேணும்னு கேக்கறாங்க பாரு"ன்னு கட்டளை இடுவாரு. ஏர் கண்டிஷன்டு சூப்பர் மார்கெட்டிலே வெள்ளைக் கோட்டு போட்டுக்கிட்டு நிக்கிற பொண்ணுங்க அப்படிக் கேட்பாங்களா?



மாசம் மாசம் வாங்காம தினம் தினம் அப்பப்போ கடைக்குப் போய் வர்றீங்களே?

தம்பி! எனக்கு எழுபது வயசாகுது. உனக்கு என் பேரன் வயசு இருக்கும். கால் கிலோ மீட்டர் என்னோட நடந்து வரதுக்குள்ளே புஸ் புஸ்ஸு"ன்னு சவுண்டு விடறே. கொக்கு மாதிரி அப்பப்போ ஒத்தக் காலிலே நின்னு வெய்ட்டை மாத்திக்கிறே. அறுபது வருஷமா கடைகளுக்கு நா நடையா நடக்கிறேன். அங்கே பொறுமையா நிக்கறேன். கால் வலி, முட்டி வலி, லோ பேக் பெயின், ஸ்லிப் டிஸ்க், அது இதுன்னு டூ வீலரிலே பறக்கிற இந்தக் கால பொம்பளைங்களெல்லாம் சொல்லிக்கிட்டு புலம்பறாங்களே அதெல்லாம் எங்கிட்ட நெருங்கினதில்லை. நான் 'கடை'க்குப் போறதே 'நடை'க்குப் போறதுக்குத்தான்.

அப்படீன்னா உங்களுக்கு டெலி

ஜே.எஸ்.ராகவன்

ஷாப்பிங்கிலே நாட்டம் இல்லேன்னு சொல்லலாம் இல்லையா?

ஹலோ? உருப்படியான கேள்வி வேற எதுவும் இல்லையா?

இருக்கு மேடம். உங்க ஷாப்பிங் அனுபவத்திலே மனசைத் தொட்ட சம்பவம் ஒண்ணைக் கூற முடியுமா?

சொல்றேன். தி.நகர் கடை ஒண்ணுலே ரெண்டு மணி நேரம் தேடித் துருவி வேண்டிய புடைவை கிடைக்காததனாலே டூ பை டூ ரவிக்கை பிட் ஒண்ணு வாங்கினேன். ஒரு வருஷம் ஆகியும் அதை யாருக்கும் வைச்சுக் குடுக்கலை. சரி, நாம்பளே தைச்சுக்கலாமேன்னு டெய்லர் கிட்டே குடுத்தா ஷாக். எண்பது சென்டிமீட்

டர்தான் இருக்குன்னு சொல்லிட்டார். வாங்கின கடைக்கு விறுவிறுன்னு போய் பில்லைக் காட்டினேன். அதிலே ஒரு மீட்டர்னு இருந்தது. மறு வார்த்தை பேசாம அதே கலரைத் தேடிக் கண்டு பிடிச்சு ஒரு மீட்டர் புதுசா கிழிச்சுக் கொடுத்துட்டாங்க. எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்திலே கொஞ்சம் கூட யோசிக்காம ஒரு சுங்குடி, ரெண்டு தேவேந்திரா, மாட்சிங் ஜாக்கெட் பிட்டு, நாலு மலையாள முண்டுனு வாங்கித் தள்ளிட்டேன்.

புடைவைக் கடைக்காரங்களுக்குத் தெரியாத சைக்காலஜியா? மேடம், உங்களோட பேட்டியைத் தொகுத்துச் சொல்லணும்னா, நுகர்வோர்கள் இயக்கத்தின் மூன்று தலைமுறை அங்கமான தாங்கள், 'வாங்கும் சக்தி' மிகுந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில், அடிக்கடி கடைக்குப் போவதையே ஓர் உடற் பயிற்சியாக மேற்கொள்வது, பொருள்கள் புதியதாகக் கிடைக்கும் என்றில்லாமல் பெண்களின் மூட்டுகளை பிரும்ம ராட்சதனாகத் தொடரும் நோய்களையும் பறக்க வைக்கும் என்று மகளிருக்கு அறிவுறுத்துவதற்கே என்கிற பரந்த நோக்கை உணரும் போது...

தம்பி! உனக்கு லாண்டிங் டிரபிள்னு நினைக்கிறேன். பேட்டியை நச்சுனு நகைச்சுவையாக முடிக்க நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். சிவப்புப் புடைவை, மஞ்சள் அப்பிய முகம், அம்பதுபைசா சைஸ் குங்குமம், நல்ல உயரம், நரைத்த தலை, மல்லிப் பூ, இரட்டை மூக்குத்தி இந்தக் கெட்டப்பில் என்னை வாடிக்கையாகப் பார்க்கும் கடைக்காரர்கள் எனக்கு என்ன ரகசிய பாஸ்வேர்டு வைச்சிருக்காங்க தெரியுமா?

தெரியாதே?

அங்காள பரமேஸ்வரி

(தாடையில் போட்டுக் கொண்டே)

அப்படியா?

இது சரி இல்லே. என்னைக் கேட்டிருந்தா நா பாஸ்வேர்டை இன்னும் பொருத்தமா மாத்தியிருப்பேன்.

என்னன்னு மேடம்?

அங்காடி பரமேஸ்வரின்னு! ●


இந்தியாவின் மொத்த வர்த்தகங்களில் 11.6 சதவிகிதம் அமெரிக்காவுடன் தான் நடத்தப்படுகின்றது. அடுத்து சீனா. 2000-01ல் சீனாவுடனான வர்த்தக மதிப்பு 6.2 சதவிகிதம். 2003-04ல் இது 8.4 சதவிகிதமாக உயர்ந்தது. 2003-04ல் சீனாவிற்கான ஏற்றுமதி 50 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அதே போல் இறக்குமதியும் 45 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. 2005-06ல் இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக மதிப்பு 18 பில்லியன் டாலர்களை எட்டும் என்று கணித்திருக்கிறார்கள்.



புள்ளி விவரப் புலி!

நோபல்:

வாழறதுன்னா ஒரு லட்சியத்தோட வாழணும். குறைஞ்ச பட்சம் வாழ்க்கையில ஒரு முறையாவது நோபல் பரிசு வாங் கணுங்கிற சின்ன லட்சியமாவது ஒவ்வொ ருத்தர் மனசுலயும் இருக்கணும்! (கொஞ்சம் ஓவரா இருக்கோ!) சரி, நோபலை, அந்தப் பரிசைப் பற்றித் தெரிஞ்சுக்க நீங்க போக வேண்டிய விலாசம் www.nobelprize.org. வருஷா வருஷம் யார் யார் எதுக்காக (இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம்) நோபலை அள்ளி யிருக்காங்கன்னு தெரிஞ்சுக்கலாம். இந்த வருஷம் டிசம்பர் 10ம் தேதி நார்வேயில் நோபல் பரிசை வாங் கப் போறவங்களுக்கு மனதார நம்ம வாழ்த்து களைச் சொல்வோமே!



320 ரூபாய் குச்சி ஐஸ்!

டௌன்லோட்:

உங்க வீட்டுல மீன் தொட்டி வைக்க ஆசைப்பட்டிருக்கலாம். கூடவே சோம் பேறித் தனமும் இருக்கும். என்ன பண்ணலாம்? www.geliosoft.com/3dfishcn.exe - இப்படி ஒரு அப்ளிகேஷன் கிடைக்குது. பேரு '3D பிஷ் ஸ்கூல்'. நல்ல பிள்ளையா அதை டௌன் லோட் பண்ணிக்கோங்க! இப்ப ஓர் அழகான மீன் தொட்டி உங்களுக்குச் சொந்தமாயிடும். அதுல நீங்க நல்ல தண்ணி ஊத்திக்கலாம். உப்புத்தண்ணி ஊத்திக்கலாம். எத்தனை மீன்கள் வேணுமோ எண்ணிக்கையைக் கூட்டிக்கலாம் குறைச்சுக்கலாம். கடற்தாவரங் களை, ஸ்டார் ஃபிஷ்ஷை வைச்சுக்கலாம். இயற்கையான சத்தத்தோட ஒரு நிஜமான மீன் தொட்டி உங்க சிஸ்டத்துல ரெடி. இந்த மீன்கள் ரொம்பச் சமர்த்து! சாப்பாடே கேட்காது. ஆனா என்ன, உங்க வீட்டு மியாவ்தான் உங்களை முறைச்சு, முறைச்சுப் பார்க்கும்!



வலைப்பதிவு:

உலக சாம்பியனுக்கும் வேல்ட் லெவன் அணிக்கும் இடையில் இரிக்கெட் போட்டி என்றதுமே எதிர்பார்த்தது போலவே பர பரப்புக்குக் குறைச்சல் இருக்கவில்லை. இதில் நாங்கள் மட்டும் ஏன் டீவிக்கு முன்னால் இருந்து கொண்டு விசிலடிச்சான் குஞ்சுகளாக குதிக்க வேண்டும் என்டுவிட்டு வண்டிகட்டிக்கொண்டு டெல்ஸ்ரா டொம் மைதானத்தை நோக்கி படையெடுத்தோம். மைதானத்துக்குச் சற்று தொலைவாக இறங்கி ஓட்டமும் நடையு மாக ஏதோ பூசைக்குப் பிந்திவிட்டது போல ரிக்கெட் கௌண்டருக்குப் போனேன். காசு குறைவாக இருந்தது. பின்னுக்கு இருந்து பார்த்தாலும் பர வாயில்லை என்றுவிட்டு 4000 ரூபா கொடுத்து அடி பெஞ்சு ரிக்கெட் வாங்கினேன். இடை யிலே சாப்பிடவே மனமில்லை. வயிறு காயக்கூடாது என்டறதுக்காக போய் சும்மா 1000 ரூபாவுக்கு சின்ன பன்னில் ஒளிச்சு வச்ச இறைச்சித்துண்டை வேண்டிச் சாப்பிட்டேன். பெரு மூச்செறிந்தவாறே 320 ரூபாவுக்கு சின்ன குச்சி ஐஸ்கிரீமை வாங்கி சூப்பிவிட்டு, பஸ் பிடித்து வீடு வந்து சேர்ந்தேன். (கூடாகும் அன்பர்களுக்கு ஒரு தகவல் 1 ஆஸ்திரேலிய டொலர் = 80 இலங்கை ரூபா) - alaiyosai.blogspot.com - வலைப்பதிவி லிருந்து

- வலைஞன்

"அருண் ஸார் கேஸட் வாங்கிட்டு வா!"



• சூட்கேஸ் நிறைய...



• ஓ.எஸ். அருண்

'ஷாப்பிங்' என்றதும் சந்தோஷமாகத் துள்ளிக் குதித்துக் கிளம்பும் இளம் பெண்கள் என்னவெல்லாம் வாங்குவார்கள்? டிரஸ், செருப்பு, சாக்லேட்ஸ், கைப்பை, வளையல்கள், மேக்கப் சாமான்கள் எக்ஸ்ட்ரா தானே? ஆனால், சென்னை, மாம்பலம் தம்பையா சாலையில் வசிக்கும் சித்ரா - தேசிகன் தம்பதியின் மகள் ரஞ்சனியின் ரசனையே வித்தியாசமானதுதான். பையை எடுத்துக்கொண்டு யார் கிளம்பினாலும், "அருண் சார் கேஸட் வாங்கிட்டு வா" என்கிறார். மியூஸிக் வல்ட், லக்ஷ்மி மியூசிகல்ஸ் போன்ற கேஸட் கடைகளை மிகச் சரியாக அடையாளம் வைத்திருக்கும் இவர், நேராகச் சென்று கர்நாடக இசைக் கலைஞர் ஓ.எஸ். அருணின் கேஸ்ட், சி.டியை எடுத்து, கையில் வைத்துக் கொண்டுவிட்டால், வேறு வழியே இல்லை; பில் போட வேண்டியதுதான்.

'இதில் என்ன ஆச்சரியம்?' என்கிறீர்களா? ரஞ்சனி மூளை வளர்ச்சி குன்றியவர். பத்து வயதுப் பெண் போல தோற்றமளிக்கும் இவரது நிஜ வயது இருபது!

"எங்கக் குடும்பத்துல எல்லாருக்குமே மியூஸிக்லே ஆர்வம் அதிகம். நான் முறைப்படி பாட்டு, வீணை கற்றவள். வீணை டீச்சராவும் இருக்கேன். வீட்ல எப்பவும் பாட்டு, பஜன்ஸ், வாத்திய இசைனு ஏதாவது ஒலிச்சுக்கிட்டேயிருக்கும். அந்தப் பின்னணியில தான் ரஞ்சனியும் பிறந்தா. ஆனா, பிறந்த நாலாம் மாசமே, அவ ஒரு எம்.ஆர். சைல்டுனு புரிஞ்சுடுச்சு. அவளைச் சாப்பிட வைக்க, தூங்க வைக்க ஏதாவது பாடிக்கிட்டே இருந்ததுல, அவளுக்கும் இசையில ஆர்வம் வந்துடுச்சு. வீணை கிளாஸ் நடக்கும்போது, கூடவே இருக்க ஆரம்பிச்சா. ஒரு தடவை, ரஞ்சனியை ஓ.எஸ். அருணோட கச்சேரிக்குக் கூட்டிட்டுப் போனப்போ, "சூப்பர்... சூப்பர்"னு தாளமெல்லாம் போட்டு ரசிச்சா. அதுக்கப்புறம் அருணோட தீவிர ரசிகையா மாறி, இப்ப கிட்டத்தட்ட பக்தையாவே மாறிட்டா!" என்கிறார் ரஞ்சனியின் தாயார் சித்ரா.

"நிஜம்தான். ரஞ்சனியின்

ஷாப்பிங் ஸ்பெஷல்!

கையில் எப்போதும் ஓ.எஸ். அருணோட கேஸட் இருக்கும். அதை யாராலும் பிடுங்கவே முடியாது. ராத்திரியில தூங்கும் போதுகூட யாராவது கேஸட்டை கையிலிருந்து எடுக்க முயன்றா, 'விலுக்'னு விழிச்சுப்பா. தினமும் காலைல "அம்மா, அருண் சாரோட சத்சங்கம் போடு; சாய் பஜன்ஸ் போடு"னு சொல்லிக்கிட்டே தான் எழுந்திருப்பா. அப்போ ஆரம்பிக்கிற ஓ.எஸ். அருணோட இசை, அவ தூங்கற வரைக்கும் சுழன்றுக்கிட்டேயிருக்கணும். அருணோட பாடல் ஒலிக்கிற டேப்ரிகார்டர் அவளுக்கு தெய்வம் மாதிரி, காலையில டிபனோ, காபியோ எதுவுமே அதுக்குத்தான் நைவேத்யம். "அருண் சார்... சாப்பிடுங்க"னு மழலைக் குரலில் உபசரித்த பிறகே சாப்பிடுவாள். ஓடித் தேய்ந்த காஸட் கொஞ்சம் மக்கர் செய்தால், டேப்ரிகார்டருக்கு விக்ஸ் தடவி, ஸ்வெட்டர் மாட்டி, ஹார்லிக்ஸ் பாட்டிலை பக்கத்தில் வைத்து "அருண் சாருக்கு உடம்பு சரியில்லை" என்பாள் கவலையோடு. அந்த கண்ணன் மீது மீரா கொண்டிருந்த பக்தி மாதிரி, இவளுக்கு அருண் மீது அப்படி ஒரு இமோஷனல் அட்டாச்மெண்ட்" என்கிறார் ரஞ்சனியின் பாட்டி. எந்த நேரத்தில் ஓ.எஸ். அருணின் எந்தப் பாட்டை ரஞ்சனி கேட்க விரும்புவாளோ என்று தெரியாததால், ஒவ்வொரு கேஸட்டிலும் நான்கு நான்காக வாங்கித் தந்திருக்கிறார் அப்பா தேசிகன். எல்லாவற்றிலும் ஓ.எஸ். அருணின் 'மியூஸிக் ஈஸ் டிவைன்' ஆட்டோஃகிராப்!



* தாயாருடன் ரஞ்சனி

ஓ.எஸ். அருணின் இசை மீது ரஞ்சனிக்கு இருக்கும் ஆர்வத்தைப் பார்த்து வியந்து போகும் நண்பர்களும், ரசிகர்களும் அருண் கேஸெட்டாகவே பரிசளித்ததில் ஒரு லெதர் சூட்கேஸ் நிறைய ஓ.எஸ். அருணின் கேஸட்டுகளும் சி.டிகளுமாகவே சேர்ந்திருக்கின்றன.

"இம் மார்டல் பஜன்ஸ்'ல 'ஏ' சைடுல மூணாவது பாட்டு எது? "ஓ.எஸ். அருணோட லேட்டஸ்ட் காஸட் ரிலீஸ் எது?" வயலின் வாசிக்கறது யாரு?" என அருணின் இசை பற்றி எந்தக் கேள்வி கேட்டாலும் 'சட் சட்' என்று பதில் வருகிறது.

"தீபாவளிக்கு என்ன வாங்கினே?" என்றால்...

"நிரபதி சுகதா... அருண் சாரோட புது காஸட்" என்கிறார் ரஞ்சனி, மழலைக் குரலில்!

ரஞ்சனியைப் பற்றி ஓ.எஸ். அருணிடம் கேட்டபோது,

"நிறையப் பேர் கச்சேரிக்கு வருவாங்க. கச்சேரி முடிந்ததும் "என் பொண்ணு உங்க ரசிகை; என் கணவர் உங்க ரசிகர்" என்றெல்லாம் உற்சாகமாகச் சூழ்ந்துக்குவாங்க. நானும் ரஞ்சனியும் அது போன்ற நார்மல் ரசிகை என்றுதான் நினைச்சேன். ஆனால் என்னோட கச்சேரி எங்கே நடந்தாலும், தன்னோட பெற்றோர்களுடன் வந்து, புது காஸட்டுல ஆட்டோகிராஃப் வாங்குவது தொடர்ந்து நடக்கவும்தான் என்ன ஏதுன்னு விசாரிச்சேன். அப்பதான் ரஞ்சனி ஒரு மூளை வளர்ச்சி குன்றிய பெண் என்பதே தெரிஞ்சுது. என் மீது அவருக்கு இருக்கும் தீவிர அபிமானம் பற்றிச் சொன்னபோது, ரொம்ப ஆச்சரியமா இருந்தது. 'நந்தலாலு,' 'மோகன கிரிதாரி' போன்ற என்னோட பாடல்கள் சிலவற்றை, தன்னோட மழலைக் குரலில் அவள் பாடறதை டேப் செய்து எனக்குக் கொடுத்தாங்க. அதைக் கேட்டுட்டு நான் அப்படியே நெகிழ்ந்து போயிட்டேன். இதுல என்னோட பங்கு எதுவுமில்லை. தட் ஈஸ் கிரேட்னெஸ் ஆஃப் மியூஸிக். மூளை வளர்ச்சி குன்றிய ஒரு குழந்தைக்கு மன அமைதியையும் சந்தோஷத்தையும் என் பாட்டு தருதுன்னா, அதைவிட பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்?" என்கிறார் கனிந்த குரலில்!

- டாலி

படங்கள்: ஸ்ரீஹரி

இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

P.R. ஜுவல்லரி தனது **20**-வது ஆண்டு விழாவை 22.10.2005 அன்று ஆனந்தமாகக் கொண்டாடுகிறது. வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றி. வாழ்க்கையில் அனைவரும் ஆனந்த மாக இருப்பதற்கு அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் முழுமுதற் கடவுள் ஆனந்த நர்த்தன வினாயகரை **40** கலைஞர்களை வைத்து **42** மாதங்களில் **890** KG எடையில் செய்து முடித்துள்ளோம்.

உலகிலேயே மிகப் பெரியது உயரம் **192** செ.மீ., அகலம் **115** செ.மீ., நீளம் **95** செ.மீ., சிற்ப சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டது. கண்காட்சிக்காக எங்கள் கடையில் 22.10.2005 முதல் வைக்கப்படும். அனைவரும் ஆனந்த நர்த்தன வினாயகரைத் தரிசித்து ஆனந்தமாக இருக்க வேண்டுகிறோம்.

ஆனந்தமாக நடனமாடும் ஆனந்த நர்த்தன வினாயகரை தினந்தோறும் வழிபட்டு தினசரி வேலைகளைத் தொடங்கினால் நாள் முழுவதும் ஆனந்தமாக இருக்கலாம்.

ஒவ்வொருத்தர் வீட்டிலும் இருக்க வேண்டிய படம்
ரூபாய் 20/- தபாலில் பெற ரூபாய் 30/- M.O. அனுப்பவும்.
விற்பனைக்காக ரூபாய் 10/- முதல் 10,000/-ம் வரை
108 மாடலில் வினாயகர் வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம்
தங்கத்தில் 2 கிராம் முதல் 8 கிராம் வரை
ரூ. 2300/- முதல் ரூ. 5000/- வரை உடனடியாகக் கிடைக்கும்.

முகவரி தெளிவாக எழுதவும்.

எமது சிறப்புப் பேட்டியை விஜய் டீ.வி.யில் வியாழன்தோறும் காலை 9.30 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

அன்றைக்கு எனக்கு ஆட்டோரிக்ஷாவில் செல்ல வேண்டி வந்தது. வரிசையாக ஆட்டோக்கள் நின்று கொண்டிருந்த போதும், சவாரிக்கு யாரும் வரவில்லை.

திடீரென்று என்னைக் கடந்து ஒரு கார் சென்று, பிறகு கண்ணாடியைத் தாழ்த்திய பிறகுதான், அவள் கை அசைத்தது தெரிந்தது. அவள் என் சிநேகிதி சரோஜா. என்னைக் காரில் ஏறச் சொல்லி சைகை காண்பித்தாள். நான் தயங்கினேன். பிறகு, ''நான் விமான நிலையத்துக்குப் போகிறேன். ரொம்ப தூரம்...'' என்றேன்.

"முன்னால் உள்ளே வந்து உட்கார். இது கார்" நிறுத்துகிற இடம் அல்ல. விமான நிலையம் செல்லும் சாலையில் தான் போகிறேன். என் மருத்துவ மனைக்கு... டிரைவர் உன்னைக் கொண்டுபோய் விட்டு விடுவார்'' என்றாள்.

நாங்கள் பல விஷயங்களில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும், வெளிப் படையாகப் பேசும் சுபாவம் இரண்டு பேரிடமும் இருந்ததால், சரோஜாவின் நட்பு எனக்கு நல்ல தோழமை தந்தது.

"எனக்கு வியப்பாக இருக்கிறது சுதா! எப்படி உனக்கு இன்று கார் இல்லாமல் போயிற்று? அந்த ஆட்டோ ஸ்டாண்டில் என்ன செய்து கொண்டிருந்தாய் நீ?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சரோஜா.

''என்னுடைய டிரைவர்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு விட்டார்கள். அதனால் ஆட்டோவைத் தேட வேண்டியதாகிவிட்டது."

"நீ ஒரு டாக்ஸி பிடித்திருக்கலாமே?"

"ஆட்டோவில் செல்வதில் என்ன தப்பு? பெங்களூரில் எத்தனையோ பேர் கார் இல்லாமல் பயணம் செய்வதில்லையா என்ன?"

''ஆனால், ஆட்டோக்கள் ஆபத்தானவை..."

"அப்படிப் பார்த்தால் சாலையில் பயணம் செய்வதே ஆபத்துத்தான். விமானத்தில்தான் பறக்க வேண்டும்!"

"இந்தக் காலத்தில் விமானங்கள் குறித்த நேரத்தில் புறப்படுவதில்லை. பிரயாணம் எனக்கு அலுத்துப்போய் விட்டது."

"நல்லவேளையாக, உனக்கு மருத்துவ மனையை விட்டு விட்டுக் கிளம்ப முடியாது என்பதால் நீ அதிகம் பயணம் செய்வதில்லை."

சரோஜாவின் கேள்விகள் எனக்குக் கல்லூரி நாட்களில் நடக்கும் நேர்முகப் பேட்டிகளை நினைவுபடுத்தின.

நட்பு மட்டும் போதுமே!


சரோஜாவும் அவள் கணவரும் ஒரு மருத்துவமனை நடத்தி வந்தனர். நல்ல வருமானமும் வந்தது. இரண்டு மகன்களுக்கும் திருமணமாகிவிட்டது. மூத்தவன் வெளிநாட்டில் இருக்கிறான். இளையவன் குடும்பத்தோடு இவர்களுடனே இருக்கிறான். பிரச்னைகள் ஏதும் இல்லை. இதைவிட ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்?

ஆனால் சரோஜா மகிழ்ச்சியாக

இல்லை!

சாதாரணமாக, "எப்படி இருக்கிறது உன் பிராக்டிஸ்?" என்று கேட்டு வைத்தேன்.

"ஒன்றும் கேட்காதே! பெங்களூரில் எக்கச்சக்கப் போட்டாபோட்டி. தனியாக பிராக்டிஸ் செய்து சம்பாதிப்பது பெரிய கஷ்டம். அதைவிட நம் குழந்தைகள் டாக்டர்களாக இல்லாமல் போய்விடுவது இன்னும் கொடுமை. சில வேளைகளில் இதை விற்றுவிட்டால் என்ன என்று நினைப்பேன். பணத்தை வங்கியில் போட்டு வைத்தால் ஆயிற்று. வட்டி, பாட்டுக்கு வந்து கொண்டிருக்கும். இந்தக் காலத்தில் நோயாளிகளும் சாமர்த்தியமாக இருக்கிறார்கள். போன வாரம் ஒருவர் என்னிடம் ஒரே கேள்வியை எட்டுத் தடவை கேட்டார். நவீன மருந்துகளும் சிகிச்சையும் இருந்துவிட்டால் இறப்பையேகூட வென்றுவிடலாம் என்று நினைத்துவிடுகிறார்கள். ஒருவேளை சிகிச்சை பலன் தராவிட்டால், உடனே நாம் பணம் கறந்துவிடுகிறோம் என்று புகார் சொல்ல ஆரம்பித்து



விடுகிறார்கள்.

''மிலிந்த் எப்படி இருக்கிறான்?'' என்று பேச்சை மாற்றினேன். மிலிந்த் வெளிநாட்டிலிருக்கும் அவள் பையன். கம்ப்யூடர் இஞ்சினியர்.

''அங்கேயும் வாழ்க்கை சுலபம் அல்ல. நிறையப் பேரை வேலையிலிருந்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எப்போது வேலை போய்விடுமோ என்ற பயத்திலேயே அவன் இருக்கிறான். அவன் மனைவியும் வேலை பார்க்கிறாள். வீட்டில் வேலைக்கு ஆள் கிடையாது. குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஒருவர். எனவே கன்னட மொழியில் ஒரு வார்த்தைகூடத் தெரியாது அவர்களுக்கு. எனக்கு இது மிக வருத்தமாக இருக்கிறது!''

டெய்ரி சர்க்கிளில் போக்குவரத்து நெரிசல். வாகனங்கள் வரிசையாக நின்றபடி, விதவிதமான ஹார்ன் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன.

''இப்படி தினசரி போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டு தவிப்பதை விட மைசூருக்குப் போய் வந்து விடலாம் என்று நினைப்பேன்!''

''பெரிய நகரங்களில் வசிக்க வேண்டி வந்தால் ஏற்படுகிற பிரச்னை இது. நீங்கள் ஹூப்ளியிலோ, மைசூரிலோ வசித்தால், எந்த இடத்துக்கும் 5 - 10 நிமிடங்களில் போய் விடலாம். ஆனால் சௌகரியங்களைப் பாருங்கள் இங்கே, சர்வதேச விமான நிலையம், ஏராளமான இஞ்சினீயரிங் கல்லூரிகள், நல்ல சீதோஷ்ணம், ஐடி தொழில் செழிப்பு...''

''அப்படி வா! மென்பொருள் இஞ்சினியர்களை எல்லாம் உங்களைப் போன்றவர்கள் இழுத்துக் கொண்டு போய் விடுகிறீர்கள். நல்ல ஊழியர்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. நிறையச் சம்பளம் தருகிற இடத்துக்கு அவர்கள் போய்விடுகிறார்கள். கௌரவ் குறை சொல்லிக் கொண்டிருந்தான்.


கௌரவ் சரோஜாவின் இரண்டாவது மகன். பெங்களூரில் இருந்தான்.

''கௌரவ் உன்னிடம் இருப்பதில் நீ மகிழ்ச்சி அடைந்திருப்பாய்!''

''அப்படி ஒன்றும் இல்லை. கௌரவ்வும் அவன் மனைவியும் கம்ப்யூட்டர் இஞ்சினியர்கள். இரண்டு பேருக்குமே நிறையப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வேறு எதற்குமே நேரம் இருப்பதில்லை. நானே கௌரவ்வுடன்கூடப் பேச முடிவதில்லை. அனிதாவுக்கும் வேலை சரியாக இருக்கிறது. பார்ட்டிகள், நண்பர்கள்... வீட்டில் குழந்தைகள்தாம் தவித்துப் போய்விடுகிறார்கள். எனக்கும் வயதாகி வருகிறது. சக்தியே இல்லை. இந்த இளையதலைமுறை இருக்கிறதே, ரொம்பத்தான் பேராசைப் படுகிறார்கள்!''

''உன் மாமியார் எப்படி?''

''அது தனிக்கதை! அவளுக்கு வயதாக ஆக, பிடிவாதமும் அதிகமாகிக் கொண்டு வருகிறது! இந்தக் காலத்தில் கூட, ஒரு சம்பிரதாயமான மாமியார் போலவே அவள் நடந்து



கொள்ளப் பார்க்கிறாள். என் மருமகள்கள் இரண்டு பேருமே என்னை லட்சியம் பண்ணுவதில்லை. நான் இரண்டு தலை முறைகளுக்கு நடுவே சிக்கிக் கொண்டு அவதிப்படுகிறேன்!"

மொத்தத்தில் அவளுடைய சிக்கல்கள்தாம் பிரதானமாக இருந்தன.

"சரோஜா, எதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கை?" என்று கேட்டேன்.



சரோஜா என்னைப் பார்த்துச் சிரித்தாள். என் அறியாமையைப் பார்த்துத் தானோ என்னவோ!

"ஒருவேளை, வாழ்க்கை, சமூகம், நாடு எல்லாமே இத்தனை டென்ஷன் இல்லாமல் இருக்கிற நிலையாக இருக்கலாம். மகன்களுக்கு எல்லாம் திருமணம் ஆகிவிட்டாலும்கூட, எல்லோரும் மனம் திறந்து பேச வேண்டும். காலம் மாறிவிட்டது. எனவே வயதானவர்கள் இளையவர்களுடன் இணைந்து போக வேண்டும். நோயாளிகள் எல்லோரும் டாக்டர்கள் தங்களால் இயன்ற அளவு முயன்று பார்க்கிறார்கள் என்பதையும், அவர்கள் கடவுள்களல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் இதை உணர்ந்து ஒரு சிறந்த சமுதாயமாக மாற முனைய வேண்டும். அப்போது ஒவ்வொருவருமே மகிழ்ச்சியாக இருப்பார்கள்."

விமான நிலையம் போகும் சாலை வந்துவிட்டது. நான் இறங்க வேண்டிய இடமும் நெருங்கிவிட்டது. அதற்கு முன்னால் அவளிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்.

"சரோஜா, நீ கற்பனை ராஜ்யத்தில் மிதக்கிறாய். இது எந்த நாட்டிலும் நடக்கப் போவதில்லை. நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால் நாம்தான் நம் அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும். உலகத்தின் போக்கை அல்ல. உலகமே சிக்கல்கள் நிறைந்ததாக இருக்கிறது. நம் ஆசைகள் குப்பையும் கூளமுமாக உலகத்தை நிரப்பி வைக்கிறது. உன் பாதங்களை நீ இந்த உலகத்தில் பரிசுத்தமாக வைக்க நினைத்தால், அதற்கு இரண்டே வழிகள்தாம் இருக்கின்றன. ஒன்று உலகத்தையே ஒரு மூடியால் மூடி வைத்து விடு. அல்லது நீ உன் பாதங்களை மட்டும் மூடிக் கொள்ளச் செருப்பு அணிந்து கொண்டு விடு!"

சரோஜா குறுக்கிட்டாள்: "பிரமாதம்! யார் கற்றுக்கொடுத்தார்கள் இதை உனக்கு?"

எனக்கு இறங்க வேண்டி வந்ததால், கதவைத் திறந்தபடியே, "குருவின் வாயிலிருந்தே இதைக் கேட்கக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. அவர் 2500 வருடங்களுக்கு முன்னாலேயே பிறந்துவிட்டார். அவரை நாங்கள் புத்தர் என்று அழைப்போம்!" என்றேன்.

"எப்போது நீ புத்த மதத்தில் சேர்ந்தாய்?"

"இப்போதுதான். உன் முன்னால் தான். புத்தரைத் தெரிந்துகொள்ள புத்த மதத்தில் சேர வேண்டியதில்லை! அவரது போதனைகள் நல்முத்துகள். அவற்றைப் புரிந்துகொண்டால் போதும்!"

(நிறைந்தது)

தொகுப்பு : **சாருகேசி**

இது ஒரு வித்தியாசமான கனவு. இந்த நூற்றாண்டில் இப்படியொரு கலைவண்ணச் சிறப்புடைய கற்றளியை - கற்கோயிலை உருவாக்க வேண்டும்; அதை நடமாடும் தெய்வமாய் இன்றைக்கும் ஞான -குருவாய்த் திகழும் காஞ்சி ஸ்ரீ மகாஸ்வாமிகளின் பெருமித நினைவுகளைப் போற்றுகிற வகையில் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஒரு சாமானியர் கண்ட கனவு.

இந்திய ரெயில்வேயில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் 'பிரதோஷம் மாமா' என்றறியப்பட்ட பிரதோஷம் வேங்கடராமய்யர். ஓய்வுக் காலப் பயன்கள் அத்தனையையும் செலவிட்டு, மாதம் தவறாமல் மகாஸ்வாமிகளின் பிறந்த நக்ஷத்திரமான அனுஷத்தைத் கொண்டாடி மகிழ்வதற்காகவே காஞ்சித் திருத்தலத்தில் வந்து தங்கியிருந்த பெரியவர் அவர்.

இந்த ஆரோக்கியமான பக்தி விதை இன்றைக்குச் செழித்துப் படர்ந்து மகா விருட்சமாக விளங்கக் கைகொடுத்திருப்பது SSSMM Trust என வழங்கப்படுகிற ஸ்ரீ





மகாலக்ஷ்மி மாத்ருபூதேஸ்வரர் அறக்கட்டளை. இது 1989ல் தொடங்கப்பட்ட போது காஞ்சி மகாஸ்வாமிகளின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக என்று பாட சாலைகளில் வேதப் பயிற்சி, கோசாலைகள் பராமரிப்பு, தமிழ் பக்தி இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், திருமுறைகள், திவ்யப் பிரபந்தம், திருவாய்மொழி போன்றவற்றைப் பரப்புவது, மற்ற இந்திய மொழிகளில் பஜன் பாடல்களைப் பாடுவது என்றே குறிக்கோள்கள் அமைந்தன.

இப்போது காஞ்சிபுரம் அருகே பாலாற்றங்கரை வடபுறத்தில் கல் உளிகளின் இடைவிடாத 'ணங்', 'ணங்' என்கிற இனிய நாதம் விதம் விதமான அலைநீளங்களில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. யானை யானையாய்க் கருப்புக் கற்களும் வெள்ளைக் கற்களும் குவிந்து கிடக்கின்றன. எப்போதும் எரிந்து கனன்று

கொண்டிருக்கும் உலைக் களங்களில் செந்நிற இரும்புத் துண்டங்கள் காய்ந்து சம்மட்டி அடி வாங்கிக் கூராகிக் கொண்டிருக்கின்றன. ஏதோ சோழ பாண்டியர் பல்லவர் காலத்திலோ, நாயக்கர் காலத்திலோ பிரும்மாண்டமான ஆலயத் திருப்பணிகள் நடைபெறுகிறபோது அந்தச் சூழலில் இருப்பது போன்ற ஒரு புனிதமான உணர்வு உண்டாகிறது. ஆனால் அவ்வப்போது மின் ஆற்றலின் துணையோடு கல்வெட்டுச்

மெய்ப்படும் கனவுகள்!



சக்கரங்கள் சீறிக் கொண்டு சுற்றுகிற ஒலி மட்டுமே நமக்கு இந்த நூற்றாண்டை நினைவூட்டுகிறது.

காஞ்சி மகாஸ்வாமிகள் மணி மண்டபம்தான் இப்படி ஓர் அற்புதமான ஆற்றங்கரைத் திருக்கோவிலாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

பன்னிரண்டு கோடி ரூபாய்த் திட்டமதிப்பில் 1997 ஜூன் 7 ஆம் நாள் இந்தத் திருப்பணியின் ஆகம சாஸ்திரத் தொடக்கமான சங்குஸ்தாபனம் நடந்தபோது, சதாசிவம் - எம்.எஸ். தம்பதிகள் முன் நின்று நடத்தி வைத்தார்கள்.

ஓரிருக்கை என்னும் பெயரில், பாலாற்றங்கரையில் அமைந்துள்ள மிகச் சிறிய கிராமம் இன்னும் சில பத்து ஆண்டுகளுக்குள் மிகச் சிறந்த ஆன்மிகக் கலை மையமாக விளங்கப் போகிறது. அடுத்துவரும் நூற்றாண்டுகளில் இந்தக் கலைக்கோவில் பத்மஸ்ரீ விருது பெற்ற எஸ்.எம். கணபதி ஸ்தபதியாரின் பக்தி பூர்வமான ஈடுபாட்டோடு கூடிய கலைப்பணியை வரலாறாகச் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறது. ஸ்தபதியாரின் குமாரர் சங்கர ஸ்தபதியாரும் முழுமையான ஈடுபாட்டோடு திருப்பணியை மேற்பார்வையிடுகிறார்.

முந்நூறு கலைஞர்கள் இந்தத் திருப்பணியில் இரவு பகல் என்று தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய நூற்றிருபது பேர், தற்காலிகக் குடியிருப்புக்களில் குடும்பத்தோடு தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் தேவகோட்டை, காரைக்குடிப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள்.

நல்ல ஆகிருதியோடு கூடிய ஆறு யானைச் சிற்பங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே சற்றுச் சிறிய இரண்டு யானைகள் முழுமையாக உருவாகிக் 'காற்றாட' நின்று கொண்டிருக்கின்றன. இவை தவிர இரண்டு குதிரைகள். இரண்டு சிம்மங்கள், நான்கு புரவிகள், இரண்டு தேர்ச் சக்கரங்கள் எல்லாம் வடிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

8 அடிக்கு 10 அடி அளவில் பாறைத் தகடுகளில் புடைப்புச் சிற்பமாகப் பல காட்சிகளை உருவாக்கும் பணி நடைபெறுகிறது. ஏறக்குறைய நிறைவடைந்துவிட்ட சிற்ப வேலையில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த கோலத்தில் தட்சிணாமூர்த்தி திருமேனியும், அதனடியில் இமயமலை வடிவத்தின் கீழே ஆதிசங்கரர் தம் சீடர்களோடு ஞானோபதேசம் செய்யும் காட்சியும் இடம் பெற்றுள்ளது. இன்னொரு சிற்பத்தில் ஒரு கரத்தில் வேலுடன் நடனமாடும் சிவபெருமானின் காட்சி ஏதோ மாமல்லபுரத்து அர்ச்சுனன் சிற்பத் தொகுதியைப் போன்ற நேர்த்தியில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மணிமண்டபப் பகுதி வேலைகளின் கட்டுமானம் ஏறக்குறைய நிறைவடைந்த மாதிரிதான். நாம் போயிருந்த போது, மணிமண்டபத்தின் விதானத் திறப்பை மூடுவதற்காக 'ப்ரும்மயந்திரப் பிரதிஷ்டை' நடந்தது. இது நமக்கு எதிர்பாராத அருள் விருந்தாக அமைந்தது. இனிமேல், விதானத்துக்கு மேலே ஐந்து நிலைகளில் மாடம் எழுப்பப் போகிறார்கள்.

மணிமண்டபத்துக்கு உள்ளே புனிதப் பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்படும். இவற்றை ஏற்கெனவே ராமலிங்க பட் என்னும் குஜராத்தி பக்தர் ஒருவர் நன்கொடையாக வழங்கியுள்ளார். மண்டபத்துக்குள் பரமாச்சார்யாரின் திருமேனி வடிவமும் இடம் பெறவிருக்கிறது. மண்டபத்தின் எதிரில் அமையும் செவ்வக வடிவிலான அரங்கில் நான்கு வரிசைகளில் சிற்ப வேலைப் பாடுகளோடு கூடிய நூறு தூண்கள் நிறுவப்பட உள்ளன. முன்னால் சொல்லப்பட்ட குதிரைத் தூண்கள், யானைகள், சக்கரங்கள் போன்றவை இந்த மண்டத்தை அணி செய்வதற்காகத்தான் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

மகாஸ்வாமிகளின் நூறு ஆண்டு ஞான வாழ்வை உருவகப்படுத்தும் விதமாக இந்த நூறு தூண்களை நிறுவுகிறார்கள். ஆதிசங்கர் அடியொற்றி வந்த அறுபத்தேழு பீடாதிபதிகளின் திருமேனி வடிவங்களையும்



புடைப்புச் சிற்பமாக உருவாக்கு கிறார்கள்.

திருப்பணிக்கு முதன்முதலாகக் கற்கள் கிடைத்த கதையே படு சுவாரஸ்யமானது. சென்னை மயிலாப்பூரில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருக்கோவிலை எழுப்புவதற்காக வந்திருந்த கற்களின் ஒரு பகுதி பயன்படுத்தப்படாமல் இருந்தது. திட்டமிட்டபடி, அவர்கள் முழுதும் கற்கோயிலாக உருவாக்காமல் அதை சிமெண்ட் கட்டடமாக உருவாக்கியதே காரணம். கணபதி ஸ்தபதியாரின் குமாரர்தான் அந்த ராமகிருஷ்ணர் திருக்கோவிலை உருவாக்கியவர்.

பயன்படாமல் கிடந்த அந்தக் கற்களை ஓரிருக்கை கிராமத்துக்குக் கொண்டுவந்தார்கள். பிரதான மண்டபத்தின் அடித் தளப்பகுதி முழுவதையும் இந்தக் கற்களைக் கொண்டே எடுப்பித்திருக்கிறார்கள். இதைப் பற்றி உணர்ச்சி வயப்பட்டவராய்ச் சொல்கிறார் சதாசிவம் - எம்.எஸ். அம்மாவின் பேரன்புக்குரிய ஆத்மா.

''என்னமோ பகவான் ராமகிருஷ்ணரும் பரமாச்சார்யாரும் ரகஸ்யமான ஒப்பந்தம் பண்ணிண்ட மாதிரி இருக்கு. பகவான் தனக்குன்னு வாங்கிண்ட இந்தக் கற்களைப் பரமாச்சார்யார் மணிமண்டபத் திருப்பணிக்குத் தந்திருக்கிற மாதிரி தோணறது.''

கணபதி ஸ்தபதியார் இந்த மணிமண்டபத் திருப்பணியைத் தம் வாழ்நாள் சாதனையாகவே உருவாக்கி வருகிறார். இதுபோல் ஓர் ஆலய திருப்பணி அண்மைக் காலத்தில், இத்தனை பெரிய அளவில் எங்குமே நடைபெற்றதில்லை என்கிறார்.

''கடைசி விநாடிவரை இந்த மணி மண்டபத் திருப்பணி பற்றிய சிந்தனையுடனேயே இருந்தவர் சதாசிவம் மாமா அவர்கள். அமரராவதற்கு முதல் நாள் மாலையில்கூட ஒரு மணி நேரம் போல் வேதமூர்த்தியோடு மண்டபத் திருப்பணி பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். நான்தான் இடையில் புகுந்து வேதமூர்த்தியை விடுவித்து அழைத்துப் போனேன்'' என்றார் ஆத்மா.

தன்னுடைய குறைவான ஓய்வூதியத்தில் மாதம் பத்து ரூபாய் வீதம் அனுப்புகிற எளியவர்கள் முதல் ஆயிரம், லட்சம் என்று திருப்பணிக்குக் காணிக்கை தருகிறவர்கள் நிறைய உண்டு. எந்த ஒரு கட்டத்திலும் நிதிப் பற்றாக்குறை என்ற காரணத்தால் திருப்பணி வேலைகள் தடைப்பட்டதே இல்லை என்கிறார்கள். இந்த நூற்றாண்டில் இப்படிச் சொல்கிற மன வளம் எத்தனை பேருக்கு இருக்கிறது?

ஒரு மகத்தான ஆன்மிகக் கலைப் பணியில் நம்முடைய சிறுபங்கும் சேரட்டும் என்று எண்ணுகிற அன்பர்கள் அணுக வேண்டிய முகவரி இதோ : Sri Sri Sri Mahalakshmi Mathru Bhutheswarar Trust (SSSMM Trust), 'சிவம் - சுபம்', 12, முதல் மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085. வலைத் தளத்தில் www.manimantapam.org என்ற முகவரியிலும் விவரங்கள் கிடைக்கும்.

- சுப்ர.பாலன்

வண்ணப்படங்கள்: யோகா



அருண் சரண்யா


ஏனோ அந்தக் கானகத்தில் சில நாட்களாக எந்த விலங்குக்கும் போதிய உணவு கிடைக்கவில்லை.

அப்போது அங்கு வந்து சேர்ந்தது ஒரு சிறுத்தை. வெளி ஊரிலிருந்து வந்திருந்த அது, தன் இயல்புக்கு மாறாக சாத்விகமாகக் காணப்பட்டது.

''கவலைப்படாதே. சீக்கிரமே நிலைமை சரியாகும்'' என்று கண்ணீர் பொங்க எருதை அணைத்து ஆறுதல் கூறியது. அடுத்து மானை அணைத்து சமாதானப்படுத்தியது. பின் மெல்ல அந்த இடத்தை விட்டு அகன்றது.

அருகிலிருந்த முள்ளம்பன்றிக்கு மட்டும் பெரும் சோகம். 'என்னை அணைத்து ஆறுதல் கூறவில்லையே இந்தச் சிறுத்தை. என் பெயரும் அசிங்கமாக இருக்கிறது. என் உடலும் அசிங்கமாக இருக்கிறது. அதனால்தானே இந்த அலட்சியம்'

மறுநாள் எருது மற்றும் மானின் எலும்புகளை மரத்தின்கீழ் காணும் போது அது ஒருவேளை உணரக் கூடும், அழகும் பாதுகாப்பும் ஒரே சேரக் கிடைத்துவிடுவதல்ல என்பதை.



கட்டிலின்மீது ஸ்ரீலதா சோர்வாகப் படுத்திருந்தாள். அருகில் சென்ற அனுஷா தோளைத் தொட்டாள். சட்டெனத் திரும்பிய ஸ்ரீலதா, அக்காவின் முகத்தைப் பார்த்த மறுகணமே அவள் மடியில் முகத்தைப் பதித்தாள்.

"என்ன ஸ்ரீ? என்ன ஆச்சு?".

"எனக்கு இப்போ மூணு மாசம்" என்றாள்.

அனுஷாவுக்குள் ஜிவ்வென்று ஆனந்தம் பரவியது. இவளுக்கா? தன்னையே சுற்றி வந்த இந்தச் சிறுமிக்கா? "உனக்குக் கல்யாணம் ஆனதும் என்னை விட்டுட்டுப் போயிடுவியா?" என்று குமுறலுடன் அடிக்கடிக் கேட்டு தான் இல்லை, இல்லை என்று கூற ஆறுதலடைந்த இவளா இன்று கருவைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள்?

அதேசமயம், திருமணத்தைத் தொடர்ந்து இப்படி ஒரு நிகழ்வை யாருமே எதிர்பார்ப்பதுதான் இயல்பு என்பதையும், தனக்கு இதில் இவ்வளவு வியப்பு ஏற்படுவதில் பொருளில்லை என்பதும்கூட அவளுக்குத் தோன்றவே செய்தது.



விலங்குகள்

இப்போது அனுஷாவுக்கு இன்னொரு சந்தேகம் எழுந்தது. தாய்மைப் பேறு அடைந்தத் தகவலை தெரிவித்தபோது தங்கையின் முகத்தில் மலர்ச்சித் தெரிந்ததா? இல்லையோ? சட்டென வேறொன்றும் நினைவுக்கு வந்தது. தகவல் தெரியாத ராஜன் கூடத்தில் அமைதியின்றி காத்துக் கொண்டிருப்பார். கார்த்திக் அவரிடம் இந்தச் செய்தியை வெளிப்படுத்தாமலும் இருக்கக்கூடும்.

"ஒரு நிமிஷத்திலே வரேன் ஸ்ரீ" என்றபடிக் கிளம்பினாள்.

8

கூடத்துக்குச் சென்றபோது ராஜன் மகிழ்ச்சி பொங்க கார்த்திக்கின் கையைக் குலுக்கிக் கொண்டிருந்தான்.

"கொஞ்ச நாளைக்கு ஸ்ரீயை எங்ககூட வச்சிக்கிட்டு அனுப்பறோம்" என்றாள் அனுஷா.

"அப்புறம் பார்க்கலாமே" என்றான் கார்த்திக்.

அதற்குமேல் எப்படிப் பேச்சைத் தொடர்வது என்று இருவருக்கும் புரியவில்லை. தங்கையின் கருத்தரித்தல் தொடர்பான மருத்துவ விஷயங்களை உறுதி செய்துகொள்ள மீண்டும் அவள் இருக்கும் அறைக்குள் நுழைந்தாள்.

அங்கே கட்டிலில்



உட்கார்ந்தபடி முழங்கால்களுக்கு நடுவே முகத்தை வைத்திருந்த ஸ்ரீலதா மிக மெல்லிய குரலில் "அக்கா, மீன் தொட்டியைப் பார்த்தியா?" அதிலே என்ன இருக்குன்னு கவனிச்சியா? இன்னிக்குக் கூட ரெண்டு எலிகளை அது சாப்பிடுவதற்காக போட்டார் இவர்" என்றாள்.

"இதோ பாருங்க வெறும் சாக்லெட்டோட நிறுத்திக்கக் கூடாது. ஒரு பத்து லட்டாவது நீங்களே உங்கக் கையாலே செய்து கொடுக்கணும். நாலு மாசத்துக்கு முன்னே செஞ்சீங்களே அதே டேஸ்ட் இருக்கணும். ஆனால், அந்த மாதிரி கோலிகுண்டு சைஸிலே இருக்கக் கூடாது"

ஆனந்த் பேசிக்கொண்டே போக அந்த உரிமை அனுஷாவுக்குப் பிடித்திருந்தது. தங்கை கருத்தரித்த மகிழ்ச்சியில் இவனும் பங்கு கொள்வது உவப்பாக இருந்தது.

"பத்து லட்டுதானே? கொடுத்தால் போச்சு. கோலிகுண்டு சைஸ் கூடாதுன்னா எந்த அளவிலே இருக்கணும்? அதையும் சொல்லிடேன்"

"உம்ம்... திருப்பதி லட்டு சைஸ் ஓ.கே.வா?"

"இப்போதைய திருப்பதி லட்டா? அந்தக்கால திருப்பதி லட்டா?" என்றாள் அனுஷாவும் குறும்பாக.

"அது உங்க சாய்ஸ்" என்ற ஆனந்த் அங்கிருந்த பத்திரிகை ஒன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினான்.

அனுஷா சற்றுத் தயக்கத்துடன் பேச்சைத் தொடர்ந்தாள். "ஆனந்த் உன்னிடம் ஒண்ணு கேட்கணும்?"

"என்ன? வீட்டு வாடகையை ஏத்தப் போறீங்களா? அப்படின்னா நான் இப்போ டமாரச் செவிடு".


"கவலைப்படாதே. மாடி போர்ஷனிலே உன்னோடு இன்னொரு நபர் தங்கினாலும் நாங்கள் அதிக வாடகை கேட்டுட மாட்டோம்."

"ஐயோ, நேரடியாக விஷயத்துக்கு வாங்க அக்கா. கல்யாணத்துக்கு நான் ரெடி. பொண்ணுப் பார்த்தாச்சா?"

ஆனந்த் சட்டென இப்படிக் கேட்பான் என்பதை அனுஷா எதிர்பார்க்கவில்லை. அன்றொரு நாள் "அனு, விஷயம் தெரியுமா? ஆனந்த் உன்னை மாதிரி ஒருத்தி கிடைச்சாதான் கல்யாணம் செஞ்சுக்குவானாம்" என்றது நினைவுக்கு வந்தது.

"நீ ராஜன்கிட்டே என்னமோ சொன்னியாமே" தன்னைப் பெயரிட்டே பிறரிடம் குறிப்பிடலாம் என்பதை ராஜன் அனுஷாவிடம் அழுத்தமாகவே கூறியிருந்தான். அதைத் தொடர்ந்து ஆனந்திடமும் ஸ்ரீலதாவிடமும் பேசும் போது மட்டும் கணவனைப் பெயரிட்டே குறிப்பிடும் பழக்கத்தை அனுஷா வளர்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் அண்ணா கிட்டே ஆயிரம் விஷயத்தைச் சொல்வேனே? நீங்க எதைச் சொல்றீங்க? இன்னிக்கி எதுக்காக எல்லாத்திலேயும் சுத்தி வளைச்சு கில்லி அடிக்கிறீங்க?... வெய்ட் வெய்ட். நீங்க சொல்ல வந்தது எனக்குப் புரிஞ்சு போச்சு. 'ஸ்ரீலதாவுக்கு மூணு மாசம்னு சொல்றீங்களே. அவளுடைய அக்காவுக்கு அப்போ எத்தனை



"பர்ச்சேஸ் முடிய நேரமாகும், 'மாட்னி' பார்த்துட்டு வந்துடுங்கன்னு சொன்னே, போயிட்டு வந்துட்டேன்; இப்ப 'ஃபர்ஸ்ட் ஷோ'-வும் போயிட்டு வந்துடுங்கன்னு சொல்றது நியாயமா நிர்மலா?"

- சீர்காழி வி. ரேவதி

மாசம்? அவங்கதானே சீனியர்?'னு கேட்டேன். இது தப்பா?"


அனுஷா ஆடிப் போனாள். ஆனந்த் இப்படிக் கேட்டதை ராஜன் அவளிடம் கூறவில்லை. இந்த ஆனந்துக்கு எது வுமே தப்பில்லை.

ஆனால் இப் போது யோசிக் கும்போது எல் லோருமே அப் படித்தானே நினைப்பார்கள் என்று தோன் றியது. ''நம்ம ஸ்ரீகூட அம்மாவாகப் போறா. உன் சௌகரியம் எப்படி?'' என்பதுபோல் ராஜன் பேச்சைத் தொடங்கி மீண்டும் மனநல மருத்துவரிடம் போகும் பேச்சை எடுப்பானோ என்று அவள் நினைத்தாள். அப்படி எதுவும் நடக்கவில்லை.

"நான் துணி துவைக்கணும். அப்புறமா வரேங்க்கா" என்றபடி ஆனந்த் கிளம்பி விட்டான். நல்லவேளை!

அரை டஜன் ஆப்பிள் பழங்களை அதிக பேரம் பேசாமல் வாங்கிக்கொண் டாள் அனுஷா. மாமாவாவது முடிந்த போது வந்து பார்த்துச் செல்கிறார். மாமி யைப் பார்த்துதான் நிறைய நாட்களாகி விட்டன. மாமியைச் சந்தித்துவிட்டு அப் படியே ஸ்ரீ குறித்த நல்ல தகவலையும் நேரிலே கூறிவிடலாம் என எண்ணி னாள். கூப்பிட்டால் ராஜனும் கூடவே வந்திருப்பான். ஆனால் மாமியுடன் கொஞ்சம் அதிக நேரம் தங்க வேண்டும் போல் இருந்தது. மாமிக்கும் அதில்தான் திருப்தி.

இதோ இன்னும் இரண்டு தெருக் கள் தாண்டி மாமாவின் வீடு. அப் போது ஒரு வீட்டின் முன் நின்றிருந்த அந்தக் கார் அனுஷாவின் கவனத்தைக் கவர்ந்தது. இது கார்த்திக்கின் கார். தன் நண்பர் யாரையாவது பார்க்க வந் தானா? அல்லது இங்கு யாருக்காவது சிகிச்சை அளிக்க வந்திருக்கிறானா?



''யார் வீட்டுக் கும் இவர் மெடிக்கல் விஸிட் செய்வதில்லைக்கா. யாராய் இருந்தாலும் க்ளினிக்குக்கோ, ஆஸ்பத்திரிக்கோதான் வரணும்" என்று ஸ்ரீலதா ஒருமுறை குறிப் பிட்டது நினைவுக்கு வந்தது.

சில நொடிகள் பொறுத்து ஒரு வீட் டிலிருந்து கார்த்திக் வெளிப்படத் தொடங்கினான். ''எனக்கு நீ கட்டாயம் வேணும்'' என்றான் அந்த வீட்டின் உட்புறத்தைப் பார்த்தபடி ஆங்கிலத் தில். பிறகு காரில் ஏறிக் கிளம்பிச் சென்றான். தன்னை அவன் பார்க்க வில்லை என்பதை அனுஷா உணர்ந்து கொண்டாள்.

வாசலுக்கு வந்து கார்த்திக்கின் காரைப் பார்த்துக் கை அசைத்த வளைக் கண்டதும் அனுஷாவின் இதயம் வெகுவேகமாகத் துடிக்கத் தொடங்கியது. மல்லிகா!

வேலையிலிருந்து நிறுத்திய பிறகும் கார்த்திக் எதற்காக அவள் வீட்டுக்கு வர வேண்டும்? கிளம்பும்போது கார்த்திக் கூறிய வாக்கியமும் கலவரப் படுத்துவதாக இருக்கிறதே.

மலர்ச்சி குறைந்து போன தங்கையின் முகம் மனதுக்குள் வந்தது. எப்படியும் தெளிவு தேவை - அது கசப்பானதாக இருந்தாலும்.

'மாமியைப் பிறகு பார்த்துக் கொள் ளலாம்'.

மல்லிகாவின் வீட்டுக்குள் நுழைந் தாள் அனுஷா.

(தொடரும்)



• பிரசாந்த் வெளிநாடு சென்றால் கம்ப்யூட்டர் தொடர்பான பொருள்களைத் தேடி அலசுவார்.

• தீபாவெங்கட் சீரியல் நேரம் போக பாண்டி பஜார் சாருலதா சாரிஸ் ஷாப்பிங்கில் இருப்பார்.

• சரிகா (கமல்) ஃப்ளாட்பாரம் ஷாப்பிங் செய்வதில் வல்லவர்.

• கோபிகா சென்னை தி.நகரிலிருந்து நிறைய அள்ளிக் கொண்டு போய் கேரள உறவினர்களுக்குப் பரிசாக அளிக்கிறார்.

• பர்தா போட்டுக் கொண்டு ஷாப்பிங் செய்கிறார் நமீதா.

• பட்டுச்சேலை என்றால் மட்டும் சென்னையில் ஷாப்பிங். மாடர்ன் உடைகள் என்றால் தன் சொந்த ஊரான பெங்களூரில்தான் ஷாப்பிங். சென்னையில் உமாவின் டேஸ்ட்டுக்கு மாடர்ன் டிரஸ்ஸஸ் இல்லையாம்.











* மும்பை பாந்த்ரா பகுதியில் உள்ள 'இன்டர்கோல்ட்' என்னும் நகைக்கடையில் சதாவை அடிக்கடிப் பார்க்கலாம். எல்லாம் வைர வேட்டைதான்!

* சென்னை, தி.நகர் என்.ஏ.சி. நகைக்கடையின் வாடிக்கையாளர்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீப்ரியா, குஷ்பூ, விஜயலலிதா.

* நடிகர் பிரகாஷ்ராஜ் பர்ஸில் பணத்தைவிட கிரிடிட் கார்டுகளே அதிகம் இருக்கின்றன.

* நகைச்சுவை நடிகர் சிட்டிபாபு 'மியூஸிக் வோர்ல்டில்' அடிக்கடி தென்படுகிறார். அவர் விரும்பி வாங்கிய லேட்டஸ்ட் கேஸட் 'சிவகாசி'.

* முன்பெல்லாம் தங்கையுடன் ஷாப்பிங் செய்து வந்த ஐஸ்வர்யா தனுஷ், தற்போது மாமியாருடன் கடை கடையாக ஏறி ஷாப்பிங் செய்கிறார்.

* 'சாராக் டின்' பார்ட்டி ஷர்ட்ஸை விரும்பி அணிகிறார் சிம்பு. உபயம் : தோழிகள்.

* பூம்புகார், கைரளி, காவேரி, லேபாக்ஷி போன்ற கலைக் கூடங்களுக்கு அடிக்கடி பவதாரிணியுடன் விஸிட் செய்கிறார் திருமதி யுவன்ஷங்கர் ராஜா.

* கல்கத்தாவின் பிரபல டிரஸ் டிஸைனர் நிஷா பேரி, ஐஸ்வர்யாராய்க்காக ஷாப்பிங் செய்கிறார்.

* த்ரிஷாவுக்கு சென்னை ரங்கநாதன் தெருவில் ஷாப்பிங் செய்வதென்றால் கொள்ளை ஆசை. ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக பெரிய கடைகளில் விதியே என்று ஷாப்பிங் செய்கிறார்.

* ஜீன்ஸ், டாப்ஸுக்கு மேட்சாக செருப்புகளை ஷாப்பிங் செய்வதுதான் அசினின் ஒரே பொழுதுபோக்கு.

* விஜய்க்குத் தேவையானப் பொருள்களுக்காக ஷாப்பிங் செய்பவர் சங்கீதா விஜய். இளைய தளபதியின் வேலை பணம் தருவது மட்டும்தானாம்.

* சிநேகா துபாய்வாசி என்பதால் அவரது வீட்டில் எங்கு பார்த்தாலும் துபாய் பொருள்கள்தான் அதிகமாகக் காட்சி தருகின்றன.

-'எம்டி பர்ஸ்' எமி

டார் ஷாப்பிங்!

சந்தைக்கு வந்த கிளிகள்!

'கொக்கரக்கோ' என கோழி கூவும் நேரத்தில் ஆரம்பிக்கிறது திருச்சி, தாயனூர் சந்தை. காலை ஐந்தரை மணியிலிருந்து காலை ஏழு மணிக்குள்ளாக கோழிச் சந்தை வியாபாரம் முடிந்து விடுகிறது. அதன்பின் 'ம்மே... ம்மே...' பிஸினஸ். காலை எட்டு மணி வாக்கில் அணி அணியாக மாடுகள் வந்து சேர்கின்றன. காலை பத்தரை மணிக் குள்ளாக ஆட்டம் காலி, படுதா தூக்கு என்கிற கணக்கில் மாடுகளில் பலவும் விற்பனை யாகிவிடுகின்றன. திருச்சி சுற்று வட்டா ரத்தில் மணப்பாறை மாட்டுச் சந்தைக்கு அடுத்த இடத்தில் தாயனூர் சந்தை இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

காலை பத்தரை மணிக்குள் நிறைவு பெற்று விடுகிற கால்நடைச் சந்தைகளின் உத்தேச வணிகம், எவ்வளவு தெரியுமா? மூன்று லட்ச ரூபாய் கோழிகளும், ஏழு லட்ச ரூபாய் ஆடுகளும், ஏழு லட்ச ரூபாய்க்கான மாடுகளும் வியாபாரம் ஆகின்றனவாம்.

மதியம் ஒரு மணியிலிருந்து சந்தையின் உள்ளே டென்ட் அடித்து ஒவ்வொரு கடையாக வரத் துவங்கு கிறது. சுற்று வட்டாரக் கிராமங்களில் தென்னந் தோப்புகள் அதிகம். மூட்டை மூட்டையாக தேங்காய் வந்து இறங்குகிறது. மற்ற ஊர்ச் சந்தைகளுக்கு இங்கிருந்து தேங்காய் போகிறது. குழு மணி கிராமத்தி லிருந்து கடந்த இருபது வருடங்களாக தொடர்ந்து வந்து தாயனூர் சந்தையில் மொத்தமாக தேங்காய் வியாபாரம் செய்துவருபவர் கு.பெ. மணிமாறன். "இந்தச் சந்தையில மட்டும் எத்தனை ஆயிரம் ரூபாய்க்கு வித்துட்டுப் போனாலும் சரி. எந்த மூலையில வந்து கடை போட்டு வியாபாரம் பண்ணிட்டுப் போனாலும் சரி, சுங்க வரியோ, கடை வாடகையோ கிடை யாது. யார் வேணாலும் வந்து கடை விரிச்சு வியாபாரம் பண்ணலாம். மொத்தத்துல இது ஒரு தர்ம சந்தைங்க" என்கிறார் கு.பெ. மணிமாறன்.

குடை ரிப்பேர், டார்ச்லைட் ரிப்பேரி லிருந்து துவங்கி காலணிகள் பழுது பார்த் தல் வரை வரிசையாய்க் கடைகள். அரி



• "அளந்து போடுங்க!"



• சூடு பிடிக்குது



ஷாப்பிங் ஸ்பெஷல்!

வான், கத்தியல், களைக் கொத்தி, மண் வெட்டி, கடப்பாரை போன்ற விவசாயப் பொருள்கள். அடுத்ததாக கட்டில் கயிறு ("புளிச்சை நார் உடம்புக்கு நல்லதுங்கோ!"), செருப்புக் கடைகள். கோரைப் பாய் அங்காடிகள். உப்பு பாக்கெட்டிலிருந்து அனைத்து வகை மளிகைப் பொருள்கள். காய்கறிக் கடைகள். ஆப்பிளில் துவங்கி ஆரஞ்சு வரை கூறு கூறாக வியாபாரம். ஜட்டி, நைட்டி, ரெடி மேடு ஆடைகள்.

சிற்றுண்டிச் சாலை ஒன்று. சூடாக வடை, பஜ்ஜி பலகாரக் கடைகள். சந்தையின் வாயிலில் சமோசா



• ஜில் சர்பத்!



• சூடா சமோசா...

கடை சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தது. நாலைந்து நபர்கள் மடித்துத் தர வாணலியில் சமோசாவைப் போட்டு எடுக்கிறான் ஒரு பையன். மொறு மொறு சமோசா விறு விறுவென விற்றுப் போகிறது. கூலாக ஐஸ் சர்பத் கடை ஒன்று. மூணு ரூபாய்க்கு ஐஸ் சர்பத். ஜில்லெனக் குடித்துவிட்டு நகர்கின்றனர் சந்தைக்கு வருபவர்கள்.

ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி, கிளி ஜோசியம் சொல்லிக் கொண்டிருந்தார். இரட்டைக் கிளிகளில் ஒன்று, வெளிவந்து சீட்டுக் கட்டை உருவிக் கொண்டிருந்தது. அதனை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்தனர், மூன்று சிறுமிகளும் ஒரு பெண்ணும்.

"தாயான ஒனக்கு மகாலட்சுமியே தேடி வந்திருக்கு. ஒன்னோட புள்ளைங்க மூணுக்கும் சரஸ்வதி தாயே நாடி வந்திருக்கு. உன் கையில காசு பணம் புரளும். புள்ளைங்க மூணும் படிப்புல சிறந்து விளங்கும். வேறென்ன வேணும் ஒனக்கு?" என ராகமுடன் பாடுகிறார் கிளி ஜோசிய செல்லம்மா. கவலை



• செல்லக் கிளியே!

யுடன் உட்கார்ந்திருந்தவர்களின் முகங்களில் மகிழ்ச்சிப் புன்னகை! சந்தையில் அவர்கள் வாங்கிய பொருள்கள், இரண்டு துணிப் பைக்குள். கிளி ஜோசியக்காரம்மா சொன்ன டானிக் வார்த்தைகள் மனசுக்குள்!

கட்டுரை, படங்கள் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

சீதையின் மகள்கள் 12

கனிமொழி

சீதை என்றபோது
நெருப்பை தீண்டச்
சொன்னாய்
மண்மகள் அறியா
மலரடி பதிய உன்னைப்
பின்தொடர்ந்தேன்
உனது கழிவிரக்கத்தின்
மூட்டையைச் சுமந்தபடி.


முலைகொய்து மதுரை
எரித்தேன்
பத்தினி என்று பாதம்
பற்றினீர்.

இளமையும் இளவரசனும்
துரத்திய போதும்
தலை மழித்துத் துறவறம்.
மணிமேகலை என்று
ஆர்ப்பரித்தீர்.

ஆண்டவன் முதல்
அடிமை வரை என்
கற்பைக் காப்பதில்
கருத்தாய் இருந்தீர்.

நீ எய்யும் ஆயுதங்கள்
என்னைத் துளைப்பது
அறியாமல், உன்
படைத்தளபதியாக
அணிவகுத்து நிற்கிறோம்
விழுப்புண்களை
மாலை என்று
நம்பியபடி.

ஓவியம்: மருது





அமரர் கல்கி

சென்ற பதினைந்து வருஷ காலத்தில் நான் எத்தனையோ முறை ரயிலில் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால், முத்தலைபுரத்திலிருந்து சமுத்திரபுரிக்குக் கைதியாகப் போனதைப் போல் அவ்வளவு சந்தோஷமான பிரயாணம் செய்ததே கிடையாது. முதலாவது, மூட்டை முடிச்சு, பெட்டி, படுக்கை முதலியவை ஒன்றுமில்லை. அவற்றைப் பாதுகாக்கும் தொல்லையோ, ஏற்றியிறக்கும் கஷ்டமோ, போர்ட்டர்களுடன் கூலி சம்பந்தமான தகறாரோ ஒன்றும் கிடையாது. இரண்டாவது, ஸ்டேஷனிலே இடித்துப் பிடித்துக்கொண்டு, வியர்வை கொட்ட, மூச்சுத் திணற, படாத பாடுபட்டு டிக்கட் வாங்கும் பிரம்மப் பிரயத்தனம் இல்லை. மூன்றாவதாக, ரயில் வந்து நின்றதும் உள்ளேயிருப்பவர்கள் வெளியே பிடித்துத் தள்ள, வெளியேயுள்ளவர்கள் உள்ளே பிடித்துத்தள்ள மல்யுத்தம் புரிந்து ரயிலேறும் அபாரப் பிரயாசையும் கிடையாது. ரயில் பிரயாணத்தை இன்பமயமாக்க வேறென்ன வேண்டும்.

சமுத்திரபுரி சிறையில் நான் ஒன்பது மாதம் இருந்தேன். இந்தச் சிறையில் எங்களுக்கு வேலையொன்றும் கொடுக்கவில்லை. ஒவ்வொரு அறையின் வாசலிலும் உள்ள பிறையில் கொஞ்சம் தேங்காய் மட்டைநார் எப்போதும் கிடந்துகொண்டிருக்கும். அதைக் கொண்டு நாங்கள் கயிறு திரிப்பதாகப் பாவனை. ஆனால் அதை ஒருவரும் கையால் தொடுவதேயில்லை. யாராவது தீவிரக் கடமைப்பற்று வாய்ந்தவர்கள் அதை எடுத்துத் திரித்துவிட்டால் வார்டர் சண்டைக்கு வந்துவிடுவான். நாளைக்கு வேறு மட்டைநார் கொண்டு வந்து போட வேண்டுமேயென்று அவனுக்குக் கவலை! பின்னர், மேற்சொன்ன 'பாவனை' எதற்காகவென்றால், யாராவது 'விஸிடர்'கள் வரும்போது அவர்களுக்குக் காட்டுவதற்காக. 'விஸிடர்'கள் வரும் காலங்களில் மட்டும், நாங்கள் எல்லாரும் அவரவர்களுடைய அறையில் வாசலில் உட்கார்ந்திருக்க வேண்டுமென்பது நாங்களும் சிறையதிகாரிகளும் செய்துகொண்ட ஒப்பந்தம். இத்தகைய ஒப்பந்தம் ஏதேனும் செய்து கொள்ளாவிட்டால், சுமார் 250 அரசியல் கைதிகளைக் கட்டி மேய்ப்பது எவ்வளவு பிரயாசையான காரியம் தெரியுமா? காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களில் அக்கிராசனம் வகித்தவர்களுக்குத்தான் அந்தப் பிரயாசை நன்கு தெரியும்! பிரேரணை, திருத்தப் பிரேரணை, கண்டனத் தீர்மானம், 'நம்பிக்கையில்லை'த் தீர்மானம், இவ்வளவுக்கும் தப்பினால் உண்ணாவிரதம் - இவையெல்லாம் ஒவ்வொன்றாய்க் கிளம்பி விடுமன்றோ?

முத்தலைபுரம் சிறைக்கு வரும் 'விஸிட'ரைப் பற்றிச் சொன்னேனல்லவா? இங்கே வந்த மற்றொரு விஸிடரைப் பற்றியும் சொல்ல வேண்டும். ஆனால் இவர் வெறும் ராவ் பகதூர் மட்டுமல்ல; சென்னை சர்க்காரின் நிர்வாக சபை அங்கத்தவரான வெள்ளைக்கார துரை. இவர் வந்த அன்று கைதிகள்



"நான் ஏன் கவலைப்படணும்?"

புக்குக் காத்திராமலே 'முன்போல் தேசத் தொண்டுதான் செய்யப் போகிறேன்' என்றேன். "நான் அதைக் கேட்கவில்லை. ஜீவனோபாயத்துக்கு என்ன செய்யப் போகிறாய்? உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டாயே?'' என்றார் துரை.

நேயர்களே! அந்தச் சமயம் எனக்கு ரோஸம் நிரம்ப வந்தது என் பதை ஒப்புக்கொண்டு விடுகிறேன். "இந்த நாட்டில் அன்னிய நாட்டார் பலர் வந்து பிழைக்கிறார்கள். நான் ஏன் என் ஜீவனோபாயத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?'' என்று காரமாய்ப் பதில் சொன்னேன். ஆனால் அந்தக் காரம் துரைக்குக் கொஞ்சம் உறைத்திருக்க

எல்லாரும் அவரவர் அறையின் வாசலில் நிற்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. சில இளைஞர்கள் இதை ஆக்ஷேபித்தபோதிலும் பெரியவர்கள் 'சிறைக்கட்டுப்பாட்டை அநுசரித்து நிற்க வேண்டியதுதான்' என்று தீர்மானித்தார்கள். அதன்படியே நின்று கொண்டிருந்தோம். துரை ஒவ்வொருவராக ஏறிட்டுப் பார்த்துக்கொண்டு அதிவேகமாய் நடந்து வந்தவர் என்னருகில் வந்ததும் திடீரென்று நின்றபோது, உண்மையாகவே எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பக்கத்தில் வந்து கொண்டிருந்த சூபரிண்டெண்டைப் பார்த்து "இந்த இளைஞன் எதற்காகத் தண்டிக்கப்பட்டான்? எத்தனை காலம்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார். ஓஹோ ஹோ! என்னைத் தண்டித்த ஸப் கலெக்டரைப் போலவே இவரும் என் மீது இரக்கம் கொண்டு விட்டாரென்று அறிந்தேன். அந்த இரக்கத்தைப் போக்கிவிட வேண்டுமென்று தீர்மானித்தேன். அதற்குச் சந்தர்ப்பமும் கிடைத்தது. "வெளியில் போனதும் என்ன செய்ய உத்தேசமென்று கேளுங்கள்'' என்று துரை சிறைச்சாலைத் தலைவரிடம் சொன்னார். நான் அவருடைய மொழிபெயர்ப்

வேண்டும். "அப்படியானால் உன் வாழ்நாள் முழுதும் சிறையிலேயே கழிக்கப் போகிறாயா?'' என்றார் துரை. நேயர்களே! இந்தக் கேள்வியின் உட்பொருளைக் கூர்ந்து நோக்குங்கள்; துருவி ஆராயுங்கள். (தமிழ் மொழியின் பெருமையே பெருமை. எவ்வளவு இடத்துக்குப் பொருத்தமான வார்த்தைகள்!) அதன் கருத்தென்ன? பிரிட்டிஷ் அரசாங்கத்தை அசைக்க முடியாது. பாரத நாடு எப்போதும் அடிமையாயிருக்க வேண்டியதுதான். நீ சிறையிலேயே கிடக்க வேண்டியதுதான்'' என்பதல்லவா? "துரையே! உங்கள் மனத்திலிருப்பது எனக்கு ஒன்றும் ஆச்சரியத்தைத் தரவில்லை. ஆனால் நாங்கள் எப்போதும் அடிமையாகவே இருப்போம் என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள்'' என்று நான் பதில் சொன்னேன். ஆனால் இந்தப் பதில் முழுவதையும் துரை கேட்கவில்லையென்பதைச் சொல்லிவிட வேண்டும். அவர் மேற்படி கேள்வியைப் போட்டுவிட்டு அதிவேகமாய் மேலே நடந்து விட்டார்.

- 'கண்ணீரால் காத்த பயிர்'
வானதி பதிப்பகத்திலிருந்து

சென்னை சௌகார்பேட்டையில் 1900ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. உம்மிடி பங்காரு செட்டியார் (விபிசி) ஜுவல்லர்ஸ். சதம் அடித்தும் ஸ்டெடியாக தி.நகர் பனகல் பார்க் அருகே இன்றைக்கும் கம்பீரமாக, இயங்கிக் கொண்டிருக்கிறது. மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவரான உம்மிடி சுதாகர், வெற்றிக் கதையின் ரகசியத்தைப் பகிர்ந்து கொண்டார்.

"உம்மிடி என்பது எங்களது குடும்பத்தின் பெயர். பங்காரு என்றால் தங்கம் என்று அர்த்தம். என் தாத்தா உம்மிடி பங்காரு செட்டியார் அவர்களால் சென்னை சௌகார் பேட்டையில் 1900ஆம் வருடம் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டதுதான் வி.பி.சி. ஜுவல்லர்ஸ். குடியாத்தத்திலிருந்து தமது சகோதரர்களோடு சென்னைக்குப் பிழைக்க வந்தவர் கூட்டாக நகை வியாபாரத்தை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கோலார் தங்க வயலிலிருந்து நகைகள் வாங்கி வந்து சிறிய அளவில் வியாபாரம் செய்தனர். அப்பொழுதெல்லாம் ஒரு சவரன் நகை பதின்மூன்று ரூபாய்க்கு விற்கப்பட்டதாம். 1935ல் அதே இடத்தில் கடையை விரிவு படுத்தினர். அப்படியே 1950ல் சைனா பஜாரில் புதிய கடையைத் துவங்கியவர்கள், 1962ல் தி.நகரில் புதிய கிளையைத் தொடங்கினார்கள். இந்தக்



தங்கம்

காலகட்டத்தில்தான் நானும் பரம்பரைத் தொழிலை கைவிடக் கூடாது என்று நகை வியாபாரத்தில் இறங்கினேன். குட்டையைப் போல் ஒரே இடத்தில் தேங்கி விடாமல் வியாபாரத்தை தக்கசமயத்தில் பெருக்கிக்கொண்டே போக வேண்டும் என்பதை முன்னோர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

அப்பொழுது தி.நகர் எப்படி இருந்தது?

1960களிலேயே சென்னையில் தி.நகர் பெரும் வளர்ச்சி பெறும் என்கிற கணிப்பில்தான் புதிய கடையை அங்கே துவங்கினோம். இன்றிருப்பது போல் துணிக்கடைகளும் நகைக்



● உம்மிடி சுதாகர் - ராஜேஷ் உம்மிடி

கடைகளும் வரிசையாக இருக்காது. ஆங்காங்கே ஓரிரண்டு கடைகள். குறைவான ஜனநடமாட்டம். நல்லி, குமரன் சில்க்ஸ் மட்டுமே பிரதானக் கடைகளாக அப்பொழுது இருந்தன. இந்தச் சமயத்தில் 1962ல் மொரார்ஜி தேசாய் கொண்டு வந்த சட்டத்தால் நகை வியா

பொங்கும் கைராசி!

பாரம் கொஞ்சம் பிசுபிசுத்தது. கடத்தல் வழியாக இந்தியாவுக்கு நகைகள் சட்ட விரோதமாகக் கொண்டு வரப்படுவதால் 22 கேரட்டில் தங்க நகை செய்யக் கூடாது. 18, 14 கேரட்டில்தான் செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். ஆனால் இதற்கு எதிர்ப்புகள் வந்ததால் நாளடைவில் இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

ஏற்கெனவே அரை நூற்றாண்டு காலமாக தங்க நகை வியாபாரத்தில் காலூன்றி நிலைத்து நிற்பதால் புதிதாகத் துவங்கப்பட்ட தி.நகர் கிளையையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த திட்டங்களைத் தீட்டினோம். நகைக் கடைகளிலேயே சீட்டு கட்டி நகை வாங்கும் முறையை நாங்கள்தான் முதலில் அறிமுகப்படுத்தினோம். இந்தத் திட்டம் மக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றது. கல்யாண சமயங்களில் தடுமாறாமல், முன் கூட்டியே சேமித்து நகைகளை வாங்கும் யுக்தியை மக்களும் ஏற்றுக்கொண்டதால்

வி.பி.சி. தமது பாரம்பரிய கௌரவத்தை இத் திட்டத்தின் மூலம் மேலும் நிலைநிறுத்திக் கொண்டது. இதைத் தொடர்ந்து 1979ல் ஸ்பென்சர் பிளாசாவிலும் ஒரு கிளையைத் தொடங்கினோம். இந்நிலையில், கூட்டுத் தொழிலாக இருந்த வி.பி.சி. 1980களில் பிரிவைக் கண்டது. தந்தையின் இரு சகோதரர்களும் தனியே பிரிந்து போய்விட, பங்குகள் பிரிக்கப்பட்டு, தி.நகரிலேயே எங்களுக்கென்று இரு கிளைகளை உருவாக்கி விட்டோம்.

செய்கூலி, சேதாரம் இல்லாமல் சில வகைக் கடைகளில் விற்கிறார்கள். இது சாத்தியம்தானா என்று எங்களுக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. இது வாடிக்கையாளர்களைக் கவர செய்யப்படும் யுக்தி என்றே நினைக்கிறோம். சரி, நாங்கள் மக்களுக்கு இலவசமாகத் தருகிறோம் என்றாலும் பொற்கொல்லர் எப்படி இலவசமாகச் செய்வார்? அப்படி விளம்பரப்படுத்தினாலும் அதன் விலையிலேயே செய்கூலி சேதாரத்தின் மதிப்பும் மறைந்திருக்கும் என்பதுதான் உண்மை. வருடப் பிறப்பு, அட்சயதிருதி என இரண்டே நாட்களில் மட்டும் உண்மையான செய்கூலி சேதாரம் இல்லாமல் நகைகளை விற்கிறோம். கண்ணியமாக வியாபாரம் செய்தால் பரம்பரை பரம்பரையாக உங்களைத் தேடித்தான் வருவார்கள். இதற்கு நாங்களே உதாரணம்.

தங்க நகை வாங்கும்பொழுது எப்படி ஏமாறாமல் இருப்பது?

'Assaying Centre' என்கிற இந்திய அரசாங்கத்தின் சோதனை மையங்கள் அனைத்துப் பெருநகரங்களிலும் உள்ளன. இவர்கள் '916 ஹால்மார்க் தங்கம்' என்று சான்றிதழ் அளிக்கும் தங்க நகைகளையே வாங்க வேண்டும். பொற்கொல்லரிடமிருந்து நகைகள் செய்து தருவித்த பின்பு நாங்கள் நேராக Assaying Centreக்கு அனுப்பி '916 ஹால்மார்க் கோல்டு' என்கிற தரச்சான்றிதழை வாங்கித்தான் மக்களுக்கு விற்கிறோம். இதுமாதிரியான நகைகளை இந்தியா முழுவதும் ஏற்றுக் கொள்வார்கள்.

தங்க நகை மீதான மோகம் இப்பொழுது எப்படியிருக்கிறது?

உலகிலேயே இந்தியாவில்தான் அதுவும் சென்னையில்தான் தங்க நகைகள் மலிவாகக் கிடைக்கிறது. இங்கு விற்பனை வரி 2.1%க்குக் குறைந்தபின்பு, தங்க நகைகளின் விலையும் குறைந்து விட்டன. இந்தியாவில் விற்பனையாகும் நகைகளில் 40 சதவிகிதம் தென்னிந்தியாவில்தான் விற்பனையாகிறது. கடந்த பத்து வருடங்களாக அட்சய திருதி அன்றைக்கு நகை வியாபாரம் கூடுதலாக இருபதைந்து சதவிகிதம் விற்பனையாகிறது. தமிழகத்தில் 'வாட்' வரிவிதிப்பு முறை கொண்டு வந்தால் மேலும் தங்க நகையின் விலை குறையும்.

நான்காவது தலைமுறையாக, எனது மகன்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உலகிலேயே சுலபமாக விற்கக் கூடிய பொருள் தங்கம் மட்டும்தான். அதே போல, தான் அணியும் நகைதான் வித்தியாசமானது என்று நகைமீது பெண்கள் கொள்ளைப் பிரியம் வைக்கும் வரைக்கும் இதற்கு எக்காலத்திலும் அழிவேயில்லை.

நல்ல குணாதியசமுள்ள மனிதரை தங்கமானவர் என்று கூறுவோம். அப்படிப்பட்ட தூய்மையான தங்கத்தை மக்களுக்கு வழங்குவதையே தொழிலாக செய்வதைவிட வாழ்க்கையில் வேறென்ன பெருமை வேண்டும்?"

-ச.ந.கண்ணன்

படங்கள் : **ஸ்ரீஹரி**



"நான் ஷாப்பிங் கிளம்பறேன்!"
"நாளை மறுநாள் வெளியூர் போக வேண்டியிருக்கே. அதுக்குள்ள வந்துடுவியா?"
- அம்பை தேவா

மனஸை எப்படி இழுப்பது?



கோயிலுக்குப் போகிறோம். பிள்ளையார் ஸந்நிதியில் நிற்கிறோம். அப்போதைக்கு ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸு குவிந்த மாதிரிதான் இருக்கிறது. அப்புறம் கையை, காலை சொறிந்து கொள்கிறோம். மனஸு பிய்த்துக்கொண்டு கிளம்பி விடுகிறது! அப்படியே எந்தக் குப்பைத் தொட்டிக்கு வேண்டுமானாலும் ஓடட்டும் என்று விட்டு விடுவதா? அப்படி விட்டு விடாமல், நல்லதிலேயே, தெய்வ ஸம்பந்தமாகவே அந்த மனஸை இழுத்தால்தானே தேவலை? எப்படி இழுப்பது? பாழும் மனஸுக்கு இந்த விக்நேச்வர மூர்த்தி, தொப்பையும் தொந்தியுமாக இத்தனை அழகாக உட்கார்ந்திருந்துங்கூட, அவரிடமே தொடர்ச்சியாக ஒட்டிக் கொண்டிருக்க முடியவில்லையே! 'பரவாயில்லையப்பா!' என்று இங்கேதான் நம் ஸமயாசார புருஷர்கள் ஆறுதல் தர வருகிறார்கள். 'மனஸின் நேச்சர் அப்படித்தான் அப்பா! அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் திருத்தி நிலையாக ஒருமுகப் படுத்த முடியுமப்பா! அதற்கு எதிலும் 'சேஞ்ச்' வேண்டும். தெய்வ ஸம்பந்தமாகவுங்கூட அப்படி வேண்டும். அதையும்தான் நம்முடைய மதம் தருகிறதே! விக்நேச்வரரிடம் ஈடுபாடு குறைகிறதா, அழாதே! இதோ 'சேஞ்சா'க ஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதி, அப்புறம் இன்னம் பல 'சேஞ்ச்'கள் - அம்மன், ஸ்வாமி, தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, நடராஜர், மநுஷ்ய ரூபத்தில் வந்த அறுபத்து மூவர் என்று எல்லாம் ஒன்று சேர்த்துத் தானே கோவில் என்று வைத்திருக்கிறோம்? ஒவ்வொன்றிடமும் ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸ் ஈடுபட்டுக் கும்பிட்டு விட்டுப் போயேன். மொத்தத்தில் ஒரு கணிசமான நாழி உன் மனசு தெய்வ ஸம்பந்தமாகவே ஈடுபட்டிருக்கும்' என்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

இந்திரா சௌந்தர்ராஜன்

ஐந்தாலானது (பஞ்ச) இந்த பூமி!
ஆறாவதை (அறிவு) அறிந்தவன் மனிதன்
ஏழாவதை (சப்தம்) பேசிப் புரிந்து
எட்டுவதே என் திருநாமம்!
- ஸ்ரீ கிருஷ்ணன்



தங்களது கண்ணன் விக்ரகம் குறித்து கேள்வி கேட்ட அந்த அழுக்குச் சித்தரை ஒரு அதிர்வும் ஆனந்தமுமான பார்வை பார்த்தார் சீனு. ஆனால் அவர் பார்வையோ, அங்கே கரை மேல் ராஜம் பிடித்துக்கொண்டு நிற்கும் அந்த மூங்கில் பிரம்புப் பெட்டி மேலேயே இருந்தது.

ஆற்றில் இறங்கி ஒரு முழுக்குப் போடலாம் என்று எண்ணி படிகளில் இறங்கத் தொடங்கியிருந்த சீனு, திரும்ப மேலேறி அவரருகே சென்றார். அவரிடம் ஒருவித இசை லயமான சிரிப்பு.

"பெரியவா யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

- சீனுவிடம் பணிவான ஆரம்பம்.


"நானா... பார்த்தா தெரியலை? நான் ஒரு பரதேசி"

"அப்படிச் சொல்லப்படாது... எங்காத்து கண்ணன் குணசீலத்துக் காவிரில குளிச்சதை எப்ப உங்களால சொல்ல முடிஞ்சதோ, அப்பவே உங்க ஞானதிருஷ்டி பத்தி எனக்குத் தெரிஞ்சு போச்சு"

"ஏதோ மனசுல பட்டதைச் சொன்னேன்... அதுக்கு நீங்க ஞானதிருஷ்டின்னுல்லாம் பேர் வைக்க வேண்டாம். அப்படி ஒரு திருஷ்டி எனக்கிருந்தா, நான் ஏன் ஊர் ஊரா சன்னதி, சன்னதியா அலையணும்? எனக்கு எங்க போனா முக்தி கிடைக்குமோ அங்க நேரா போய்ட்டு போறேன்."

- அவர் தம்மைத் தாழ்த்திக்

எங்கே என் கண்ணன்?



12

கொண்டு பேசியது, சீனுவை மிகவும் கவர்ந்துவிட்டது. சட்டென்று குனிந்து அவரது பாதத்தைத் தொட்டு வணங்கினார். அவரும் ஆசீர்வதித்தார். அப்படியே அவரிடம் "உங்கக் கண்ணனை நானும் கொஞ்சம் சேவிச்சுக்கிறேனே..." என்றார். சீனுவுக்குப் புரிந்துவிட்டது. ராஜத்தை அருகில் அழைத்து, பிரம்புப் பெட்டியைத் திறந்து பட்டுத் துணிக்குள் படுத்துக்கிடந்த கண்ணனை ஏந்திப் பிடித்தார்.

அந்த அழுக்குச் சித்தரும் பார்த்தவராக "ஆஹா... என்ன ஒரு அழகு! இவன் கற்பக தருவோட உடைஞ்சு விழுந்த கிளைக் கட்டையால ஆனவன்..." - என்றார்.

"என்னது.... கற்பகத் தருவோட உருவமா இது?"

"எனக்கு அப்படிதான் தோணுது. இந்தக் கண்ணன், இனி ஊர் சுத்தப் போறான். மாயைக்குப் பேர் போனவன் இவன். இவனுக்குக் கண்ணும் உதடும் போதும். உதட்டோட ஒவ்வொரு விதமான சுழிப்புக்கும் ஒரு அர்த்தமிருக்கு. அதேபோல இவன் பாக்கற விதம் இருக்கே..."

"ஸ்வாமி என்னென்னவோ சொல்றேளே..."


"தோணறது சொல்றேன். பத்ரம்... இந்த கண்ணனை பத்ரமா வெச்சுக்கோ. இல்லை, இப்பவே இங்கேயே எகிறிக் குதிச்சுக்கூட ஓடிப் போயிடுவான். கண்ணனா இவன்...? கள்ளன்! கள்ளன்!"

"நான் என் உயிரைக்கூட விடுவேன்... ஆன இவனை விடமாட்டேன். இது எங்காத்து சொத்து. நான் சாப்பிடத் தவறியிருக்கேன். ஆனா இவனுக்கு திருவாராதனை பண்ணத் தவறினதில்லை..."

"எதுக்கு இத்தனை நான்...? மூடிய பாத்திரம் எவ்வளவு ஆழமான சமுத்திரத்துக்குள்ள விழுந்தாலும் அதுக்குள்ள ஒரு சொட்டுத் தண்ணி இறங்காது. இந்த நான் 'கோஷ்டி எவ்வளவு பூஜை பண்ணாலும் ஆசாரமா இருந்தாலும் பிரயோஜனமில்லை. எல்லாத்தையும் இந்தக் கண்ணன் உனக்குப் புரிய வைப்பான் பார்..."

- அவர் சட்டென்று ஒருமைக்கு மாறியவராக தத்துவமாகப் பேசியவர், "சரி, நான் கிளம்பறேன்... நான் நான் என்கிற நீ இன்னைய உன்னோட திருவாராதனத்தை ஆரம்பி" என்று கூறிக்





கொண்டே அங்கிருந்து விலக ஆரம்பித்தார்.

ராஜம் கொஞ்சம் குழம்பி விட்டிருந்தாள்.

''ஏன்னா... அவர் என்ன சொல்லிட்டுப் போறார்? நீங்க விடாம பூஜை பண்றேன்னு சொன்னது ஒரு தப்பு மாதிரில்ல சொல்லிட்டுப் போறார்...''

''அப்படித்தான் ராஜம் எனக்குத் தோண்றது. என்னன்னு தெரியலை... சொல்லலை அந்த கௌசிக். ஆனாலும் பொடிப் பையன்... அவ்வைப் பாட்டியைப் பார்த்து மாட்டுக்கார பையனா அந்த முருகன் கேட்ட மாதிரி என்னைப் பார்த்துக் கேட்டான். இப்ப இங்க இந்த பெரியவர்...''

''மூடிய பாத்திரம்... சமுத்திரம்னு ஏதேதோ சொல்லிட்டுப் போறாரே... உங்களுக்குப் புரிஞ்சுதா?''

- ராஜம் கேட்க, சீனு பதில் சொல்லாமல் நர்மதைக்குள் இறங்கத் தயாரானார்.

ஆற்றில் இறங்கும் முன் அதை வணங்க வேண்டும். அதிலும் ஜீவ நதிகளில் இறங்கும்முன் அதன் நீரை எடுத்துத் தலையில் புரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். பிறகு மனம் முழுக்க தெய்வ நினைப்போடு இறங்க வேண்டும். ஆறு ஒன்றில்தான் ஒரு மனிதன் ஒருமுறை குளித்த நீரில் மறுமுறை குளிப்பதில்லை. குளத்து நீர் அருட்கதிர்களை வாங்கி வைத்திருப்பவை. ஆற்று நீரோ நமது பாவங்களை அடித்துச் செல்பவை... அடித்துச் செல்வதில் இறங்கும்போது 'நான் தூயோனாக வேண்டும்' என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

ஆற்றை ஒரு தண்ணீர்க் காடாக மட்டும் கருதி குளிப்பது அறியாமை. சீனுவும் பயபக்தியோடு அந்த ஆற்றில் இறங்கினார். ராஜம் பார்த்துக் கொண்டே நின்றாள். இவர் குளித்து முடித்துவிட்டு வரவும் மூங்கில் பிரம்புப் பெட்டியையும், மற்ற லக்கேஜையும் ஒப்படைத்துவிட்டு அவள் இறங்கிக் குளிக்க வேண்டும். அதற்காக காத்திருக்கத் தொடங்கினாள். சீனு மூன்று முழுக்குப் போட்டு முடித்தவர், பிரம்புப் பெட்டியோடு ராஜத்தை அருகில் வரச் சொல்லி கண்ணனை வெளியே எடுத்து மார்போடு அணைத்தபடி திரும்ப நீரில் மூழ்கினார். அப்படியே கண்களில் ஒற்றிக்கொண்டு கரை ஏறினார். அவரைத் தொடர்ந்து ராஜமும் ஆற்றில் இறங்கி மூழ்கி எழுந்தாள்.

நீரோட்டம் மிக வேகமானதாக இருந்தது.

''காவிரியைவிட இழுவை அதிகமா இருக்கே?''

''அவளுக்கு இவ அக்கா இல்லையோ...''

- சீனு பதிலோடு எதிரே தெரிந்த சத்திரத்து அறைக்குள் அப்படியே ஈரம் சொட்டச் சொட்ட நுழைந்தவர், அன்றைய திருவாராதனத்தை அங்கேயே அப்போதே தொடங்கிவிட்டார்.

ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் சம்பத்! நைட்டியோடு வாயில் கொட்டாவி பிரிய எழுந்து வந்த சாரு, ''இன்னிக்கு ஈவினிங் சீக்கிரம் வந்துடுவேளா?'' என்று சற்று சுரத்தில்லாத

குரலில் கேட்டான்.

"தெரியல... இன்னிக்கு ஜெர்மன்காரன் வரான். அவனோட மகாபலிபுரத்துக்குப் போயிட்டு வா, கோல்டன் பீச்சுக்குப் போயிட்டு வான்னு பிரசிடென்ட் சொன்னா போக வேண்டியிருக்கும்."

"நீங்க என்ன அவாளுக்குக் கைடா... இல்ல ஜெனரல் மேனேஜரா...?"

"சரி. நான் கிளம்பறேன். டயமாச்சு பார்"



''விழாக்கால தள்ளுபடி போடு வாங்க, பார்த்திருக்கேன்; இது என்ன, 'சீரியல் நேரத் தள்ளுபடி'?''

''டிவி சீரியல் ஓடற நேரத்துல லேடீஸ் யாருமே வர்றதில்லையாம்; அவங்களை கவரத்தான் இந்தச் சலுகை!

- சீர்காழி வி. ரேவதி

"எனக்கு ஒரு பதிலை சொல்லுங்கோ. சாயந்தரம் சீக்கிரம் வந்தா தேவலை. தேவகி நாராயணன் டாக்டர்கிட்ட அப்பாய்ண்மெண்ட் வாங்கி வைச்சுருக்கேன்"

- அவள் டாக்டர் பேரைச் சொன்ன மறுநொடி, சம்பத் அவ்ளை ஒரு எரிச்சல் பார்வை பார்த்தான்.

"அப்படிப் பாக்காதேள்... ஆர்ட்டிஃபிஷியல் மெதட்ல ட்ரை பண்ணலாம்னு சொல்லியிருக்கார். எனக்கு இன்னிக்கு கருமுட்டை உடையற நாள். உங்க செமனை எடுத்து எப்படி உள்ள வைக்கணுமோ அப்படி வெச்சுடுவா. படாதபாடுபட்டு அப்பாய்ண்மென்ட் வாங்கியிருக்கேன்."

"சரி... ட்ரை பண்றேன்"

''நான் வேணும்னா உங்க பிரசிடென்ட்கிட்ட பேசவா? அவருக்கு ஒண்ணுக்கு மூணு பசங்க இருக்கற திமிர்ல ஏதாவது பேசினா எப்படி பதில் சொல்லணும்னு எனக்குத் தெரியும்"

"நோ சாரு... நீ எதுக்கு இவ்வளவு அவசரப்படறே... நமக்கு நேச்சுரல் கோர்ஸ்லயே எல்லாம் நடக்கும். அப்பாவும் அம்மாவும் நமக்காகத்தான் பத்ரி, கேதார்னு புறப்பட்டுப் போயிருக்கா. அவா பிரார்த்தனை வீண் போகாது. நீ போய் வேற வேலையைப் பார்..."

- சம்பத் போகிற போக்கில் சொல்லிக்கொண்டே காரில் ஏறினான்.

பதிலுக்கு சாரு முகத்தில் ஒரே எரிச்சல். கடுவன் பூனை போல முகத்தை வைத்துக்கொண்டவள், சோபாவில் போய் அமர்ந்துகொண்டாள்!

வாரணாசி ஸ்டேஷன்!

மூட்டை முடிச்சோடு இறங்கிய சீனுவையும் ராஜத்தையும் சரியாக அடையாளம் கண்டுகொண்டு, "ஆர் யூ மிஸ்டர் ஸ்ரீனிவாசன்?" என்று கேட்டபடியே வந்து நின்றான் கணேஷ்.

"யெஸ்... நீங்கதான் கணேஷா?"

"எக்ஸாக்ட்லி... வாங்கோ... வெல்கம்"

"ரொம்பச் சின்ன வயசா தெரியறேளே... நான் நம்ம ஆடிட்டர் வயசான பிராமணன் ஒருத்தரைத்தான் அனுப்பப் போறார்னு நினைச்சண்டிருந்தேன். அம்பி, பிராமின்தானே?"


- அவர் கேள்வியே அவர் எப்படிப்பட்டவர், என்பதைக் காட்டிவிட்டது. ஒரு மாதிரி கூர்ந்து பார்த்த கணேஷ், "நான் ஒரு மனுஷன்.." என்றான் சற்று தினவாக. சொன்னபடியே அந்தப் பிரம்புப் பெட்டியை ஒரு கையில் எடுக்கப் போனான்.

''அம்பி அம்பி... அதைத் தொடாதே..." என்று பதறிவிட்டார் சீனு.

(தொடரும்)

போட்டுத் தாக்கு!

குஷ்புவிடம் கேட்கக் கூடாத **பத்துக் கேள்விகள்**



1. 'ஓ'ன்னு டீ.வியில கண்ணைக் கசக்குனீங்களே, அது யாரோட டிரெயினிங்? டி.ஆர்? வைகோ? விசு?

2. உங்கக் குழந்தைகள் கப்பலைப் பார்க்க முடியலைனு அழுதிருக்கீங்களே... டி.ஆர்.பாலுகிட்டே புகார் கொடுத்தாச்சா..?

3. இப்பல்லாம் உங்க வீட்டு வாசலைப் பெருக்கக்கூட 'துடைப்பம்' பயன்படுத்தறது இல்லையாமே...

4. ஓட்டல்களில் 'குஷ்பூ' இட்லியைக்கூட யாரும் ஆர்டர் பண்றதில்லையாமே?

5. கிசுகிசு, சர்ச்சைகள்ல முதலிடம் பிடிக்க நீங்களும் த்ரிஷாவும் அடிச்சுக்கிறீங் களாமே?

6. என்ன ஆனாலும் நீங்களும் தங்கர்பச்சானும் வம்பை விலை கொடுத்துதான் வாங்குவீங்களாமே?

7. கோலிவுட்ல மும்பை நடிகைகளுக்கு முன்வாசல் தொறந்துவிட்ட நீங்க பின்வாசல் வழியா ஓடிட்டிங்களாமே?

8. அடுத்ததா உங்க கால்ஷீட்டை யெல்லாம் நீதிமன்றங்களுக்குத் தான் ஒதுக்கி வைச்சிருக் கீங்களாமே!



9. அன்னைக்கு உங்களுக்குக் கோயில் கட்டின தமிழ் மக்கள் இன்னைக்குத்தான் 'பூசை' செஞ்சாங்க போல!

10. 'தமிழ்ப் பெண்கள்'ங்கிற தலைப்புல ஒரு மீட்டிங் போடறோம். சிறப்புப் பேச்சாளரா வர முடியுமா?

பரமு

நடக்குமென்பார்; நடக்கும்!




மேஷம் : இந்த வாரம் சிறப்பான வாரம். எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி. பொன், பொருள் சேரும். ஆடை அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். குடும்பம் நலன் மேல் ஓங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு, இடமாற்றம், அயல்நாடு செல்லக்கூடிய வாய்ப்பு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். வழக்கு, தொல்லைகள் நீங்கும். ஆஞ்சநேயர் வழிபாடு சிறந்தது.

ரிஷபம் : எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும் எதிரியை வெல்லும் பலம் இருக்கும். குழந்தைகள் வழியில் இருந்த மனக் கவலைகள் நீங்கும். திருமணம் கைகூடும். சிலருக்கு கிரஹ பிராப்தம் கிட்டும். பூர்விக சொத்துகள் பாகப் பிரிவினை ஏற்பட்டு அதன் மூலம் ஆதாயம் கிட்டும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். வியாபாரிகள் நற்பலனை அடைவார்கள். நெருங்கிய உறவினர்கள் இடம் மாறிப் போவார்கள். ஆரோக்கியம் பாதிக்கும். மாணவ மாணவிகளுக்குப் பலன் கிடைக்கும். குரு, கேது வழிபடுதல் நலம்.

மிதுனம் : அதிர்ஷ்டத்தை அளிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். திருமணக் காரியம் கைகூடும். சுபகாரியம் நடக்கும். உத்தியோக வேலையில் நல்ல மாறுதல் வரும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறக்கும். வியாபாரிகளுக்கு நல்ல பலன் ஏற்படும். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். எதிர்ப்பு உயரும். ராகு, கேது வழிபாடு நலம்.

கடகம் : குடும்பத்தில் சுபகாரியச் செலவுகள் ஏற்படும். ஆடை ஆபரண அலங்கார பொருள்கள் வாங்குவீர். குடும்ப வாழ்வு

● படம் : ஸ்ரீஹரி



தஞ்சை பரத்வாஜ்

19.10.2005 முதல் 25.10.2005 வரை

• எனது மகளுக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கிறோம். அவர் வேலைக்குப் போவாரா (அ) பிசினஸ்ஸா? இவர்களுக்கு குழந்தை பிறக்குமா? எப்போது?

- ஸ்ரீரங்கம் கௌரி

ஜாதகருக்கு சொந்தத் தொழில் செய்யும் யோகம் இல்லை. தற்போது சூரிய தசை நடப்பதால் நல்ல வேலை அமையும். 41 வயதில் குழந்தை பேறு ஏற்படும்.

• என் மகளின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். திருமணம் எப்போது நடக்கும்? நிரந்தரமான நல்ல வேலை கிடைக்குமா?

- பி.சுபாஷ், மறைமலை நகர்

தங்களது பெண்ணுக்குத் திருமணம் நடக்கும். தனியார் துறையில் வேலை செய்யும் பையன் அமைவான். வடக்குப் பார்த்த வீட்டில் பிறந்தவராக இருப்பார். திடீரென்று திருமணம் முடியும் 2005ல் நல்ல வேலை அமையும்.

• எனது மகளுக்கு திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை புத்திரபாக்கியம் இல்லை. எப்போது குழந்தை பிறக்கும்? எதிர்காலம் எப்படி அமையும்? பரிகாரம் ஏதாவது செய்ய வேண்டுமா?

- டி.கே.சுப்பிரமணியன், பெங்களூர்

தங்கள் மகளுக்கு 2006க்குள் குழந்தை பிறக்கும். ஏழைகளுக்கு தானம், தருமம் செய்யவும். வேறு பரிகாரம் தேவையில்லை.

• எனது ஜாதகம் அனுப்பின்னேன். 1 வருடமாக எனது உடல் நிலை சரியில்லை. பல ஆஸ்பத்திரிகளில் காண்பித்தும் பண விரயம் ஏற்பட்டது தவிர வியாதியின் கொடூரம் தீரவில்லை. நோய் தீருமா? ஆயுள் பாவம் பற்றிக் கூறவும்.

- மு.மகாலிங்கம், சென்னை

தங்களது ஆயுள் பாவம் 77 வயது.

நன்றாக இருக்கும். தெய்வ பலம், நன்றாக இருக்கிறது. மகானின் சந்திப்பு ஏற்படும். வீடு வாங்கும் பாக்கியம் ஏற்படும். சுபச் செலவு ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கும். வியாபாரிகளுக்கு தொழில் நற்பலன் ஏற்படும். கலைஞர்களுக்குப் பொற்காலம். குரு, சனி வழிபாடு நலம் தரும்.

சிம்மம் : மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் பெருகும். பண வரவு வரும். கணவன் மனைவி குடும்ப உறவில் அனுசரணை தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது உஷார். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். பெரிய தொகை கடன் கொடுக்கக் கூடாது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் நிதானத்துடன் செயல்பட்டால் பிரச்னை வராது. வியாபாரிகளுக்கு தொழிலில் மந்தமான போக்கு இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு கூடும். வேலை மாற்றல் சிலருக்கு ஏற்படும். ராகு, கேது, குரு, சனி வழிபாடு உத்தமம்.

கன்னி : வெற்றி தரும் வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். ஆடை ஆபரண பொருள்கள் சேரும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். தொழில் ஏற்றம் ஏற்படும். தனம், வாக்கு, குடும்பம் மேலோங்கும். வியாபாரிகளுக்கு விறுவிறுப்பான வியாபாரம் நடக்கும். கணவன் மனைவி உறவு நற்பலன் தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் ஏற்படும். இதுநாள் வரை இருந்து வந்த வழக்கு வெற்றி அளிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல உயர்வும் தூர தேசம் செல்லும் வாய்ப்பும் ஏற்படும். கஷ்டங்கள் குறையும். நிம்மதி ஏற்படும். உடல்நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். ராகு, கேது வழிபாடு நலம்.

துலாம் : ஜாதகத்தில் ஏற்றத்தை அளிக்கும். சத்ரு தொல்லை இருக்காது. ஆரோக்கியம் பாதிக்காது. கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். ஆடை ஆபரண பொருள்கள் வாங்குவீர்கள். புதிய தொழில் தொடங்கலாம். உத்தியோகஸ்தர்களுக்கு இருந்து வந்த பிரச்னைகள் தீரும். திருமணம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வழக்கு வெற்றி பெறும். சனி, குரு வழிபாடு நலம்.

விருச்சிகம் : திருமண கைகூடும். தனம் மேன்மை பெறும். ஆசைகள் நிறைவேறும். உடல் நிலை நன்றாக இருக்கும். இதுநாள் வரை இருந்து வந்த சிரமங்கள் போய் நற்பலன் கிட்டும். புதிய தொழில் தொடங்கலாம். வீடு, வாகனம் வாங்கலாம். செலவுகள் கட்டுக்குள் நிற்கும். உத்தியோகஸ்தர்கள் நற்பலனை அடைவார்கள். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். குரு, ராகு, கேது வழிபாடு நலம்.

தனுசு : சிறப்பான வாரம். நினைத்தது நடக்கும். திருமணம் கை கூடும். புதிய வேலை வாய்ப்புக் கிட்டும். உத்தியோகஸ்தர்

பரத்வாஜ் பதில்கள்

தற்போது புதன் தசை நடக்கிறது. அஷ்டமாதிபதி தசை. கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் பெருமாளை வழிபட்டு வரவும். தங்கள் பிணி எந்த வைத்தியத்துக்கும் கட்டுப்படக் கூடியது அல்ல. தானாக வந்த நோய் தானாகவே தீரும்.

• எனது பெண்ணின் ஜாதகத்தை அனுப்பியுள்ளேன். அவளுக்கு எப்போது திருமணம் நடக்கும்? அது பற்றிய விவரம் தெரியப்படுத்தவும்.

- டி.கே.ராமதாஸ், சென்னை

தங்களின் பெண்ணுக்கு 2006ல் திருமணம் நடக்கும். நாகதோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும். தற்போது சந்திர தசை நடக்கிறது. பிறந்த ஊருக்கு வெளியூரில் படித்த, உடன் பிறந்த ஒருவர் உள்ளவருடன் திருமணம் நடக்கும்.



களுக்கு எந்தச் சிரமமும் இருக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். தடைபட்டு வந்தக் காரியங்கள் வெற்றி பெறும். வீடு வாகனம் வாங்க நல்ல நேரம். ஆரோக்கியம் பாதிக்காது. சனி, ராகு, கேது வழிபட்டு வரவும்.

மகரம் : குடும்பம் மேன்மை பெறும். பொருளாதாரத் தொல்லைகள் இருக்காது. கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் நல்லது நடக்கும். புதிய ஆடை ஆபரண அலங்காரப் பொருள்கள் சேரும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். திருமணம் கை கூடும். தொல்லைகள் இருக்காது. புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செல்ல நேரிடும். புதிய தொழில் துவங்கலாம். வியாபாரிகளுக்கு ஏற்றம் காணலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கும். குழந்தைகள் சந்தோஷம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம், ஊதிய உயர்வு வரும். சனி, குரு வழிபாடு அவசியம்.

கும்பம் : ராசிநாதன் சனி ராசிக்கு 6ல் சஞ்சாரம். ஊதியம் உயரும். வேலை பளு அதிகரிக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். எதையும் வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்க்கவும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் ஏற்படும். திருமணம் ஆகாமல் தடைபட்டு வந்தவர்களுக்கு திருமணம் நடக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பப் பெண்களுக்கு கணவரின் அனுசரணை தேவை. சிலருக்கு தூர தேசம் செல்லும் வாய்ப்பு வரும். நெருங்கியவர்களை விட்டு சிலர் பிரிந்து செல்லும் வாய்ப்பு அமையும். பணம் பற்றாக் குறை வராது. வியாபாரம் முன்னேற்றமடையும். மாணவ மாணவிகளுக்கு நல்ல மதிப்பெண்கள் கிட்டும். ராகு, கேது, வழிபடுதல் நலம்.

மீனம் : ராசிநாதன் குரு சூரியனில் சஞ்சாரம் என்பதால், வெற்றி வாய்ப்புகள் கிட்டும். கணவன் மனைவி உறவில் அனுசரணை தேவை. பண பற்றாக் குறை வராது. குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். திருமணத் தடை விலகும். உற்றார் உறவினர் அனுகூலம் ஏற்றம். உத்தியோகஸ்தர்களுக்கு நீண்ட நாள் முடியாத வழக்கு வெற்றி அளிக்கும். பூர்வீக சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். ராகு, கேது, குரு வழிபடுதல் நலம்.






செ.செண்பகக்கண்ணு

சாவுச் செலவு!



உச்சி வெயிலு நெத்தியில விழுற நேரந்தேன் அப்பன் செத்துப்போன சேதி அன்னம்மாவுக்கு வந்து சேர்ந்துச்சு.

'களை வெட்டுற வேலைய குறை போட்டிட்டுப் போவ முடியுமா?' அன்னம்மாவுக்கு மனசில்லதான்! ஆனா பாப்பாத்தியும் சோலையும் இவள கேளாத கேள்வி கேட்டுட்டாளுக.

"அங்கன அப்பனை பொணமா சாத்தி வைச்சுருக்காக! வெட்டி முடிக்கிற வேலை வீணா போயிரும்னு கவலபடுறியாக்கும்! போ...போத்தா! ஆகிற காரியத்தப் பாரு. உம் வேலைய நாங்க சேத்து பாத்துக்கிறோம்" விரட்டினார்கள்.

இரண்டு மாசமா இழுத்துக்கிட்டு கெடந்த உசுருதேன். இப்பிடி பொசுக்னு போவுன்னு அன்னம்மா நினைக்கல. போனவாரம் தெங்காசி சந்தையில பெரிய தெரு செங்கமலம் சொன்ன வார்த்த முன்னால வந்து முள்ளாகக் குத்துது.


"ஏண்டி அன்னம்! ஒருநட அப்பன வந்து பாத்துட்டு போவக்கூடாது? கிழிச்சுப் போட்ட நார் பெட்டியா கெடக்குது. சித்திக்காரி உறவும் சரி, சீமக்கருவேல முள்ளுஞ் சரி சுருக்னுதான் குத்தும். அதுக்காவ அப்பனைப் பார்க்காம இருக்க முடியுமாடியாத்தா? தூணாக்கெடந்த மனுஷன் வெட்டிப் போட்ட வாழையா சாஞ்சு கிடக்குது. கொஞ்ச நாளைக்கு உசுரு இருக்கிறப்பவே பொட்ட மவள பார்த்துட்டா கட்டையில போற உசுரு திருப்தியா போவும்ல..." சொன்னாள்.

போக வர பஸ்ஸுக்கும், புடிச்சத வாங்கி அப்பனுக்குக் கொடுக்கவும் அம்பது ரூபா முழு நோட்டு வேணும். அத வைச்சு இரண்டு நாள் பொழுத கழிச்சிடலாம்னு மனச கல்லாக்கிக்கிட்டு இருந்துவிட்டாள். இப்ப அப்படி இருக்க முடியாது. செய்யும் கட்டும் செய்யவும், சீரா அப்பன் சுடுகாட்டுக்குப் போறதுக்கும் பொட்ட மவா இவ செலவு தனியா இருக்கே!

அஞ்சு மரக்கா நெல்லு, ஆழாக்கு நல்லெண்ணெய், இரண்டு கிலோ பச்ச காயி புதுப் பெட்டியில போட்டு ஒத்தக்கை பெட்டிய புடிக்க இன்னொரு கையால சில முந்திய வாயில வைச்சுக்கிட்டு ஒப்பாரியோட இவ ஊருக்குள்ள நுழைஞ்சாத்தான் சாதி சனம் மெச்சும். மொச்சப் பயிறும், படையலும் ஏழாம் நாள் செலவு வேற' தனியா இருக்குது.

வீட்டுக்கு வந்தவா சட்டிப் பெட்டிய உருட்டறா. 'சேர்த்த காசு, போவ வர சரியா இருக்கும். மத்த சடங்கு செய்ய...?' கைய பிசஞ்சுக்கிட்டு நிக்கிறா அன்னம்மா. மஞ்சத் தாலிய நெஞ்சுல கட்டின அன்னிக்கு குடியில சாஞ்ச மனுஷன் இன்னி வரைக்கும் எழுந்திருக்கல. ஊரு மெச்ச ரெண்டு பெத்துப் போட மட்டும் குறை வைக்கல. இதுவரைக்கும் உழச்சு ஒத்த ரூபாயகூட இவ கிட்ட நீட்டல. பேருக்குப் புருஷனா இருந்தவன் இப்பவும் போதையில





மெடிக்கல் மூளை!

தலைகள் ஒட்டிப் பிறந்துள்ள இரு குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் பிரித்தெடுக்கும் முயற்சியில் தற்பொழுது சென்னை அப்போலா மருத்துவமனை ஈடுபட்டு வருகிறது. இரு குழந்தைகளின் மூளை மற்றும் சிறுநீரகங்களை தனித்தனியாகப் பிரித்தெடுப்பதுதான் இப்போதைய சவால். இந்த அறுவை சிகிச்சை வெற்றி பெற்றுவிட்டால், அது மருத்துவ உலகில் புதிய வெளிச்சத்தை ஏற்படுத்தும்.

கெடக்குறான். அன்னம்மா மனசு மாங்கொலயா மருகுது. சின்னமாரி கிட்ட கடன வாங்கலாம்னா, ஏற்கனவே வாங்குன பணத்துக்கு வட்டி கெட்டல. இப்ப போயி கேட்டா கிழுச்சு கீர நட்டுப்புடுவா.

“ஏ புள்ளா அன்னத்தாயி...” மேலத் தெரு கோட்டியப்பன் தொண்டத் தண்ணி வத்த கத்துறான். 'புருஷன் போட்ட சாராய கடன கேட்க வந்திருப்பானோன்னு' பயந்துக்கிட்டே வெளிய வாரா அன்னம்.

“இந்தா பாரு புள்ள! நம்ம கட்சித் தலைவரு சின்னசாமி நாய்க்கரு செத்துப் போயிட்டாரு... அவரு கட்சி தொண்டர்களெல்லாம் ஊரு சாவடியில மௌன அஞ்சலி செலுத்துறோம். நாளைக்குத்தான் ஊர்வலம். அவரு போட்டாவ மாலை போட்டு மருவாதி செஞ்சுருக்கு. ஒப்பாரி வைக்க ஆளு வேணும். ஏற்கெனவே பவதி பெரியாத்தாவும், செல்லம்மா கிழவியும் வாராக; நீயும் வர்றியா? முழிக்காதத்தா! சும்மா யில்ல இருநூறு ரூபா, ஒருவேளை சாப்பாடு...”

கும்பிட போன தெய்வம் குறுக்க வந்த மாதிரி போச்சு அன்னம்மாவுக்கு. தலைய அள்ளி முடிஞ்சவ அவசரமா அவரு கூடவே கௌம்புறா.

“அண்ணாச்சி... ஒருவேள சோறையும் காசா கொடுத்துப்புடுங்க...” சொன்ன அன்னம்மா சாவடியில ஒப்பாரி வைக்க ஒப்புக்காக அமர்ந்தாள்.

'செத்துப்போன அப்பனோட நெனைப்பு,

பொழப்பில்லாத போக்கத்த புருஷனோட வாழற பிழைப்பு,

ஒத்த மூக்குத்தியும் உடைஞ்ச தோடுமாய் போய்விட்ட அவலம்,

அன்னம்மா எல்லாத்தையும் நினைச்சு மாய்ஞ்சு போயி உருகி, உருகி அழுறா! மனசுக்குள்ள கெட்டியாப் பிடிச்சுக் கிடந்த சோகம் பொல பொலன்னு வார்த்தையாக் கொட்டுது. பாட்டா பொழியுது. கட்சிக்காரங்களுக்குக் கண்ணீரு வந்துருச்சு. துக்கத்த தூக்கலா காட்டிய அன்னம்மாவுக்குக் கூட பத்து வைச்சே கொடுக்குறாங்க.

ஓட்டமும் நடையுமா வீட்டுக்கு வந்தவா, அத்தனை சாவு அயிட்டங்களையும் வாங்கிக்கிட்டு ஊர் போய் சேர்றா... அப்பன் பொணத்தப் பாத்து அழக்கூட தெரணியில்ல. கண்ணு உலர்ந்து போச்சு; நாக்கு துவண்டு போச்சு...வெறிச்சுப் போயி காலடியில உட்கார்ந்துட்டா அன்னம்மா.

ஊரு முழுசும் ஒரே பேச்சு இது தான்.

“கருப்பன் ஒத்த மவா, ஆத்தா இல்லாத புள்ளன்னு என்னமா மாருலயும் தோளுலயும் போட்டு வளர்த்தான். பாவி மவா! அப்பன் சாவுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கட்டுமே... ம்ஹூம்! கடேசி வர அரக்கியா இருந்துப்புட்டாளே!” ○

தீபாவளி ஸ்பெஷல்!



ஆயிரம்வாலா ஆட்டம்பாம்!

– அசத்தல் கதை

மகிழ்ச்சியான தீபாவளி!



– விளையாட்டு



குழந்தைகளே செய்து, சுவைக்க தேன் உருண்டை, மாரி ஸ்வீட்

'வெடி'ச் சிரிப்புகள்!



குழந்தைகளின் குதூகலம்!

கோகுலம்


நவம்பர் 2005

ரூ.6/- மட்டுமே

தீபாவளி

அன்றும், இன்றும்!


உங்களுக்கு தீபாவளி மூடு இப்பவே கிளம்ப... ஏதோ எங்களாலானது!



''கங்கா ஸ்நானம் ஆச்சா?''

''லட்சுமி! ஸ்வீட் ரொம்ப நல்லா இருக்கே... நீ செஞ்சியா இல்ல, அம்மா செஞ்சாங்களா...?''






''பட்டிமன்றம் பார்த்தாச்சா?''

''லதா...! ஸ்வீட் ரொம்ப நல்லா இருக்கே... 'அடையார் ஆனந்தபவன்'ல வாங்கினதா இல்ல 'கிருஷ்ணா ஸ்வீட்ஸ்'ல வாங்கினதா?''






''பசங்களா... சீக்கிரம் ரெடி ஆகுங்க. கோயிலுக்குப் போகணும்''




''பேராண்டி... வெடிச்சத்தம் காதை அடைக்குது... கொஞ்சம் தள்ளிப் போய் வெடியேன்டா...''

''எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க மாமா...''





''சீக்கிரம் ரெடி ஆகுங்க. புதுப்படம் போகலாம்!''



''பப்லு, 'ரண்டக்க... ரண்டக்க' பாட்டு காதுலேயே விழலை. வால்யூமை கொஞ்சம் கூட்டி வையேன்டா...

'ஹேப்பி தீபாவளி' - எஸ்.எம்.எஸ்

- குட்டி பிரசன்னா



ஒளியும் ஒளியும்!

நோபல் கமிட்டிக்கு ஏதாவது பணமுடையா என்றுத் தெரியவில்லை. இயற்பியல், வேதியியல் இரண்டு துறைகளுக்குமே தலா மூவரை கண்டுபிடித்து இந்த வருட நோபலைப் பகிர்ந்து அளித்திருக்கிறார்கள்.

ஒளி என்பது என்ன? அது ஏன் பிரகாசமாக இருக்கிறது? ஒரு பல்பை எரியவிடும்பொழுது பரவலாகத் தெறிக்கும் அதே ஒளி, லேசராக மாறும் பொழுது மட்டும் அடர்த்தியடைவது ஏன்? ஏதாவது 'மல்டிபின் பர்சனாலிடி' விவகாரமா? இது போன்ற கேள்விகளுக்கு ராய் க்ளாபர் என்பவர் விடைகள் கண்டுபிடித்திருக்கிறார். இவரது ஆராய்ச்சி முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு அணுவையும், மூலக்கூற்றையும் கண்டுபிடிக்க உதவும் லேசர் தொழில் நுட்பத்தை ஜான் ஹால் மற்றும் தியோடர் ஹன்ஷ் இருவரும் கண்டுபிடித்திருக்கிறார்கள். (முன்னவர் பின்னவரது ஆப்டிக் ஆராய்ச்சிக் கட்டுரையை படித்துவிட்டு இப்படிச் சொன்னாராம். "ஒன்று இது அபாரமான கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும். அல்லது பைத்தியக்காரத்தனமான பிதற்றலாக இருக்க வேண்டும்.")

க்வாண்டம் கணிப்பொறி, க்வாண்டம் க்ரிப்டாலஜி, ஆப்டிக்ஸ் என்று நம்மை பயமுறுத்துவதற்கென்றே உருவாக்கப்பட்டுள்ள துறைகளுக்கு இவர்களது கூட்டுக் கண்டுபிடிப்புகளால் நிறைய ஒளி கிடைக்குமாம். புதுக்கவிதை, ஹைக்கூ என்று படுத்தி எடுக்கும் கவிஞர்கள் இனிமேல் க்வாண்டம், ஆப்டிக்ஸ் பற்றியும் புரிவது போல கவிதைகளோ, கட்டுரைகளோ எழுதி அளித்தால் தேவலை.


ரஷ்யாவின் ஒளியாகக் கொண்டாடப்பட்டவர் லெனின். ரஷ்யாவை என்ன செய்யலாம் என்று லெனின் யோசித்தபொழுது புரட்சி வெடித்தது. இப்பொழுது லெனினை என்ன செய்யலாம் என்று ரஷ்யா யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது மீண்டும் புரட்சி வெடித்திருக்கிறது. இத்தனைக் காலம் ரெட் ஸ்கொயரில் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் அடங்கியிருந்த லெனினை வெளியே எடுத்து வந்து புதைத்துவிடலாமா என்று ரஷ்யா யோசித்து வருகிறது.

முன்னர், யெல்ட்சின் பிரதமராக இருந்தபொழுது லெனினைச் சீண்டியிருக்கிறார். ஆனால் அப்பொழுது ரஷ்யர்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியதால் பேசாமல் இருந்துவிட்டார். 2001ல் புடின் "லெனின் உடலை கண்ணாடியிலிருந்து -வெளியே அகற்றவேண்டாம். இங்குள்ள மக்கள் அவரை தங்கள் வாழ்வோடு இணைத்துப் பார்க்கிறார்கள்"

உலகம் இவ்வளவுதான்!

என்று உருக உருகப் பேசினார். இப்பொழுது என்ன முடிவெடுக்கப் போகிறார் என்றுத் தெரியவில்லை.

வழக்கம் போல; நியூயார்க் டைம்ஸ் லெனினை நக்கல் அடித்திருக்கிறது. நதாஷா எனும் 23 வயது பெண்ணை நமது அமெரிக்க ரிப்போர்டர் ரெட் ஸ்கொயரில் சந்தித்தாராம். அப்பொழுது நதாஷா, "லெனினா? யார் அவர்? கம்யூனிஸ்டா?" என்று கேட்டாராம்.



“வெளிச்சம் உண்டாகக் கடவது” "வெளிச்சம் உண்டாயிற்று" "வெளிச்சம் நல்லது" என்று ஒளியைப் பிரமாதப் படுத்தி பிரதானப்படுத்துகிறது பைபிள். எழுந்தாச்சா? ஈ-தேச்சாச்சா? சாப்டாச்சா? குளிச்சாச்சா? என்று கண் சிமிட்டலை விட அதிகமாக 'மெஸேஜி'க் கொண்டிருக்கும் செல்பேசிப் பிரியர்கள் இனி ஒட்டுமொத்த பைபிளையும் சுண்டு விரல் நுனியால் அழுத்தி மெஸேஜிவிடலாம். ஆஸ்திரேலிய பைபிள் சமுதாயம் எனும் அமைப்பு குண்டு பைபிள் புத்தகத்தை 'டெஸ்ட் மெஸேஜாக' உருமாற்றி செல்பேசியில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

ஒரே எஸ்.எம்.எஸ்.ஸில் ஒட்டுமொத்த பைபிளையும் அனுப்பிவிடலாம். ஆனால் சற்று பெரிய மெசேஜ் என்பதால் நீங்கள் அனுப்பும் ஒரு எஸ்.எம்.எஸ். 30,000 எஸ்.எம்.எஸ்.களாக போய்ச் சேரும். மொழி சிறிது 'அப்படி இப்படி' இருக்கும். உதாரணத்துக்கு 'வெளிச்சம்' என்பது எஸ்.எம்.எஸ்.ஸில் வரும்பொழுது 'வெள்சம்' என்று மாறிவிடும். முடிந்தவரை சுருக்க வேண்டுமே!

தமிழில் இதுபோல் முயற்சி செய்யலாம். திருக்குறளிலிருந்து தொடங்கலாம். சுருக்கக் கூட தேவையிருக்காது. திருவள்ளுவர் ஏற்கெனவே எஸ்.எம்.எஸ்.ஸை விட குட்டியாக தான் எழுதியிருக்கிறார்.

- மருதன்

சந்தோஷம் தொடரணுமா?



உங்கள் வீட்டுத் தோட்டத்தில் செழிப்பான தென்னை மரம் காய்த்துக் குலுங்குகிறது. அந்த இடத்தில் தென்னை மரம் எப்படி வந்தது? பல வருடங்களுக்கு முன்பு, ஒரு தென்னங் கன்றை வாங்கிக் கொண்டு வந்து, நட்டு, தண்ணீர் ஊற்றி, நன்றாகப் பராமரித்து வந்தீர்கள். அது வளர்ந்து தேங்காய் தர ஆரம்பித்தது. இன்றைக்கும் தந்து கொண்டிருக்கிறது.

அன்றைக்கு, தென்னங்கன்றுக்குப் பதிலாக ஒரு மாங்கன்றை வாங்கிக் கொண்டு வந்து வளர்த்திருந்தால் அந்த மரத்திலிருந்து தேங்காய் கிடைத்திருக்குமா? மாங்காய்தானே கிடைத்திருக்கும்!

காரணம் என்ன? தென்னங்கன்று நட்டால் தேங்காய் கிடைக்கும்; மாங்கன்று நட்டால் மாங்காய் கிடைக்கும். ஆக, ஒவ்வொரு காரணத்துக்கும் ஒரு விளைவு உண்டு. ஒவ்வொரு விளைவுக்கும் நிச்சயம் ஒரு காரணம் இருக்கும். தென்னை மரத்துக்குக் காரணம் தென்னங்கன்று. தென்னங்கன்றின் விளைவுதான் தென்னை மரம்.

காரணம் இல்லாமல் எந்த விளைவுகளுமே சாத்தியமில்லை. அதேபோல, எந்த ஒரு விளைவுக்கும் ஒரு காரணம் இல்லாமல் இருக்க முடியாது.

நம் வாழ்க்கையில் நடைபெறுகிற ஒவ்வொரு விஷயத்துக்கும் ஏதாவது ஒரு காரணம் இருக்கும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் விளைவு இல்லாமல் போகாது.


நம்மில் எத்தனை பேர் சந்தோஷமாக, மனத் திருப்தியோடு மரணத்தைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்? மரணம் எப்போது என்று தெரியாதவர்களை விடுங்கள். மரணப் படுக்கையில் போராடிக்கொண்டு, தங்கள் கடைசிக் காலத்தை கழித்துக் கொண்டிருப்பவர்களைப் பாருங்கள். "அடடே! அதைச் செய்யவில்லையே! இதைப் பண்ணி இருக்கலாமே!" என்று மனசு அலை பாயும். திடீரென்று அவர்களின் மரணம் நிகழ்கிறபோது, அவர்களது நிறைவேறாத ஆசைகளும், அவரது குணாதிசயங்களும் எங்கே போகும்?

உலகில் குழந்தைகள் பிறக்கின்றன. சில குழந்தைகள் பிறந்தது முதல் அழுது கொண்டே இருக்கின்றன. சில குழந்தைகள் எப்போது பார்த்தாலும் தூங்கிக் கொண்டே இருக்கின்றன. சில ரொம்பச் சுறுசுறுப்பாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. எல்லாமே குழந்தைகள்தான் என்றாலும், ஏன் இத்தனை விதமான குணாதிசய வெளிப்பாடுகள்?

மரணத்தின்போது, அம்மனிதர்களின் ஆசைகள், குணாதிசயங்கள் எங்கே போகின்றன? பிறப்பின்போது, குணாதிசயங்கள் எங்கே இருந்து வரு

வெற்றி உங்கள் சாய்ஸ்!

11



சுனந்தாஜி

கின்றன? இதை நம் முன்னோர் அலசி, ஆராய்ந்திருக்கிறார்கள். பிறப்பு என்பது இறப்பின் விளைவு. இறப்பு என்பதற்குக் காரணம் பிறப்பு. இதன் அடிப்படையில் நோக்கினால், மறு பிறவி தத்துவத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

இப்படிச் சொன்னவுடன், ''ஆஹா! நாம் போன பிறவியில் என்னவாக இருந்திருப்போம்?'' என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் உங்களுக்கு வரக் கூடும். ''உங்கள் முன்னோர்களை அடையாளம் காட்டுகிறேன். உங்கள் முன்பிறவி உங்களுக்கு ஆசை காட்டலாம். ஆனால் அதற்கெல்லாம் சம்மதித்து விடாதீர்கள். உங்கள் நேரமும் பணமும்தான் செலவாகும்; மன உளைச்சல்தான் மிஞ்சும். உருப்படி

யான பலன் எதுவும் கிடையாது.

உங்கள் கையில் இருக்கும் நிகழ் காலத்தில் முழுமையாக வாழுங்கள். அதுதான் முக்கியம்! ஒவ்வொரு விளைவுக்கும் ஒரு காரணம் உண்டு; ஒவ்வொரு காரணத்துக்கும் ஒரு விளைவு உண்டு என்பதைப் புரிந்து கொண்டு நிகழ்காலத்தில் வாழ்கிற போது, எப்படி வாழ வேண்டும் என்று விளக்குகிறார் கிருஷ்ணர்.

எல்லா நிகழ்வுகளுக்கும் நீங்கள் இல்லை காரணம்; நீங்கள் ஒரு கருவி. ஒவ்வொரு தருணத்திலும் உங்கள் மூலமாகச் செயல்கள் நடைபெறுகின்றன என்ற எண்ணத்தை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். உங்கள் செயல்களால் உங்கள் மனம் தடுமாற்றம் அடையாது. கொடுக்கப்பட்ட பணியைச் செய்வதாகவே நினைக்கும்.


இதைத்தான் கிருஷ்ணரும், போர்க் களத்தில் குழம்பிப் போயிருந்த அர்ச்சுனனிடம் சொல்கிறார். "கௌரவர்களையும்; பீஷ்மர், துரோணாச்சாரியார் போன்ற மரியாதைக்குரியவர்களையும் நீ போரிட்டுக் கொல்லவில்லை. அவர்கள் மரணம் நிகழ வேண்டும். அந்தக் காரியத்தைச் செய்யும் பணி உன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள். கொடுக்கப்பட்ட பணியை முழு மையான ஈடுபாட்டுடன் செய்து முடிக்க வேண்டியது உன்னுடைய கடமை. அதைத்தான் இங்கே நீ செய்ய வேண்டும். உன்னுடைய சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கெல்லாம் இங்கு இடம் கிடையாது என்று மனத் தெளிவு கொள்" என்று அர்ச்சுனனிடம் எடுத்துச் சொல்கிறார் கிருஷ்ணர்.

அப்படியென்றால் நம் வாழ்க்கை முழுவதும், பல்வேறு செயல்களுக்கும் கருவியாகவே வாழ்ந்து கொண்டு இருக்க வேண்டியதுதானா என்ற கேள்வி எழுகிறது.


"இல்லை! ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கைக்கும் நோக்கம் இருக்கிறது. அது என்ன நோக்கம்? அதை எப்படித் தெரிந்து கொள்வது?

பகவத்கீதை போன்ற புனித நூல்களைப் படியுங்கள். அதில் சொல்லப்படும் கருத்துக்களை உங்களுக்குள்ளே வாங்கிக் கொள்ளுங்கள். மாடு, தான் சாப்பிட உணவை, கொஞ்ச நேரம் கழித்து, நிதானமாக அசை போடுவது போல, நீங்களும் உள்வாங்கிய கருத்துக்களை, அமைதியாக அசை போடுங்கள். வாழ்க்கையில் நோக்கம் உண்டு என்பதைப் பற்றி தெளிவு பிறக்கும்;

வாழ்க்கைக்கு நோக்கம் உண்டு என்று தெளிவாகப் புரிந்து கொண்ட பின் அது என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். உங்கள் சிந்தனை அந்தப் பாதையில் அடி எடுத்து வைத்து நகரும்.



உங்களில் சிலருக்கு வேறு மாதிரியான ஒரு எண்ணம்கூட ஏற்படலாம். "இப்போது நம் வாழ்க்கையில் ஒரு குறையும் இல்லையே. வாழ்க்கை சந்தோஷமாகத் தானே ஓடிக் கொண்டு இருக்கிறது. உலகில் எல்லோரும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்றுதானே விரும்புகிறார்கள். அந்த சந்தோஷத்துக்காகத் தானே உழைக்கிறார்கள்; சம்பாதிக்கிறார்கள். அந்த நோக்கம் நிறைவேறுகிறபோது, வாழ்க்கையில் இன்னும் என்ன வேண்டும் என்று சிந்திக்கக் கூடும்.



அவர்களுக்கு நான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

உங்கள் வாழ்க்கை சந்தோஷமாக இருப்பதாகச் சொல்கிறீர்களில்லையா? அந்த சந்தோஷம் உங்களுக்கு எதன் மூலமாகக் கிடைக்கிறது?

ஒருவர், எனக்கு நல்ல மனைவி; புத்திசாலியான குழந்தைகள். நிம்மதியான குடும்ப வாழ்க்கை. அதனால், வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறது என்று சொல்வார்.

இன்னொருவர், "எனது பிசினஸ் பிரமாதமாக நடக்கிறது. மாதா மாதம் லாபம் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. என்னை நம்பி நூறு குடும்பங்கள் இருக்கின்றன. லாபத்தில் ஒரு பகுதியை சமூக சேவைக்காகக் கொடுத்து விடுகிறேன். எனக்கு சந்தோஷமும், மனத் திருப்தியும் நிறையக் கிடைக்கிறது'' என்று சொல்வார்.

இன்னொருவரோ, ''என் இரண்டு பெண்களையும் நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தாகிவிட்டது. ரிடையர்டு வாழ்க்கை, டென்ஷன் இல்லாமல் இருக்கிறது. வருகிற பென்ஷன், வட்டி இவற்றை வைத்துக் கொண்டு, கடைசிக் காலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று முகத்தில் மகிழ்ச்சி பொங்கத் தெரிவிக்கலாம். இந்த மூன்று பேருமே, சந்தோஷமாக தங்கள் வாழ்க்கையை அனுபவிக் கட்டும். அவர்களுக்கு என் மனப்பூர்வமான வாழ்த்து!

ஆனால் -

நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையப் பெற்ற முதல் நண்பரது அலுவலகத்தில் ஏதோ ஒரு சீரியஸான பிரச்னை. அப்போது நல்ல மனைவி, புத்திசாலிக் குழந்தைகள் இருந்தபோதிலும் சந்தோஷமாக இருக்க முடியுமா?

இரண்டாவது நண்பருக்கு எதிர்பாராத விதமாய், வியாபாரத்தில் பிரச்னை. அவரது மனநிம்மதியும், சந்தோஷமும் தொடருமா?

இல்லை, சீனியர் சிடிஸனான நமது மூன்றாவது நபரின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. அவரது ரிடையர்டு வாழ்க்கையை முன் போலவே தொடர்ந்து ஜாலியாக அனுபவித்துக் கொண்டிருக்க முடியுமா?

முடியாதுதான்! ஆனால் 'முடியும்!' என்கிறேன் நான். அட! இதென்ன புதுக் குழப்பம் என்கிறீர்களா?

(வெற்றி தொடரும்)

நமீதாவால் சண்டையாமே!

ஒரே நாள்ல 37 ஆயிரம் பேர் மொட்டை போட்டிருக்காங்க. 1 லட்சம் பேர் அன்னதானம் சாப்பிட்டிருக்காங்க. 63 ஆயிரம் பேர் தரிசனம் பண்ணியிருக்காங்க. அதாவது நிமிஷத்துக்கு 165 பேர் மூலஸ்தானத்தை (காவலாளிகள் தள்ளிவிட) க்ராஸ் பண்ணியிருக்காங்க. அன்னிக்கு ஒரு நாள் மட்டும் பெருமாளோட உண்டியல் கலெக்ஷன் ஒண்ணரைக் கோடியாம். எல்லாம் நம்ம திருப்பதியில ரெண்டு வாரத்துக்கு முன்னாடி சனிக்கிழமை வந்துச்சல்ல. அப்போ நிகழ்ந்த புதிய சாதனைகள்தான் திருப்பதில பிரம்மோத்சவம் நடக்கற தால கூட்டம் வழக்கத்தைவிட ஓஹோ! 'திருப்பதி'ன்னாலே கலெக்ஷென்தான். நம்ம அல்டிமேட் ஸ்டாரோட 'திருப்பதி' இன்னா பண்ணப் போகுதுன்னு பார்ப்போம்.

அடுத்ததும் கோயில் மேட்டர்தான். இது மதுரை மேட்டர். 'மதுர மீனாட்சியம்மன் கோவில் உலக அதிசயமா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கு!'ன்னு எனக்கு மதுர அழகிரிகிட்ட இருந்து எஸ்.எம்.எஸ். வந்துச்சு. (இதுநம்ம ப்ரெண்டு அழகிரிங்க!) இந்த மாதிரி பலருக்கும் பலர்கிட்டயிருந்து எஸ்.எம்.எஸ். பரவியிருக்கு. மக்களே அது உண்மையில்ல! இப்போதைய நெலவரப்படி உலக அதிசயப் பட்டியல் 27ல மீனாட்சி அம்மன் இருக்குற இடம் 25. டிசம்பர் 24 வரைக்கும் டைம் இருக்குது. டெய்லி ஆயிரக்கணக்கா வோட்டு விழுந்தா இடம் கிடைக்கும். இப்போ முதல் இடத்துல எகிப்து மம்மியும், ரெண்டாவது இடத்துல நம்ம மும்'தாஜ்'ம் இருக்காங்களாம். என்னத்த சொல்ல, கடவுளையே எலெக்ஷன்ல நிறுத்திட்டோம். அதான் மனுஷ புத்தி.

இங்கிலீஷ்காரன் வெற்றிக்கு நான் மட்டும் காரணமில்ல. நமீதாவும்தான் காரணம் - சொன்னவர் சத்யராஜ். 'இதுவரைக்கும் நமீதா அப்பாவுக்கு ஜோடி. இப்போ 'கோவை பிரதர்ஸ்' படத்துல என் ஜோடி. இதனால எங்க குடும்பத்துல சண்டையே வந்தாலும் பரவாயில்லை!' - இப்படி மார் தட்டி இருப்பவர் சிபிராஜ். இந்தத் திருவாசகங்கள் ஒலித்த இடம் இங்கிலீஷ்காரன் நூறாவது நாள் விழா. நமீதாவால குடும்பத்துல என்ன பிரச்னை வரப் போகுதுன்னு அந்த 'லொள்ளு' குடும்பத்துக்கே வெளிச்சம்! இந்த இடத்துல ஒரு பஞ்ச் டயலாக் உட்டுக்கிறேன். 'தொப்பை இருந்தாலும் என்னிக்கும் போலீஸ்காரனுக்கு மதிப்பு. ஆனா என்னிக்கும் தொப்பை இருந்தா நடிகைகளுக்கு மதிப்பு கெடையாது.'

சின்னான்

செய்திகள்





'சிவாஜி'யில் வில்லனா நடிக்கிறது அவமானப்படுத்தற மாதிரி!

- சத்யராஜ்

ஃபிலிம் சிட்டியில் 'சிவலிங்கம் ஐ.பி.எஸ்'ஸாக வில்லன்களைப் புரட்டிக் கொண்டிருந்த சத்யராஜைச் சந்தித்தோம். அவருக்கே உரிய நக்கல், நையாண்டியுடன் கேள்விகளை எதிர்கொண்டார்...

பழைய வாழ்க்கையை எப்பவாவது திரும்பிப் பார்ப்பதுண்டா?

"என்ன இப்படிக் கேட்டுட்டீங்க? அதை யெல்லாம் மறக்க முடியுமா? நான் வாய்ப்புத் தேடி அலைஞ்சப்போ சாப்பாட்டுக்கு எப்பவுமே சிரமப்பட்டதேயில்ல. அதனால வாழ்க்கையில நடக்கிற எல்லா விஷயத்தை யுமே காமெடியாதான் எடுத்துக்குவேன்.

ஒருசமயம் தேவர்கிட்ட வாய்ப்புக் கேட்டுப் போனப்ப, நான் கோயமுத்தூர்னு தெரிஞ்சுகிட்டு "நீ யார் பையன்?"னு கேட்டார். எங்கப்பா கோயமுத்தூர்ல பிரபல மான டாக்டர். அவர் பேரைச் சொன்னதும் "முருகா...முருகா"னு தலையில அடிச்சுக் கிட்டு "நீயெல்லாம் ஏம்பா நடிக்க வந்தேன்?"னு கேட்டார். நான் "ஏற்கெனவே 'சட்டம் என் கையில்' படத்துல நடிச் சுட்டேன். என்னைத் திருப்பி அனுப் பிடாதீங்க'ன்னு சொன்னேன். "சரி, உனக்கு பல்டி அடிக்கத் தெரி யுமா?"ன்னார். நானும் உடனே பல்டி அடிச்சுக் காண்பிச் சேன்.

"இதை விட கொடுமை என்னான்னா 'இதயம் பேசு கிறது' பத்திரிகைல ஒரு தொடர்கதைக்கு ஃபோட்டோ எடுத்தாங்க. அப்ப என் முகத் தைப் பார்த்துட்டு வேணாம்னு சொல்லிட் டாங்க. ஒரு தொடர் கதைக்குக் கூட ஃபோட்டோ எடுக்க



லாயக்கில்லாத நாம சினிமாவுல எப்படி ஜெயிக்கப் போறோம்னு நொந்து போயிட்டேன். நடிகர் அமிதாப்புக்கு குரல்தான் ரொம்பவும் கம்பீரமா இருக்கும். அவரையே ரேடியோவுல செய்தி வாசிக்கத் தகுதியில்லன்னு அனுப்பிட்டாங்களாம். இந்த உதாரணத்தை எனக்கு வசதியா எடுத்துக்கிட்டு போராடி ஜெயிச்சேன்.

இப்ப சினிமா வாய்ப்புத் தேடி வர்றவங்க அடிப்படை வருமானத்துக்கு வசதி செய்துகிட்டு வாய்ப்புத் தேடணும். அது ரொம்ப முக்கியம்''

டைரக்டர் மணிவண்ணனை மறந்துட்டீங்களா?

''சரியா போச்சு போங்க! அவரில்லன்னா நான் ஏதுங்க? என்னோட மறக்க முடியாத ரசிகரே அவருதாங்க. அவரு என்னைய ரசிச்சதனாலதான் வாழ்க்கையில நான் இந்த அளவுக்கு முன்னுக்கு வர முடிஞ்சுது. நான் மட்டுமல்ல, எந்த நடிகரையுமே திறமையான டைரக்டர் ரசிச்சு, கேரக்டர் கொடுத்தாதான் சீக்கிரமா முன்னுக்கு வர முடியும். அவருதான் என்னைய உருவ ரீதியா கொடூர வில்லனா காட்டினாரு. 'நூறாவது நாள்'ல பெரிய பிரேக் கிடைச்சது. அதேமாதிரி '24 மணி நேரம்' படத்துல வசன ரீதியான வில்லனா பிரபலப்படுத்தினார். 'என் கேரக்டரையே புரிஞ்சுக்கற மாட்டேங்கிறீங்களே' என்கிற வசனம் ஏகப் பிரபலமாயிடுச்சு. அதனால எப்பவும் என்னோட மதிப்பிற்குரிய ரசிகர் மணிவண்ணன்தான்''



சென்னையில் பரவி வரும் இரவு நடனக் கலாசாரம் பற்றி என்ன நினைக்கிறீங்க?

''மனித வாழ்க்கையில கேளிக்கைங்கறது அத்தியாவசியம்தான். ஆனா, அதை சட்டத்துக்குட்பட்டு வைச்சுக்கிட்டா நல்லது. அந்தக் காலத்துல மன்னர்கள் 'நாட்டியம் ஆரம்பம் ஆகட்டும்'னு ஆடச் சொல்லி ரசிச்சாங்க. இப்ப டிஸ்கோ விடுதியில ஆடுறாங்க. அவ்ளோதான் வித்தியாசம்''

உங்கள் சம்பளத்தை உயர்த்தி விட்டதாகப் பேச்சு அடிபடுகிறதே...?

''என்னுடைய சம்பளம் உயர்வதும், குறைவதும் எப்பவும் என் கையிலே கிடையாது. பெரும்பாலும் தெரிஞ்சவங்களுக்கும், நெருங்கினவங்களுக்கும்தான் படம் பண்றேன். அதனால அவங்களா சேர்த்துக் கொடுத்தா வாங்கிக்குவேன். நானா எப்பவும் டிமாண்ட் பண்றதே கிடையாது. 'வால்டர் வெற்றிவேல்', 'அமைதிப்படை' சமயத்தில்கூட குடுக்கறதை வாங்கிக்கிட்டேன். இப்பவும் அப்படிதான். அவங்களா சேர்த்து குடுத்தா வேணாம்னு சொல்ற அளவுக்கு தாராள மனசு எனக்கில்ல. அவங்களா குறைச்சா அதையும் ஏத்துக்குவேன். எனக்குத் தெரிஞ்ச தொழில் சினிமா. இதை ரொம்பவும் நேசிக்கிறேன். ஒரு சராசரி இந்தியன் சம்பாதிக்கறதுக்கு அதிகமாவே சம்பாதிக்கிறேன். இன்னும் சொல்லப் போனா என்னோட அழகுக்கும், அறிவுக்கும், குறிப்பா தேவைக்கும் அதிகமாவே சம்பாதிக்கிறேன். இதுல போய் ஏன் சண்டை போடணும்?''

" நடிகர்சங்கத்துல அவரு உறுப்பினராகட்டும். அப்புறம் இந்தக் கேள்விக்கு பதில் சொல்றேன் "

திடீரென எழுந்துள்ள தமிழ் கோஷம் பற்றி என்ன நினைக்கிறீங்க?

''தமிழ் வாழ்க என்பதைவிட தமிழன் வாழ்க என்பதுதான் முக்கியம். தமிழன் வாழ்றதுக்கு இன்றைய சூழலில் ஆங்கிலம் ரொம்ப முக்கியம். ஆங்கில அறிவை

தமிழன் வளர்த்துக்கணும்"

'சிவாஜி' படத்தில் வில்லனாக நடிக்க அழைத்ததாக... ஒரு தகவல் உலா வந்ததே!

"ஆமா... வில்லனாக நடிக்கக் கேட்டாங்க! ஆனா நான் இப்ப நிறையப் படங்கள்ல ஹீரோவா நடிக்கிறதால தேதியில்லாமப் போச்சு. பத்து புரொட்யூசர் என்னை நம்பி எனக்குள்ள வியாபாரத்தை நம்பி படமெடுக்குறாங்க. அதை விட்டுட்டு இந்தப் படத்துல வில்லனா நடிக்கிறேன்னு வைச்சுக்கோங்க, அது என்னோட தயாரிப்பாளர்களை அவமானப் படுத்துற மாதிரிங்கறது என்னோட தாழ்மையான கருத்து. மற்றபடி நடிப்புன்னு பார்த்தா எல்லாமே நடிப்புதான். வில்லனா நடிக்கறதை தாழ்வானதா நினைக்கலை"



"நேத்துக் கூட்டத்துல, ஷாப்பிங் பண்ண வந்திருந்த யாரோ குழந்தையை விட்டு விட்டுப் போயிட்டாங்க!"

"ஐயோ! அப்புறம் எப்படிக் கண்டுபிடிச்சாங்க?"

"'குழந்தையுடன் மெகா பரிசு உண்டு'ன்னு அறிவிச்சதும், உடனே வந்துட்டாங்க!"

- என். உஷாதேவி

விஜயகாந்த் அரசியல்?

"ஒரு நபர் அரசியலுக்குத் தகுதியானவராங்கறதை இப்ப சொல்ல முடியாது. போகப் போக அவங்களோட நடவடிக்கையை வைச்சுதான் சொல்ல முடியும். நானறிந்த வரையில் விஜயகாந்த் சார் அரசியல்ல ஒரு நல்ல இடத்தைப் பிடிச்சு பலம் வாய்ந்த சக்தியா இருப்பார். என் நண்பரா இருக்கறதால சொல்றேன். அரசியல்ல தாக்குப் பிடிக்கற அளவு சாதுர்யமும், திறமையும் பொறுமையும் விஜயகாந்த்கிட்ட நிறைய இருக்கு"

படங்களில் சீர்திருத்தக் கருத்துகளைச் சொல்லும் நடிகர்கள், அரசியலுக்கு வரும்போது அவர்கள் சார்ந்த சமூகத்தை முன்நிறுத்தி வருவது ஆரோக்கியமானதாக இருக்குமா?

"சாதி அரசியலுக்கு நடிகர்கள் மட்டுமே காரணமில்ல. பல காலமாகவே சாதிய உணர்வுகள் தூண்டிவிடப்பட்டு அதன் மூலமாவே அரசியல் நடத்தி வரப்பட்டிருக்கு. அந்தச் செயல் தொடர்ந்து நடந்துக்கிட்டிருக்கு. நிச்சயம் தவறான விஷயம்தான். இதை நிறுத்தணும். சாதி உணர்வே தப்புங்கிறேன். இதுக்கு நடிகர்கள் மட்டும் காரணம்னா ஏத்துக்க முடியாது. இதோட வேர்கள் எங்கேயோ இருக்கு. அந்த வேர்களை அழிக்கிற முயற்சியில்தான் ஈடுபடணும்"

திருமாவளவன் நடிகர் சங்கத் தேர்தலில் நிற்கப் போகிறாராமே?

"முதல்ல அவரு மெம்பரே கிடையாது. நடிகர்சங்கத்துல அவரு உறுப்பினரா ஆகட்டும். அப்புறம் இந்தக் கேள்விக்கு பதில் சொல்றேன். நடிக்கிறவங்க யார் வேணுமானாலும் மெம்பராகலாம். ஆனா தேர்தல்ல நிற்க முடியாது. அதற்கு சில சட்டத்திட்டமெல்லாம் இருக்கு"

தவறான தகவல் நீங்க கொடுத்ததா திருமாவளவன் பேசியிருப்பது பற்றி...

"'புரட்சித் தமிழன்' என்கிற பட்டம் எனக்கு ரசிகர்கள் அன்பாகக் கொடுத்தது. இதைப் போட்டுக் கொள்ள யாருடைய அனுமதியையும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. குஷ்பு சொன்ன கருத்துக்கு எதிரா போராட்டம் நடத்தியது தவறுனு நான் சொல்லலை. 'நடிகர் சங்கம்' என்ற பாரம்பரியமிக்க இடத்தில் துடைப்பம், செருப்புகளை எடுத்துட்டு வந்து போராட்டம் நடத்தியதுதான் தவறுன்னு சொன்னேன். நண்பர் திருமாவளவன் இதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். உதாரணமா, கடவுள் இல்லை என்று நான் சொல்றேன். மாற்றுக் கருத்து இருக்கிறவங்க என் வீட்டு முன்னால வந்து போராட்டம் நடத்தலாமே தவிர நடிகர் சங்கத்துல போய் கலாட்டா பண்ணக்கூடாது"

- தேனி கண்ணன்

படங்கள்: **பன்னீர்செல்வம்**

"கவுண்டர்ல காசு கையில மாலு!"

தி.நகர் கடைகளிலேயே ஷாப்பிங் செய்து செய்து அலுத்துப் போன சன் மியூஸிக் காம்பியரர்கள் பிரஜனும் நிரஞ்சனாவும் ஃபார் எ சேஞ்ச்



'ஷாப்பர்ஸ் ஸ்டாப்' காம்ப்ளக்ஸு'க்கு விரைந்தனர். (பிறகுதான் தெரிந்தது அவர்கள் பாக்கெட்டிலும் இருந்தது 'சேஞ்ச்' மட்டும்தான் என்று!)

"ஹே, நிரஞ்சனா, இங்க வந்தும் 'வாழ்த்தலாம் வாங்க'ன்னு உன் தொணப்பை ஆரம்பிச்சுடாதே. வந்தோமா போனாமோன்னு இருக்கணும். ரைட்?"

"ஓகே!... நீயும் பொண்ணுங்களைப் பார்த்து 'ஆ'ன்னு வாயைப் பிளக்கக் கூடாது. சரிசரி, சுமாரா ஒரு ட்ரெஸ் எடுக்க நீ எவ்வளவு நேரம் எடுத்துக்குவே?"

'ஷாப்பர்ஸ் ஸ்டாப்'பின் பேஸ்மெண்டில் நுழைந்து கூலிங்கிளாஸ் போட்டு செக் பண்ணிக் கொண்டிருந்தார் பிரஜன். ஓட்ட ஆரம்பித்துவிட்டார் நிரஞ்சனா.

"ஹா...ஹா... அப்படியே கையில ஒரு குச்சி வைச்சுக்கிட்டு 'புண்ணியம் தேடி காசிக்குப் போவார் இந்த உலகத்திலே'ன்னு பாடினேன்னா சூப்பரா இருக்கும் பிரஜன்" அந்தச் சமயம் பார்த்து வண்ண வண்ண உடைகள் அணிந்த பெண்கள் பிரஜனிடம் ஓடி வந்து ஆட்டோகிராப் வாங்க, நிரஞ்சனா காதுகளில் ஈஸ்ட்மென் கலரில் புகை!

"ஆங், என்னமோ கேட்டில்ல, நான் கடை சாத்துற வரைக்கும் ட்ரெஸ்களை மேய்ஞ்சிட்டுதான் இருப்பேன். பொண்ணுங்க



மட்டுமில்ல. பசங்களும் அவ்வளவு சீக்கிரம் டிரஸ் செலக்ட் செஞ்சிட மாட்டோம்."

அப்படியே இடதுபுறம் தோல்



டைகள் செக்‌ஷனுக்கு வந்து இருவரும் நோட்டமிட்டனர். கையில் மாட்டிப் பார்த்தனர். ம்ஹூம்... காசு கொடுத்து மட்டும் வாங்கவேயில்லை.

கடிகார முள் வேகமாகச் சுழன்று கொண்டிருக்க, விதவிதமான வண்ண ஆடைகளில் மனம் துறந்தார் நிரஞ்சனா. ப்ரஜனிடம் ஓடிவந்து, "எனக்கு இதெல்லாம் வேணும்!" என்று கைகாட்ட, "சிம்பிள், கவுண்டர்ல காசு கையில மாலு" என்று கழன்றுகொண்டார் ப்ரஜன். 'கிட்ஸ் செக்‌ஷ'னில் நுழைந்தபிறகு இருவரும் தமிழகம் அறிந்த காம்பியரர்கள் என்பதையே மறந்துவிட்டனர்.

பொம்மைகளையெல்லாம் கழுத்திலும் தலையிலும் தொங்கப் போட்டுக்கொண்டு போஸ் கொடுக்க, குழந்தைகளெல்லாம் இருவரையும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தன. ஷேம் ஷேம்!

"ப்ரஜன், நான் வாங்குற சம்பளத்தையெல்லாம் ஷாப்பிங்குக்கே செலவு பண்ணிடுவேன். நீ?"

"டபுள். ஷாப்பிங்குக்கு செலவு செய்யறதுக்காகவே நான் நிறைய சம்பாதிக்கிறேன்."

சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் இருவரும் அருகேயுள்ள கடையில் கோன் ஐஸை பதம் பார்த்துக் கொண்டிருந்தனர். "ம்ஹூம்... 'ஷாப்பிங் செய்யப் போறேன்'னு கிளம்பிட்டு வெறும் அரட்டை ஷாப்பிங் மட்டும் செஞ்ச இவங்களை காத்ரினாவுல தள்ளி விட்டுணும்" என்று ஷாப்பர்ஸ் ஸ்டாப் ஊழியர் ஒருவர் நீண்ட நேரமாய்ப் புலம்பிக் கொண்டிருந்தார்.

- சநகன்

அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி



'கல்கி' 9.10.2005 இதழில், 'கச்சேரிக்குப் போன மியூசிக் அகடமி' என்ற தலைப்பில் வெளியான கட்டுரைக்கு, அகடமியின் சார்பில் அதன் செயலர் திரு. எம்.எஸ்.வெங்கட்ராமன் பதில் கூறுகிறார் :

கட்டுரையில் முதலாவதாக எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டு, 'உப விதிகளைத் திருத்திய நிர்வாகிகள், அவற்றை முறையாகப் பதிவு செய்யவில்லை' என்பது.

1979ல் திருத்தப்பட்ட புதிய விதிமுறைகளை, பை-லாஸ் உட்பட, அகடமி அதிகாரிகளிடம் சமர்ப்பித்திருக்கிறது. அதை அந்த அதிகாரிகளும் ஏற்று, முத்திரை குத்தி, கையொப்பம் இட்டிருக்கிறார்கள். அவற்றைப் பெற்றுக்கொண்டு முத்திரை இட்டவர் தகுதி வாய்ந்த அதிகாரி அல்ல என்று இப்போது கூறுகிறார்கள். அதிகாரி தகுதி வாய்ந்தவரா, அல்லவா என்று அகடமிக்கு எப்படித் தெரியும்?

இதை உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்ச், தனது தீர்ப்பில் எப்படி குறிப்பிட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

"திருத்தப்பட்ட உப விதிகள் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அது இங்கே விவாதத்துக்குக் கருதப்படவில்லை. காரணம், எல்லாப் பதவிகளுக்கும் தேர்தல்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு, மியூசிக் அகடமியின் செயல்பாடுகள் முறையாகவே இருந்திருக்கின்றன."

சட்டத்துக்குப் புறம்பாக ஒரு டிரஸ்டி குழு நியமிக்கப்பட்டது என்பது அடுத்த குற்றச்சாட்டு.

1978 வரையிலும் டிரஸ்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டே வந்திருக்கின்றனர். 1979 முதல் நிர்வாகக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்கள். சமூகத்தில் பெரிதும் போற்றப்பட்ட பெரியவர்கள். இந்த டிரஸ்டிகளை நியமிக்க ஜெனரல் பாடி ஒப்புதல் அளித்தது. நிதி விஷயங்களில் ஆலோசனை பெறவே இவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் யாரும் 'கொல்லைப் புற வழியாக' வந்தவர்கள் அல்லர்.

தனி அதிகாரியை நியமிக்க, தனக்கு ஆட்சேபணை இல்லை என டி.டி.வாசு எழுதினார் என்பது உண்மை. ஆனால் பெரும்பான்மை நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கருத்தைக் கேட்காமலே தானாக எழுதினார். இதை எங்கள் 8.5.2003 கடிதத்தில் தெரியப்படுத்தினோம்.

சங்கம், முறைகேடாகச் செயல்பட்டது அல்லது விதிகளுக்கு எதிராகச் செயல்பட்டது அல்லது சங்கத்தின் நோக்கங்களுக்குப் பாதகம் விளைவிக்கும் முறையில் இயங்கியது என்றால் மட்டுமே தனி அதிகாரியை நியமிக்கலாம். "அப்படி நியமிக்கு முன்னர் அகடமி தன் கருத்தை வெளியிட அரசு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்" என்று நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள்.

குறைகள்,

போஷகர், நன்கொடையாளர், உறுப்பினர் ஆகியோர் தரவேண்டிய தொகையின் மதிப்பை 31.10.92 அன்று உயர்த்தி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "இதன் அடிப்படையில் பலர் விண்ணப்

பப் படிவம் அனுப்பி வைத்து உறுப்பினர்களாகவும் ஆகியிருக்கிறார்கள். தாங்களாகவே விருப்பப்பட்டு தொகையையும் செலுத்தியிருக்கிறார்கள். இப்போது திடீரென்று அந்தக் கூடுதல் தொகையைத் திருப்பித் தருமாறு கேட்பதோ, அப்படிச் செலுத்தப்பட்ட தொகைக்கு ஏற்ப முன்பிருந்த உயர்வான பிரிவுக்குத் தம் உறுப்பினர் பதவியை மாற்றக் கோருவதோ, ஏற்க முடியாதவை. சங்கம் இதை முறைப்படுத்தி, பதிவு செய்தால் போதுமானது. அல்லது சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யட்டும்'' என்று நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள். அதனால், எந்தவித நிதி முறைகேடும் நடக்கவில்லை என்று தெளிவு செய்யப்பட்டிருக்கிறது.

நாங்கள் தவறுகளே செய்யவில்லை என்று சொல்லவில்லை. ஆனால், அந்தத் தவறுகள் குற்றங்கள் அல்ல. அந்தத் தவறுகளை சரி செய்ய வேண்டும் என்று அரசு கூறியபோது, சரி செய்து இருக்கிறோம்.


* 'ஹிந்து' முரளி

முறைகேடுகளில் அடுத்ததாகச் சொல்லப்பட்டது, ''மூன்று வருடங்களுக்கு மேல் உறுப்பினராக இருப்பவர் மட்டுமே தேர்தலில் போட்டியிடலாம் என்ற மாற்றம் காரணமாக, ஓர் உறுப்பினர், தேர்தலில் போட்டியிட முடியாமல் போயிற்று'' என்பது. ''அவர் அப்போதே சட்டத்தின் துணையோடு இதை எதிர்த்திருக்கலாம்'' என்று தீர்ப்பில் நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள். இதில் அகடமியின் தவறு ஏதுமில்லை.

சென்ற ஆண்டு இசை விழா நிகழ்ச்சிகளை 16.12.2004 அன்று தீர்ப்புக் கிடைத்த உடனேயே, சுமார் 650 கலைஞர்களின் ஒத்துழைப்போடு 19.12.2004 அன்றே தொடங்கி நடத்தி முடித்தோம். கலைஞர்களை அலைக்கழித்திருந்தால் இது நடந்திருக்குமா?

கலை, கம்பெனி ஸ்பான்சர்களின் கைகளுக்குப் போய்விடக் கூடாது என்று எழுதியிருக்கிறீர்கள். ஸ்பான்சர்கள் பணம் கொடுப்பதோடு சரி. எந்த நிபந்தனையும் விதிப்பதில்லை. விதித்தால் ஏற்க மாட்டோம் என்று அவர்களுக்குத் தெரியும். 'வியாபார வித்தகர்கள் கைக்கு அகடமி போய் விடக் கூடாது' என்று நீங்கள் எழுதியிருப்பதை வரவேற்கிறோம்.

யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்பதை ஒரு பிரச்னையாக நாங்கள் நினைக்கவில்லை. அகடமிக்கு முறையான தேர்தலை நடத்தி; தலைவர் முதல் நிர்வாகக் குழு உறுப்பினர் வரை தேர்ந்தெடுக்கப்படுவதை மனமார வரவேற்கிறோம். 'இது ஒன்றே இப்போதைய எல்லாப் பிரச்னைகளுக்கும் முடிவு அளிக்கும்' என்று நீதிபதிகள் கூறியிருப்பதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

சந்திப்பு :
சாருகேசி

குற்றங்களல்ல!

பாரம்பரியம் மிக்க 'ஹிந்து' பத்திரிகையின் இணை நிர்வாக இயக்குனர் திரு என்.முரளி, மற்றும் நல்லி குப்புசாமி ஆகியோர் அகடமி தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதாக அறிகிறோம். வெற்றி பெறுவது யாராயினும் அவர் அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று, எல்லாவிதமான சர்ச்சைகளும் ஓய்ந்து, அகடமியின் பெயரும் புகழும் முன்போலவே ஓங்கி நிலைக்கும் என்று கருதுகிறோம்.

- ஆசிரியர்

க.ஒப்பிலி அப்பன்

தனது புது மனைவி கண்கலங்குவதைப் பார்த்த பத்மனாபன், "ஏன்... என்னாச்சு? வீட்டு ஞாபகமா..? அதான் நாளை மறுநாள் உங்க வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போகப் போறோமே..." என்றான் கனிவுடன்.

"நான் வருத்தப்பட்டது அதுக்காக இல்லைங்க. நேத்து என் சிநேகிதி கலாவை கோயில்ல பார்த்தேன். நானும் அவளும் உயிருக்குயிரான தோழிகள்... எப்பவுமே ஒண்ணாதான் இருப்போம். எனக்குக் கல்யாணம் ஆனதாலே முன்னைப்போல என்னுடன் பேசவோ... பழகவோ முடியாதேன்னு சொல்லி, என்னைக் கட்டிப்பிடிச்சு அழுதுட்டா... எனக்கும் அழுகை வந்துடுச்சு.. அத நெனச்சுதான் இப்ப நான் கண் கலங்கினேன்..." என்றாள்.

"என்ன நீ...? இதுக்குப் போய் வருத்தப்படறே...? நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன். நாம என்ன வெளிநாட்டுக்கா போயிட்டோம்... இனிமே பார்க்கவே முடியாமப் போறதுக்கு...? ஒரே ஊர்தானே.. நீ எப்ப வேணுமானாலும் பேசலாம்தானே...?"

"அதெப்படிங்க முடியும்...? ஒரு பெண்... அதுவும் கல்யாணமாயிட்டா எப்படிங்க முன்னைப் போல இருக்க முடியும்...?"

என்னுயிர் தோழி!



இதனைக் கேட்டு கலகல வெனச் சிரித்த பத்மனாபன், ''புவனா... நீ எந்த யுகத்துல இருக்கே? மங்கையர் ஸ்பெஷல்... ஜாலிடே... விமன்ஸ் டேன்னு கொண்டாடுற யுகம் இது... உங்களுக்கு இப்ப ஏகப்பட்ட சுதந்திரம்...''

"இந்தச் சுதந்திரம் எழுத்திலும் பேச்சிலும்தாங்க... யதார்த்த வாழ்க்கையில... அதுவும் கல்யாணமாயிட்டா, பெண்கள் சிலவற்றை தியாகம் செய்துதான் தீரணும்... இது எங்களுக்கான எழுதப்படாத சட்டம்... விதி... ஆண்களைப் போல அவ்வளவு சுதந்திரமா, நட்பு அது இதுன்னு இருக்க முடியாதுங்க..."

"சரி... வீண் வாதம் எதுக்கு...? உன்னோட நட்புக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன். கல்யாணத்துக்கு முந்தி, நீ எப்படி உன் தோழியுடன் பேசிப் பழகினியோ அப்படியே இனியும் இருக்கலாம். இதில் முழு சுதந்திரம் உனக்குண்டு... உண்மையான நட்பின் இலக்கணம் தெரிந்தவன் நான்... கவலைப்படாதே... உன் உயிர்த்தோழிகிட்டேயும் சொல். உங்க நட்புக்கு நானோ... நம் திருமணமோ தடையா இருக்காதுன்னு... இப்ப சந்தோஷம்தானே...?"

புவனாவின் முகத்தில் பூத்தது மலர்ச்சி...!

அன்று ஞாயிற்றுக்கிழமை...

ஜாலியாக ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, சினிமாவுக்கு புவனாவுடன் சென்று வரலாம் என்று நினைத்தான் பத்மனாபன். அதைப்பற்றி சொல்ல ஆரம்பிக்கும் சமயம், ''என்னங்க'' என்று ஆரம்பித்தாள் புவனா...

"சொல்லுங்க..."

"என் சினேகிதி... அதான் கலாவை வீட்டுக்குச் சாப்பிட கூப் பிட்டிருக்கேன். இன்னிக்கு பூரா நானும் அவளும் ஒன்னா







இருக்கப் போறோம்...''

''ஓ.கே... கேரி ஆன்...'' என்றவன் மளமள என்று குளித்து டிபன் சாப்பிட்டு விட்டு, நண்பனைப் பார்க்க வெளியே சென்றுவிட்டான்.

''என்ன இருந்தாலும் நீ ரொம்ப ரொம்பக் கொடுத்து வச்சவடி. நாம ஜாலியா பேச, நம்ம சுதந்திரத்துக்குத் தடையா இருக்கக் கூடாதுன்னு உன் கணவர் வெளியே போயிட்டார்னு சொல்றியே.. அற்புதமான மனுஷன் உன் புருஷன்...'' என்றாள் கலா...

பத்மனாபனும் புவனாவும் ஒரு நாள், கடைக்குச் சென்றுவிட்டு திரும்பும் சமயம், கலாவை வழியில் தற்செயலாகப் பார்த்தனர்.

சிறிது நேரம் புவனாவுடன் பேசிய கலா, சட்டென்று பத்மனாபன் பக்கம் திரும்பி, ''சார்... நான் உங்க வீட்டுக்கு வந்தா... நீங்க தயவுசெய்து இனிமே வெளியே எங்கும் போக வேணாம்... எங்க நட்புக்கு இவ்வளவு மரியாதை தரும் உங்களை நெனச்சா பெருமையா இருக்கு. புவனா அதிர்ஷ்டசாலி... சார்.. என் தோழியின் புருஷனான நீங்க எனக்கும் தோழர்தான்...' என்றாள்.

ஒரு மாதத்துக்குப் பிறகு... ஞாயிற்றுக் கிழமை ..

புவனாவுடன் கலா போனில் பேசினாள் வீட்டுக்கு வருவதாக...

''ஸாரி கலா... நானும் அவரும் அவசரமா வெளியூர் போறோம்... வர ஒரு வாரம் ஆகலாம். நான் அப்புறமா பேசறேனே...'' என்று பட்டென்று போனை வைத்து விட்டாள் புவனா...

''என்ன புவனா... நாம எங்கே வெளியூர் போறோம்...?'' அப்பாவித்தனமாய்க் கேட்டான் பத்மனாபன்.

''அந்த கலா நம்ம வீட்டுக்கு வருவதை அவாயிட் பண்ணத்தான் அப்படிச் சொன்னேன். என்ன சொன்னா அவ அன்னிக்கு... நீங்க எனக்குப் புருஷன் மட்டுமில்லையாம். அவளுக்கும் நண்பனாம்... அது எனக்குப் பிடிக்கலே... அதான் கட் பண்ணிட்டேன்...''

''ஃபோனையா...? நட்பையா?...'' சிரித்தான் பத்மனாபன்.

''சும்மாயிருங்க...'' சீறினாள் புவனா. ●



60 வருடங்கள் காத்திருந்த புத்தகம்!

ஒரு புத்தக விழாவை எப்படி நடத்த வேண்டும்? சமீபத்தில் தாஜ் கன்னிமாராவில் நடந்த 'ஹிந்து' பத்திரிகையை தோற்றுவித்தவரான கஸ்தூரிரங்க ஐயங்காரின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டு விழா சிறந்த உதாரணம்.


குறித்த நேரத்தில் விழாவை ஆரம்பித்து, குறித்த நேரத்தில் முடித்தார்கள். முகஸ்துதி எதுவுமின்றி புத்தகத்திலுள்ள குறை நிறைகள் அலசப்பட்டன.

1905ல் நஷ்டத்தில் இயங்கி வந்த ஹிந்து பத்திரிகையை அப்பொழுது வக்கீலாகப் பணியாற்றிய கஸ்தூரிரங்க ஐயங்கார் விலைக்கு வாங்கி சீர்தூக்கி நிறுத்தியிருக்கிறார். "நெஞ்சுரத்தோடு ஆங்கிலேய அரசுடன் அவர் போராடியது பத்திரிகையாளர்களுக்கான சிறந்த பாடம்" என்றார் விழாவில் பேசிய சோ.

சுந்தரராகவன் என்பவரால் 1930களில் எழுதப்பட்ட இப்புத்தகம், 1946ல் அவர் மறைந்த பிறகு அவர் வீட்டுப் பரணில் ஏற்றப்பட்டது. அவரது சகோதரர் கே.எல்.என்.ராகவன் யதேச்சையாக பரணில் எதையோ தேடும்பொழுது இந்தப் புத்தகம் கண்ணில் பட, பத்திரப்படுத்தியிருக்கிறார். ஒரு சுப தினத்தன்று 'அல்லயன்ஸ்' ஸ்ரீனிவாசன் இவரிடம் கஸ்தூரிரங்க ஐயங்கார் பற்றி விசாரிக்க... 'குப்'பென்று உற்சாகமாகி பரணிலிருந்து புத்தகக் கட்டை எடுத்துத் தந்திருக்கிறார் கே.எல்.என். இது நடந்தது 1980ம் ஆண்டு. அதன் பிறகும் விமோசனம் வரவில்லை. கஸ்தூரிரங்க ஐயங்கார் வாழ்க்கை வரலாற்று நூலில் ஏராளமான வடமொழி வார்த்தைகள் இருந்ததால் அதைத் திருத்தம் செய்தவர் இடையில் காலமாகிவிட, பல வருட போராட்டங்களுக்குப் பிறகு, கஸ்தூரிரங்க ஐயங்கார் ஹிந்துவை புதுப்பித்து சரியாக, நூறு ஆண்டுகள் கழித்து வெளியிடப்பட்டிருக்கிறது.

- நீலாவள்ளி





தலை கவிழ்ந்த ரஜினி!

'ரேம்ப் ஷோ' என்றால் பூனை நடையில் அழகிகள் ஒய்யாரமாகக் கை வீசி நடந்து வருவார்கள். போனால் போகிறதென்று இந்த விளையாட்டில் சில சமயம் ஆண்களையும் சேர்த்துக் கொள்வார்கள்.

'ஸ்டைல் ஆன் எவ்ரிடே... வொர்க் ஷாப்' என்றொரு நிகழ்ச்சி பார்க் ஷெரட்டனில் நடந்தபோது பலருக்கும் மயிர்க் கூச்செறிந்தது. 'ரேம்ப் ஷோ' என்று சொல்லிக் கொண்டு ஆண்கள் மட்டுமே தலைமுடியைச் சிலுப்பி மேடையில் வந்து வந்து சென்றனர். அதே இடத்தில் ஆண் மாடல்களுக்கு, சிகையலங்காரம் செய்து அவர்களை பூனை நடைக்குத் தயார்படுத்திக் கொண்டிருந்தார் ஒரு பெண்.

ஆரிய முகம். அதற்கேற்ற வித்தியாசமான பெயர். மணிப்பூர்வாசி. மும்பையில் ஃபேஷன் படிப்பு. தீவிரவாதம் தலை தூக்கும் மணிப்பூரில் பிறந்ததாலோ என்னவோ அமைதியான சென்னை இவருக்குப் பிடித்துப் போய் இங்கேயே செட்டிலாகிவிட்டார். சென்னையில் பிரபல ஹேர் - ஸ்டைலிஸ்ட் ரேய்ச்சல் தான் முந்தைய வரிகளின் பில்ட்-அப்களுக்குச் சொந்தக்காரர்.

''மும்பையில் மக்கள் ரொம்ப மாடர்னாயிட்டு வர்றாங்க. ஆனா சென்னை மக்கள் என்னதான் ஃபேஷனா செஞ்சாலும் அவங்க கலாசாரம் கெடாமல் பார்த்துகிறாங்க. ஸோ நைஸ் யூ நோ! இப்போ சினிமா, டீ.வி. பார்த்து பசங்க எல்லாம் முடியைக் கலரிங் பண்ணிக்கறாங்க. கம்ப்யூட்டர் உதவியோடு விதவிதமான ஹேர் ஸ்டைல் வைச்சுக்கிறதுதான் இன்னைக்கு ஃபேஷன்'' என்கிறார். ரஜினி, ஜெயம் ரவி, பிரசாந்த் போன்ற தமிழ் சினிமா பிரபலங்கள் பலர், இவர்முன் தலை கவிழ்ந்திருக்கிறார்கள், பதறாதீர்கள், எல்லாம் முடி வெட்டுவதற்காகதான்!

ரஜினி என்றதும்தான் தாமதம், வாயைப் பிளக்கிறார். ''ரஜினி இவ்வளவு சிம்பிளா இருப்பார்னு எதிர்பார்க்கவேயில்லை. என்னை ரொம்ப உற்சாகப்படுத்தினார் தெரியுமா?'' என்றவரிடம் ரஜினிக்கு முடிவெட்ட எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டீர்கள்'' என்றால், ''ரொம்ப சீக்கிரமே முடிச்சுட்டேன்'' என்று சிரிக்கிறார்.

''சரி, உங்களிடம் முடி வெட்டுவதற்கு எவ்வளவு சார்ஜ் பண்ணுவீர்கள்?''

''அதிகமில்லை ஜென்டில்மேன். குறைந்தபட்சம் ஐந்நூறு ரூபாய்தான்'' என்கிறார் கூலாக.

- ச.ந.கண்ணன்

காதலிக்க மாட்டோம்!

ஒரு குட்டிச் செடியில் ஒரு குட்டிப் பூ பூத்துவிட்டால்கூட பெரிய திருவிழா போல் கொண்டாடுபவர்கள் ஜப்பானியர்கள். தும்மி, தும்மினால்கூட அதை ஹைக்கூவில் அழகாகப் பதிவு செய்துவிடுவதில் ஜப்பானியர்களை அடித்துக்கொள்ள ஆளில்லை. எல்லாம் சரிதான். ஆனால் காதலில் மட்டும் ஏன் இந்தக் கஞ்சத்தனம் என்றுத் தெரியவில்லை.

காதலிக்கும் இளம்பெண்களின் எண்ணிக்கை ஜப்பானில் குறைந்துகொண்டே வருகிறதாம். இத்தனைக்கும் ஜப்பானிய அப்பாக்கள் காதலர்களுக்கு எதிராக அரிவாளை எல்லாம் தூக்குவதில்லை. தமிழ்ப் படங்கள் கூட அவ்வளவாகப் பார்ப்பதில்லை. இருந்தாலும் அசடு வழிந்து கொத்துக் கொத்தாக பூக்களைக் கொண்டு வந்து நீட்டும் இளைஞர்களை கிமோனோ அணிந்த புறங்கையால் ஒதுக்கி விட்டுப் போயே போய்விடுகிறார்கள்.


இதுக்கு எதுக்கு இவ்வளவு பெரிய அலட்டல்? காதலிக்காவிட்டால் ஜப்பான் என்ன குறைந்தா போய்விடும் என்று கேட்கிறீர்களா? ஆமாம் குறைந்துதான் போயிருக்கிறது. ஜப்பானின் மக்கள் தொகை குறைந்து கொண்டே வருகிறது.

'யாரங்கே! இளம் பெண்கள் ஏன் காதலிக்க மறுக்கிறார்கள் என்று இப்பொழுதே தெரிந்தாக வேண்டும்'



என்று ஜப்பானிய அரசாங்கம் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருக்கிறதாம்.

- மருதன்



இளமை கல்கி

ஹாரியை வீழ்த்திய ஹன்ஸி!

ஹான்சி குரோனியே... கிரிக்கெட் வாழ்க்கையில் கலக்கியவர்... கிரிக்கெட் மேட்ச்பிக்சிங் பிரச்னை என்றதும் கலங்கியவர்... அகால மரண மடைந்து கிரிக்கெட் ரசிகர்களின் நெஞ்சங்களைக் கலக்கியவர்... இப்போது இறந்தும் கலக்கிக் கொண்டுள்ளார்...

The Hansie Cronje Story : An authorised Biography' என்று வெளிவந்துள்ள குரோனியேவின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் விற்பனையில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது.

கார்த் சிங் என்பவரால் எழுதப் பட்ட இந்தப் புத்தகம் ஜூலை 22ல் தென் ஆப்பிரிக்காவில் வெளியிடப்பட் டது. வெளியிடப்பட்ட முதல் வாரமே நான் ஃபிக்ஷனில் நெம்பர் ஒன் இடத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. இப்போது மறு... மறு... மறு பதிப்பாகிக் கொண்டுள்ளது. எல்லாவற்றையும் விட ஆச்சரியமான விஷயம் உலகையே மயக்கிப் போட்டிருக்கும் ஹாரி பாட்டரின் - அரை ரத்த இளவரசன் புத்தகத்தின் முதல் வார விற்பனையைத் தூக்கிச் சாப்பிட்டு விட்டதாம் குரோனியே வின் புத்தகம்.


உலகம் முழுவதும் பல நாடுகளில் இருந்து புத்தகத்துக்கு ஆர்டர் செய்துவிட்டுக் காத்திருக்கிறார்கள். அப்படி என்னதான் இருக்கிறது புத்தகத்தில்?

"நடந்ததைப் பற்றி அதிகமாகத் தெரிஞ்சது எனக்குத்தான். இந்தப் புத்தகம் ஹன்சி குரோனியேவின் வாழ்க்கையை ரொம்ப அழகாக, ஆழமாகப் படம் பிடிச்சுக் காட்டுது." என வியக்கிறார் சக வீரரான ஜான்ட்டி ரோட்ஸ்.

குரோனியேவின் டீமில் இருந்தவர்களில் புத்தகத்தைப் பற்றி வாய் திறந்திருப்பவர் ரோட்ஸ் மட்டுமே! வேறு யாரும் புத்தகத்தை வாங்கிக்கூடப் பார்க்கவில்லையாம். இந்த விஷயமே புத்தகத்தைப் பற்றிய எதிர்பார்ப்பை பல மடங்கு ஏற்றியுள்ளது.

நம்ம அசாருதீன், பாகிஸ்தானின் சலிம் மாலிக் - இந்தப் புத்தகத்தைப் படிச்சிருப்பாங்களா?

- முகில்




தணிக்க முடியுமா?

இரு வாரங்கள் முன்புதான் சுந்தர ராமசாமியின் 75-ம் ஆண்டு பூர்த்தியை மிகவும் சிறப்பாக நடத்த நண்பர்கள் திட்டமிட்டபடி இருந்தார்கள். சேலத்தில் 'காலச்சுவடு' முக்கிய பங்கேற்ற கருத்தரங்கு. அங்கு 'தமிழ் - இனி 2000' மாநாட்டுக் கட்டுரைகள் தொகுப்பு வெளியிடப்பட்டது. 'தமிழ் இனி 2000' நூலில் ஏராளமானோர் பங்கு பெற்றிருக்கிறார்கள். பலர் உழைத்திருக்கிறார்கள். அவர்கள் அநேகமாக எல்லாரும் சேலம் கருத்தரங்குக்கு வந்திருந்தார்கள். எழுத்து, இலக்கியம் போன்ற பூடக விஷயங்களில் ஐந்தாண்டு உறவு மிக நீண்ட காலம். சுந்தர ராமசாமி மீது அவ்வளவு பேருக்கும் தொடர்ந்து ஆழ்ந்த அன்பும் அக்கறையும் இருந்து வந்திருக்கிறது. அக்டோபர் மாதம் 14ம் தேதி இரவு அமெரிக்காவில் சுந்தர ராமசாமி பூதவுடலைத் துறந்தார் என்று அறிந்து துடித்துப் போயிருப்பார்கள்.


சுந்தர ராமசாமி தொடக்கத்தில் முற்போக்கு அணி என்று கூறிக் கொள்வோருடன்தான் தன்னை அடையாளப் படுத்திக்கொண்டாலும் 1950 - 60 ஆகிய பத்தாண்டுகளில் உருவான இரண்டே இரண்டு நல்ல எழுத்தாளர்களில் ஒருவர் என்று க.நா. சுப்பிரமணியத்தால் மதிப்பிடப்பட்டார். (இன்னொருவர் ஜெயகாந்தன்)

அவருடைய முதல் நாவலாகிய 'ஒரு புளிய மரத்தின் கதை' ஒருமுறை தொடங்கி, நிறுத்தப்பட்டு, மீண்டும் எழுதி முடியப் பெற்றது. நவீன தமிழ் இலக்கியத்தில் 'ஒரு புளிய மரத்தின் கதை' நாற்பதாண்டுகளில் பல பதிப்புகள் வெளிவந்து நிரந்தர மைல்கல்லாகிவிட்டது. பின்னர் ராமசாமி எழுதிய 'ஜே.ஜே. சில குறிப்புகள்' ஒரு சிறு புரட்சியே தோற்றுவித்தது. ராமசாமி படைப்பிலக்கியம் மட்டுமின்றி விவாதங்களிலும் மிகுந்த தீவிரத்துடன் கலந்து கொள்வார். இந்த ஆண்டு தொடக்கத்தில் ஏதோ சர்ச்சை எழுந்தபோது 'இதற்குத் தயவு செய்து பதிலெழுதாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டேன். நான் அவருக்கு எழுதிய கடைசிக் கடிதமும் அதுதான்.



சுந்தர ராமசாமி அவருடைய குடும்பத்தினர் மீது அபார அன்பு கொண்டவர். அவர்களும் அவரைக் கண்ணிமை போலக் கருதுவார்கள். சம்பிரதாயமாகத் தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பு என்று நான் கூறிவிடலாம். ஆனால் என்னைத் துடிதுடிக்க வைப்பது அவருடைய மனைவியும் மகனும் மகள்களும் படும் துயரம்தான். அதை யாரால், எப்படித் தணிக்க முடியும்?

அசோகமித்திரன்



குண்டக்க... மண்டக்க...

பார்த்திபன்கிட்டே மாட்டிக் கொண்டு வடிவேலு 'முழிமுழி'ன்னு விழிக்கிறது ரொம்ப பாப்புலரான மேட்டராகி விடவே அப்படியே அல்வா கணக்கா அந்த ஜோடியை வைச்சு, காமெடி, ஃபேமிலி, மசாலா கலவையாக ஒரு கைமா படத்தை எடுத்திருக்கிறார் இயக்குனர்.

விவரமாக காமெடி ஜோடியைத் தேர்ந்தெடுத்தவர்கள் கதையையும் அதே ரூட்டில் செலுத்தியிருக்கலாம். ஆதி காலத்து அண்ணன் - தங்கை பாசக் கதையைப் பிழிந்து, கூடவே காமெடி அபிஷேகமும் செய்ய, திணறல் ஏற்பட்டு... விட்டால் போதும் என்கிற நிலைமைக்குப் போய் விடுகிறார்கள் டரிதாபமான ரசிகர்கள்.

தம் தங்கைக்கு பணக்கார மாப்பிள்ளையைக் கட்டி வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிற பார்த்திபன், ஒரு ஃபோர்ட்வெண்டி. அவர் தோஸ்து வடிவேலு, எய்ட் ஃபார்ட்டி. ஆட்டோகிராஃபில் அசத்திய மல்லிகா, நாளடைவில் தமிழ் சினிமா ஹீரோக்களுக்கான தங்கையாக முத்திரை குத்தப்பட்டிருப்பது த்சொ... த்சொ! கவர்ச்சி நாயகி லக்ஷ்மிராய், இப்படியே தொடர்ந்தால் தமிழ்சினிமாவில் அவருக்கு அவுட் பாஸ் நிச்சயம்.

டாப்டென் ஆர்த்தியின் டீ.வி.எஸ். 50 வண்டியைத் திருடிய பாவத்துக்கு, அந்தப் பெண்ணின் குண்டு குடும்பத்துக்கே நாஸ்டா வாங்கிப் போட்டு வடிவேலு நடுத்தெருவுக்கு வரும் காட்சி மட்டும் இலேசாகச் சிரிக்க வைக்கும்.

கதை சொல்லும் நேர்த்தியிலும் டெக்னிக்கல் ஜாலத்திலும் (!) இந்தப் படம் பின்னோக்கியே சென்றிருக்கிறது. நகைச்சுவைக் காட்சிகளில் லாஜிக் கழன்றால் பரவாயில்லை; மூளையையே கழற்றி வைக்கச் சொன்னால் எப்படி?

- லஜ்ஜாவதி





கெட்டிமேளச் சத்தமா
வேட்டு வைக்கும் தீவாலியா
பாட்டு கேட்கும் பொங்கலா
ஒட்டு மொத்த ஊருமே
இங்கு வந்து கூடுமே...
திருச்சி சாரதா'ஸ்..!
SK-307
SK-308
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:28521177.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

